

# சஜித்தை வெற்றிகரமாகத் தோற்கடித்த ரணில்

05



# ஆரம்பமாகும் அச்சத்தின் ராஜ்ஜியம்

03

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் இனங்களுக்கிடையிலான பிளவுகளையே கோடிட்டுக் காட்டுகின்றன



07







# மீள்பார்வை

මීල්පාර්වෛ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/116/NEWS/2019 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 427 • 22 நவம்பர் 2019 வெள்ளிக்கிழமை • ரபீஉல் அவ்வல் 1441 • விலை 40.00









# எதிர்க்கட்சித் தலைவருக்கும் ரணில் போட்டி

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டு 55 இலட்சம் வாக்குகளைப் பெற்ற முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு, எதிர்க் கட்சித் தலைவர் பதவியை பெற்றுக்கொடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குமாறு கோரிக்கை விடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியவசம், சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதைத் தொடர்ந்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தவிசாளர் கபீர் ஹாசிம், ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் 45 உறுப்பினர்கள், சஜித் பிரேமதாசவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு வலியுறுத்தியுள்ள கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

(பக். 12)

## சஜித் அணியிடமிருந்து புதிய கட்சி



ஆக்கபூர்வமான சீரமைப்புக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நடக்காவிட்டால், புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் சஜித் பிரேமதாச தலைமையில் புதிய கட்சியொன்று உருவாக்கப்படும் என முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (பக். 12)

## சிந்தனைப் பயங்கரவாதம் கவனமாகக் கையாளப்பட வேண்டும்



சிந்தனைப் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம், இராணுவப் பாதுகாப்பு வழங்குவதற்கும் சிந்தனா ரீதியிலான எதிர்நடவடிக்கைக்கும் இடையில் சமநிலை பேணி நடத்தப்பட வேண்டும் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் சாந்த கோட்டகொட தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் (பக். 12)



## அடுத்த தவணையில் போட்டியிட்டால் சஜித் வெல்வார்

சஜித் பிரேமதாச இம்முறைய தேர்தலில் போட்டியிட்டு அவசரத்தைக் காட்டிவிட்டார். இன்னும் ஐந்து வருடங்களின் பின்னரான தேர்தலில் போட்டியிட்டால் அவரால் நிச்சயமாக வென்றிருக்க முடியும் என ஐக் கிய பிக்கு முன்னணியின் செயலாளர் போபிட்டிய தம்மிஸ்ஸர தேரர் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். (பக். 14)

## அரசுடன் த.தே. கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தும்



வடகிழக்கில் உள்ள தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து தங்கள் பலத்தை தேசியத்திற்கும், சர்வதேசத்திற்கும் நிரூபித்து காட்டியிருக்கிறார்கள். தமிழ் மக்கள் இந்த நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து இற்றைவரையும் ஒருமித்த எண்ணத்தையும் சிந்தனையும் கொண்டவர்களாக பயணித்துக்கொண்டிருக்கிறார்கள்.

(பக். 14)

## குற்றஞ்சாட்டப்பட்டவர் ஜனாதிபதியாக வந்துவிட்டார் என்பதற்காக அழுத்தங்களை விடப்போவதில்லை

சிங்கள பௌத்த வாக்குகளை மட்டும் பெற்றவர்கள் என்ற நிலையில் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ இருப்பதானது, அவருக்கு ஒரு இழுக்கான விடயம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் பிபிசிக்குத் தெரிவித்துள்ளார். (பக். 12)



## நாட்டின் பாதுகாப்பு குறித்து முன்னரை விட எச்சரிக்கையாக இருங்கள்

- பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்



நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் முன்னரிலும் பார்க்க எதிர்வரும் நாட்களில் மிகவும் எச்சரிக்கையாகவும் அவதானத்துடனும் செயல்படுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டி. விக்கிரமரட்னவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில், அண்மையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள (பக். 14)

## பிக்குகள் அமைதியாகவும் கவனமாகவும் வேலை செய்தனர்



கோதாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்காக பௌத்த பிக்குகள் அமைதியாகவும் கவனமாகவும் வேலை செய்தனர். ஜனாதிபதி ராஜபக்ஷ எளிமையான, நேர்த்தியான, சிறந்த வாழ்க்கைப் போக்கை உடையவர். (பக். 14)

## ஜனாதிபதி என்பதால் வழக்கிலிருந்து விடுதலை



ஜனாதிபதியினதும் பிரதமரினதும் தந்தையான டி.ஏ.ராஜபக்ஷவின் பெயரில் ஞாபகார்த்த நூதனசாலை நிர்மாணிப்பதில் அரசுக்குச் சொந்தமான 3 கோடி 39 இலட்சம் ரூபா நிதியைப் பாவித்தமை உள்ளிட்ட குற்றச் சாட்டுக்களில் இருந்து முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதியுமான கோதாபய ராஜபக்ஷவை உயர்நீதிமன்றம் நேற்று விடுவித்துள்ளது. சம்பத் அபயகோன், சம்பத் விஜயரத்ன, சம்பா ஜானகீ ராஜரத்ன ஆகிய மூவரடங்கிய விசேட நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது. (பக். 14)

## புதிய ஆளுநர்கள் தெரிவு வடமேல் மாகாணத்துக்கு முஸம்மில்



புதிய அரசாங்கத்தின் ஆறு மாகாணங்களுக்கான ஆளுநர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டனர். மேல் மாகாண ஆளுநராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த ஆளுநர் எம்.ஜே.எம். முஸம்மில் வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(பக். 14)

## நல்லிணக்க அலுவலில் இருந்து சந்திரிகா விலகினார்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் ஆட்சியில் தாபிக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் தலைமைப்பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விலகியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தாபய ராஜபக்ஷ அவர்களுக்கு வாழ்த்துக்கள்

அப்துல் ஸமத் முஹம்மத் அக்ரம்



இவரது வெற்றிக்கு தனித்து தேர்தல் கால வாக்குறுதிகளும் நாடு தழுவிய பிரச்சாரங்களும் மாத்திரம் காரணமாக வில்லை. 60% க்கும் அதிகமான சகோதர பெரும்பான்மை மக்களிடம் சுமார் ஒரு தசாப்தமாக படிப்படியாக ஒரு கருத்து விதைக்கப்பட்டு வந்த்து. அதற்கு இன வாதம் என்றோ மதவாதம் என்றோ அல்லது வேறு எந்தப் பெயராவது வைத்துக் கொள்ளலாம். அதன் சரி பிழை பற்றி இங்கு நான் விவாதிக்கவில்லை. ஆனால் சாதாரண ஒவ்வொரு பொது மகனது மனக் கட்டமைப்பிலும் ஒரு மாற்றம் நிகழ்த்தப்பட்டது. அந்த mission இவராலும் இவரது கட்சியினராலும் திறமையாக நிர்வகிக்கப்பட்டது. ஒவ்வொரு தனிமனிதனையும் ஒவ்வொரு வீட்டையும் நோக்கி அது எடுத்துச் செல்லப்பட்டது. வெற்றியின் இரகசியம் இந்தப் புள்ளியில்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

''பரந்து மக்களை நோக்கி நிகழ்த்தப்பட்ட கருத்து மாற்றத்தை திறமையாக நிர்வகித்தமை''

எனவே இனவாதமோ ஜனநாயகமோ என்பது மாத்திரம் வெற்றிக்கும் தோல்விக்கும் காரணமல்ல, ஒரு missionக்குத் தலைமை வழங்கி, அதனை மக்கள் மயப்படுத்தும் ஆற்றல் மிகவும் முக்கியமானது. அதிலே கோத்தாபய வெற்றி பெற்றுள்ளார். இவருடன் போட்டியிட்ட ஏனைய அனைவரிடமும் இந்த இடைவெளி முக்கியமானதொரு பலவீனம் என்று நினைக்கிறேன்.

இதுவும் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பாடம்தான்.




## சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை

### சஜித் பிரேமதாச



இனவாதத்தை ஒழிப்பேன், சகல மத மக்களையும் சமமாய் வாழவைப்பேன் என நீ கூறிய வார்த்தைகளை வாக்குறுதியாக நம்பினோம் நாங்கள். எங்களை நம்பவைக்க நீ தந்த உத்தரவாதம் உன் சமூகமே உன்னை வெறுக்கக் காரணமாய் போனது தான் விதி.

நீ எங்களை ஜனாதிபதியாக ஆளவில்லை, பிரதமராகக் காக்கவில்லை. ஆனால் இலங்கை சரித்திரத்தில் எவரும் பெறாத வரமாக முஸ்லிம் மக்களின் மனதை வென்று விட்டாய். 90% சதவீதத்துக்கு மேற்பட்ட முஸ்லிம், தமிழர் மக்களின் மனதில் வாழப் போகும் முதல் சிங்கள தலைவன் நீ மட்டும்தான்.

நீ நினைத்திருந்தால் சென்ற வருடமே எந்தத் தேர்தலுமே இல்லாமல் மைத்திரியின் விருப்பப்படி பல வருடம் பிரதமராக இருந்திருக்கலாம், ஜனநாயகத்தையும் மனிதாபிமானிகளையும் நம்பித் தோற்றுவிட்டாய். மனித நேயமுள்ளவர்களின் வாக்கின் அடிப்படையில் நீ வென்றுவிட்டாய், இந்த இனவாதிகள் கூட்டம் இனி எக்கேடு கெட்டால் நமக்கென்ன.

வளமாய் வாழ மனதார வாழ்த்துகிறோம் என்மக்கள் சார்பில் நான்.

- நஸ்ரின் நிசாம்தீன்

# எல்லை மீறிய பிரச்சார (விளம்பர) உத்திகளால் களவாடப்படும் வாக்குகள்

அர்பான் ஹஜ்ஜுல் அக்பர்



வாக்களித்தல் எனும் ஜனநாயக உரிமையின் பிரகாரம் ஒவ்வொரு பிரஜையும் தனது சுயவிருப்பின் பேரில் தான் விரும்பிய வேட்பாளருக்கு தனது வாக்கை வழங்கலாம். ஆனால் நுகர்வின் போதான சுயவிருப்பு உரிமை எப்படி விளம்பரங்களால் களவாடப்படுகிறதோ அவ்வாறே மக்களின் வாக்களிக்கும் சுய விருப்பும் எல்லை மீறிய பிரச்சார (விளம்பர) உத்திகளால் களவாடப்படுகிறது. சுய சிந்தனையுடன், அறிவுபூர்வமாக சகலதையும் சீர்தூக்கிப் பார்த்து வாக்களிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்காத வரையில் இந்நிலை தொடரத்தான் போகிறது.

தோல்வியடைந்த வேட்பாளருக்கு வாக்களித்தவர்கள் வெற்றி பெற்ற வேட்பாளருக்கு வாக்களித்தவர்களை எப்படி நோக்குகிறார்கள் என்பதும், வெற்றி பெற்ற வேட்பாளருக்கு வாக்களித்த 52% மான வாக்காளர்களும், ஏனைய வேட்பாளர்களுக்கு வாக்களித்த 48%மான வாக்காளர்களையும் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதும் மிக முக்கியமாக கவனத்திலெடுக்கப்பட வேண்டிய அம்சம்.

இருதரப்பு வாக்காளர்களும் பரஸ்பரம் ஒருவரையொருவர் இனவாத வாக்காளர்களாகவே கருதுகின்றனர். திரு. கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியை சிங்கள பேரினவாதத்தின் வெற்றியாக ஒரு தரப்பு சித்தரிக்கின்ற அதே வேளை திரு. சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்தவர்களை சிறுபான்மையின் இன வாதத்துக்கு கிடைத்த தோல்வியாக மறுதரப்பு சித்தரிக்கின்றது.

இறுதி அர்த்தத்தில் இரண்டும் இனவாதத்தின் இரண்டு முகங்களேயன்றி வேறில்லை. இங்கு நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். சஜித் பெற்றுக் கொண்ட 5.5 மில்லியன் வாக்குகளில் முக்கால்வாசி வாக்குகள் சிங்கள மக்களின் வாக்குகளே! வெறுமனே சிறுபான்மையினர் மாத்திரம்தான் சஜித்துக்கு வாக்களித்தார்கள் என்று வைத்துக் கொண்டாலும் கூட, அது அவர்களது ஜனநாயக உரிமையே அன்றி இனவாதமல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அப்படியென்றால், சஜித்தின் வாக்குகளில் பெரும்பான்மையானவை சிங்கள மக்களின் வாக்குகளாக இருக்கின்ற போது அதனை எப்படி சிறுபான்மையின் இனவாதமாகச் சித்தரிக்க முடியும்?!

வாக்களிப்பு நிலையங்களில் சுதந்திரமான வாக்களிப்பு உத்தரவாதப்படுத்தப்பட்டாலும் கூட, எமது அரசியல் கலாச்சாரம், நாம் விரும்பியவருக்கு வாக்களிக்கும் பூரண சுதந்திரத்தை எம்மிடமிருந்து பறித்தெடுத்திருக்கிறது. அதனால்தான் 'தனக்கு விருப்பமான தெரிவையே அனைவரும் மேற்கொள்ள வேண்டும்' என்ற பாசிஸ உணர்வு அனைவருக்குள்ளும் மேலோங்கியிருக்கிறது.

ஜனநாயகத்தின் சிறப்பியல்பே 50% + 01 என்பதுதான். 100%மும் தனக்கு மட்டுமே வேண்டும் என்று எதிர்பார்ப்பது சர்வாதிகாரத்தின் இயல்பாகும். பெரும்பான்மையான மக்களின் தெரிவை மனதார ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை தோல்வியடைந்தவர்களும், தோல்வியடைந்தவர்களின் தெரிவை அவர்களது ஜனநாயக உரிமையாக அங்கீகரிக்கும் பக்குவத்தை வெற்றி பெற்றவர்களும் தமக்குள் வளர்த்துக் கொள்ளாத வரையில் நாட்டில் சுபீட்சத்தை எதிர்பார்க்க முடியாது.

நாட்டின் ஏழாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் இந்த நாட்டின் இரண்டு கோடி பிரஜைகளின் ஜனாதிபதியாகவே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். தனக்கு வாக்களிக்காதவர்கள் ஏன் தனக்கு வாக்களிக்கவில்லை என்று சிந்திக்கின்ற கடமை ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அதே நேரம் 52%மான மக்களின் வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவது எப்படி என்பதை ஏனையவர்கள் சிந்திக்க வேண்டிய கடமையும் இருக்கின்றது.

இன, மத, வர்க்க அடையாளங்கள் முன்னிலைப்படுத்தப்படாத ஓர் அரசியல் கலாச்சாரத்தை இந்த நாட்டில் காண வேண்டும் என்பதே எனதும் இலங்கையர் அனைவரினதும் பேரவா. மதிப்புக்குரிய கோட்டாபய ராஜபக்ஷ அவர்களது ஆட்சிக் காலத்திலாவது அது சாத்தியப்படுமா?! காலம் பதில் சொல்லட்டும்.

நாட்டின் ஏழாவது நிறைவேற்றதிகாரமிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள திரு. கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

# தவறு எந்தப் பக்கம்?

## ஏன் 30% சிங்கள வாக்குகளைக் கூட சஜித்திற்கு பெற முடியவில்லை?

இன்ஸாப் டீன்



முடிவுகள் விரிசலாக இருந்தாலும் வட கிழக்கு சிறுபான்மையினர் 85% இற்கும் அதிகமான வாக்குகளை வழங்கி சஜித்தை வெற்றி பெறச் செய்து துரோகிகள் என்ற பட்டத்தை சுமந்து விட்டனர். அவர்கள் பெற்றுக் கொடுத்த கிட்டத்தட்ட 800,000 இற்குக் அதிகமான வாக்குகளை ஏன் தெற்கில் உள்ள சஜித் சார்பு சிங்களவர்களால் காப்பாற்ற முடியவில்லை. உங்களது இயலாமையால் வட கிழக்கு மக்கள் துரோகிகளாகப் பார்க்கப்படுகிறார்கள். மஹிந்த தரப்பு எவ்வளவோ வாக்குகளை அள்ளி வீசியும் அவர்கள் சஜித் பக்கமே சாய்ந்து மீண்டும் 2015 இனைப் போல் ஒரு சிறந்த வெற்றியை பெற்றுத் தருவதற்கு அத்திவாரத்தினை இட்டனர்.

ஆனால் தெற்கில் 30% சிங்கள வாக்குகளைக் கூட பெறுவதற்கு சஜித் என்ற பிரேமதாசவின் மகனால் முடியவில்லை. அவர் பெற்றது கிட்டத்தட்ட 25%. இதனை 35% ஆக அதிகரித்திருந்தால் சஜித்தினால் வெற்றிபெற்றிருக்கலாம். சஜித் சார்பு சிங்கள அரசியல்வாதிகள் இதனைப் பெரிதாக பொருட்படுத்தவில்லை. மிகவும் சிலரே பாடுபட்டனர். சஜித் என்ற தனிநபரே அதிகம் கஷ்டப்பட்டார். மிகவும் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலரே அவருக்கு பக்க பலமாக இருந்தனர். ஏனைய பலர் கூட்டங்கள் கூட ஏற்பாடு செய்யவுமில்லை பங்கு பற்றவும் இல்லை. ரணில் கூட பெரிதாக ஈடுபடவுமில்லை. சம்பிக ரணவக கூட அவரின் எல்லைக்கு வெளியே பெரிதாக கஷ்டப்படவுமில்லை. சஜித்தை திட்டமிட்டு குழிக்குள் தள்ளியது போன்று தான் இருந்தது.

மறுமுனையில் கோத்தாவின் பங்காளிகள் கிட்டத்தட்ட 3 வருடங்களுக்கு முன்னரே தமது பிரச்சாரத்தினை ஆரம்பித்து விட்டார்கள். சிங்களவர்களை மூளைச் சலவை செய்கின்ற பணிகளை தேவாலயங்கள் மூலமாகவும் சில இனவாதிகள் மூலமாகவும் ஹிரு, தெரன போன்ற மீடியாக்கள் மூலமாகவும் செவ்வனே செய்து வந்தார்கள். அப்படிச் சென்று கொண்டிருந்த போதுதான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல், பிறகு டொக்டர் ஷாபியினுடைய விடயம் என்பன போன்ற பல விடயங்கள் ஏற்பட்டன. இவை மிகவும் அழகாக மேற்கூறப்பட்ட ஊடகங்கள் மூலம் சிங்கள மக்களிடம் காட்சிப்படுத்தி அவர்களது உள்ளங்களை திசை திருப்பினர். இவை அவர்களது மனதில் மிகவும் ஆழமாகப் படிந்தன.

சிங்கள இனம் பாதுகாக்கப்பட வேண்டும், சிங்களவர்களுக்கு இருக்கக் கூடிய ஒரே பௌத்த நாடு பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோஷங்கள் பரவலாக எழுந்து மகாநாயக்க தேரர்கள் கூட எமது இனத்தைப் பாதுகாப்பதற்கு உங்கள் வாக்குகளைப் பயன்படுத்துங்கள் என்ற போதனைகள் வழங்கப்பட்டன. சிங்களவர்களைப் பாதுகாப்பதற்கு இதுவே கடைசி சந்தர்ப்பம் என்ற பிரச்சாரங்கள் தேவாலயங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் பரப்பப்பட்டன. தேர்தல் காலங்களில் ஹிரு, தெரன போன்ற மீடியாக்கள் மூலம் இவை ஊக்குவிக்கப்பட்டன.

செய்திகளைக் கூட மிகவும் திரிபுபடுத்தி சிங்கள மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. உதாரணத்திற்கு 'அர அபே ஜாதிக கீ' என்ற கருத்தை 'அராபி ஜாதிக கீ' என்று திரிபுபடுத்திக் கூறப்பட்டன. எனவேதான் நடந்து முடிந்த தேர்தலில் சாதி பேதம், துவேசம் என்பவற்றைப் பொருட்படுத்தாமல் ஒட்டுமொத்த சிங்கள மக்களும் கோத்தாவை ஆதரித்தனர்.

என்னுடன் வேலை செய்கின்ற ஒரு சிங்கள நண்பர் குறிப்பிட்டார், கோதா 10 இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்று. நான் நக்கலாக சிரித்துவிட்டு வந்தேன். ஆனால் அது இப்பொழுது உண்மையாகி விட்டது. துவேஷம் காட்டாத பல நண்பர்கள் கூட தேசிய பாதுகாப்பு என்ற காரணத்தைக் காட்டி கோத்தாவை ஆதரித்தனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இந்த அரசாங்கம் மீதுள்ள ஒரு கறுப்புப் புள்ளி. அது கிறிஸ்தவ வாக்குகளை சஜித்திடமிருந்த தூரமாக்கியது. அதன் சூத்திரதாரிகள் பற்றி நாம் சொன்னால் அதனை ஏற்றுக் கொள்கின்ற மனப்பான்மை பெரும்பான்மையிடம் இருக்கவில்லை. கிறிஸ்தவ பிரதேசங்களின் தேர்தல் முடிவுகள் கோத்தாவின் பக்கமே இருந்தது.

அடுத்ததாக சஜித் களத்தினை சரியாக ஆராயாமல் குதித்ததும் அவர் செய்த மிகப் பெரும் தவறு. அவர் அவசரப்பட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். களநிலவரம் பற்றிய தெளிவான ஒரு ஆய்வை அவர் மேற்கொண்டிருக்க வேண்டும். அல்லது சஜித் கட்சித் தலைமைப் பொறுப்பைக் குறைந்தது ஒரு வருடங்களுக்கு முன்னரே பொறுப்பெடுத்து களத்தினை தமக்கு சார்பாக செய்திருக்க வேண்டும். திடீரென்று அவர் குதித்தது தான் அவர் செய்த ஒரு தவறு. ரணில் தோல்வியை எதிர்பார்த்தே சஜித்திற்குக் கொடுத்திருப்பார்.

சஜித் நல்ல ஆற்றல் மிக்கவர். சிங்கள அரசியல்வாதிகளின் போதிய ஒத்துழைப்புக்கள் இன்றியும் களத்தினை சரியாக ஆராயாமலும் வீணாக தேர்தலில் குதித்து தனது கனவை அழித்துக் கொண்டார்.

# கோத்தாபய வெற்றி உணர்த்தும் படிப்பினைகள்...

பஹ்ரி அனஸ்

இலங்கையின் ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ளமை இலங்கை வித்தியாசமான பல இலக்குகளை அடையப் போகின்றது என்பதனை உணர்த்துகிறது.

சஜித் பிரேமதாசவினுடைய தேர்தல் பிரச்சாரங்கள் வாக்குறுதி அரசியலாகவே இருந்தது. இது மக்களை ஏமாற்றும் பிரச்சார முறையாகும்.

பழைய அரசாங்கம் தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை; அதற்குள் இன்னும் பல வாக்குறுதிகள் வீசப்பட்டன. வாக்குறுதிகள் பலவீனமானவை என்பதனை மக்கள் தெளிவாக விளங்கியிருந்தனர். அன்று ரணில் வெற்றிலைக்குப் பதிலாக சுவிங்கம் தருவோம் என்றார், இன்று சஜித் பெம்பஸ் தருவோம் என்கிறார்.

கோத்தபாயவின் தேர்தல் வியூகம் வித்தியாசமானது...

1. தேர்தலுக்கு முன்பாக வியத்மக, எளிய செயல்பாடுகள் மூலம் படித்த மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டார்.

2. தேர்தல் மேடையில் வேட்பாளர்களை கீழ்த்தரமாக விமர்சிக்கவில்லை.

3. தேர்தல் விஞ்ஞாபனம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, கைத்தொழில், விவசாய, கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டிருந்தது.

சஜித்துடைய குழுவில் இருந்த மிக முக்கியமான பலவீனம் யார் பிரதமர் என்பதனை அவர் தெளிவுபடுத்தவில்லை. மக்களை கவரும் செயற்பாடுகளை அவர் மேற்கொள்ளவில்லை.

முஸ்லிம்கள், தமிழர்கள் நாடு என்ற நிலையை விட்டு இன ரீதியாக செயற்பட்டமையானது மிக அதிகமான சிங்கள மக்களுடைய வாக்குகளை கோட்டா சார்பானதாக மாற்றியது.

மைத்திரியை ஆதரித்த வாக்குகள் சஜித்துக்கு கிடைக்காமைக்கான மற்றைய காரணம் முஸ்லிம், தமிழ் தனிக் கட்சிகளின் இனரீதியான தேர்தல் பிரசாரங்கள். இவை ஊடகங்களில் கடுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டன.

பயங்கரவாதி ஸஹ்ரானின் தாக்குதல். இது போன்ற நிலைமை தொடராமல் இருக்க இலங்கை மக்கள் கோட்டாவை தெரிவு செய்தனர் என்று நான் கருதுகிறேன். புதிய அரசாங்கத்துடன் சேர்ந்து தனது சமூகத்தின் நலனுக்காக மாத்திரமல்லாமல் தாய் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவி செய்வோம்.

ஒதுங்கி வாழாமல் ஒன்றுபட்டு வாழ்வோம்.

## திடங்கொள்வோம்!

மொஹமட் அஜாஸ்

இனி கொஞ்ச காலத்துக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் மௌனமாகட்டும். முஸ்லிம்கள் செறிவாக உள்ள பகுதிகளிலிருந்து முஸ்லிம் கட்சிகள் அல்லாத ஏனைய பிரதான சிங்களக் கட்சிகளிலிருந்து யாராவது தேர்தல்களில் நிற்கும் முஸ்லிம்களையோ சிங்களவர்களையோ ஆதரித்து நாடாளுமன்றம் அனுப்புவோம். கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம்கள் கட்டாயமாக அவ்வப்பகுதிகளில் செல்வாக்குள்ள யாராவது சிங்கள அபேட்சகர்களை ஆதரிக்க வேண்டியது தான். உரிமை அரசியல் இனி வேண்டாம். ஏதாவது சலுகைகள் கிடைத்தாலே போதும். எந்தக் காரணம் கொண்டும் ஆட்சி மாற்றங்களுக்கு மட்டும் ஆதரவளித்து விடக் கூடாது. இதன் பிறகு உலமா சபை, முஸ்லிம் கவுன்சில் ஆலோசனைகள் ஏதுவும் நம்மவருக்கு வேண்டியதில்லை. இனி இந்த நாட்டில் எப்படி வாழ வேண்டும் என்று பேரினச் சனங்களுக்குத் தெரிய வந்துவிடும். தாமாகவே மாறிக் கொள்வார்கள். [illegible] அனைத்தும் நன்மைக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பமாகும் அச்சத்தின் ராஜ்ஜியம்



• பியாஸ் முஹம்மத்

சிங்கள மன்னன் துட்டகைமுனு தனது கால்களைச் சுருட்டிப் படுத்திருந்தபோது அவரது தாய் ஏன் மகனே, உனது கால்களை நீட்டி ஏன் படுக்கக் கூடாது என வினவுகிறாள். அதற்கு துட்டகைமுனு, எப்படி அம்மா கால்களை நீட்டிப் படுப்பது, ஒரு பக்கம் கடல், மறுபக்கம் தமிழர்கள் என்று இருக்கும் போது நான் எப்படி சுதந்திரமாகக் கால்களை நீட்ட முடியும் எனப் பதிலளிக்கிறார்.

இந்த துட்டகைமுனு தான் பின்னர் தமிழ் மன்னன் எல்லாளனுக்கு எதிராகப் போரிட்டு எல்லாளனுடைய படையைத் தோற்கடிக்கிறார். இந்த துட்டகைமுனுவின் சிலையைத் தான் தனது பதவியேற்புக்குரிய இடமாக புதிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தேர்ந்தெடுத்திருந்தார். கொடுங்கோலனை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்ற துட்டகைமுனுவின் சிலையின் முன்னாலிருந்து எனது பதவியைப் பொறுப்பேற்பதில் நான் பெருமை அடைகின்றேன் என ஜனாதிபதி தனது கன்னி உரையில் தெரிவித்தார்.

தமிழர்களது போராட்டத்துக்கு எதிரான யுத்தம் தான் ராஜபக்ஷ குடும்பத்தினரை நாட்டு மக்கள் தலைமேல் வைத்துக் கொண்டாடும் நிலைமைக்கு ஆளாக்கியிருக்கிறது. முப்பது வருடங்களாக முடிவுக்குக் கொண்டு வரப்படாமல் இருந்த உள்நாட்டு யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்த பெருமை யுத்தத்துக்கு அரசியல் தலைமை வகித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், களத்தில் நின்று வழிநடத்திய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்காவுக்கும், பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய தற்போதைய ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவுக்கும் உண்டு. அந்த வகையில் 2009 இல் யுத்தம் முடிவடைந்தகையோடு 2010 இல் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்காவும் போட்டியிட்டனர். தற்போது யுத்த வெற்றியின் மூன்றாவது பங்காளியான கோதாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கிறார்.

ஆகவே யுத்த வெற்றி என்பது இந்த நாட்டு பெரும்பான்மை மக்களில் எவ்வளவு பாதிப்புச் செலுத்தியிருக்கிறது என்பது விளங்குகிறது. உலகில் சிங்கள மக்களுக்கென உள்ள ஒரே நாடாக சிங்கள மக்கள் இந்த நாட்டைப் பூஜிக்கிறார்கள். இந்த நாட்டை விட்டால் தமக்கு வேறு கதியில்லை என்று அவர்கள் நினைக்கின்றார்கள். உலகிலேயே சிறந்த நாடு இது என அவர்களது இதிகாசங்களும் சமயத் தலைவர்களும் அவர்களுக்கு ஊட்டி வைத்திருக்கிறார்கள். இதனால் இந்த நாடு பிளவுபடுவதை, துண்டாடப்படுவதை அவர்கள் தமது இனத்தை அழிக்கும் செயற்பாடாகவே நோக்குகிறார்கள். இதற்கான முயற்சிகளில் ஈடுபடுபவர்களை அவர்கள் ஜென்ம விரோதிகளாகவே பார்க்கின்றார்கள். இதன் அடிப்படையில் தான் சிறுபான்மை இனம் பற்றிய அவர்களது கண்ணோட்டமும் அமைகிறது.

சிறுபான்மை பற்றிய அவர்களது இந்த அச்சம் இன்று நேற்று முளைத்ததல்ல. இலங்கை மன்னர்களால் ஆளப்படும் போது மேற்கொள்ளப்பட்ட தென்னிந்தியப் படை எடுப்புக்களுடன் இந்த அச்சம் தொடர்புபடுகிறது. சேர, சோழ நாடுகள் மேற்கொண்ட படையெடுப்புக்கள் தொடர்பான ஞாபகங்கள் இன்னும் மறக்கடிக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றன. துட்டகைமுனு சிலை முன்னிலையிலான பதவியேற்பும் இதனை நினைவுறுத்தித்தான் நடைபெற்றது. சுதந்திரத்தின் போது முன்வைக்கப்பட்ட 50 க்கு 50 கோரிக்கைகள் சிங்களவர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன. பின்னர் 1960 இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைப்பதற்கு பெடரல் கட்சியை அணுகியபோது அவர்கள் சுயாட்சிக் கோரிக்கையை நிபந்தனையாக வைத்ததால் சிங்கள மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தையே உதறித் தள்ள முயற்சித்த போது, கடவுளே வந்தாலும் நாட்டை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்ற கோஷத்தை முன்வைத்தே ஐதேக தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள நேரிட்டது. இந்த எண்ணம் மேலோங்கியதனால் தான் இந்திய வம்சாவழித் தமிழரின் பிரஜாவுரிமையை பறிக்கும் நிலைக்கு ஜேஆரை ஆளாக்கியது.

83 கலவரத்துக்கு முன்னர் தமிழரின் கோரிக்கை தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்பதாகவே இருந்தது. இது தமிழினத்தின் ஆதிக்கத்தை வளர்க்கும் என்று சிங்களவர் கருதியதனால் அதனைக் கொடுக்கக் கூடாது என்பதில் அவர்கள் பிடிவாதமாக இருந்தனர். இதுவும் கூட சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் தமிழர்கள் முன்வைக்கின்ற ஆட்சியில் பங்குவகித்தல் என்ற இடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடுமோ என்ற ஐயத்தின் வெளிப்பாடாகவே அமைந்தது. வடமாகாணத்தின் முதலைமைச்சராக அரசாங்கம் தன்னை நியமித்த போது அதனைப் பயன்படுத்தி வரதராஜப் பெருமாள் தனிநாடு பிரகடனம் செய்வதற்கு எடுத்த முயற்சி தமிழர்களுக்கு கொடுக்கப்படும் வாய்ப்புக்கள் எல்லாம் நாட்டைத் துண்டாடுவதற்கே பயன்படுத்தப்படும் என்ற பிராந்தியை சிங்களவர் மனதில் ஆழமாகப் பதித்தது.

இந்த வகையில் தமிழரை அடக்கி வைக்க வேண்டும் என்ற பெரும்பான்மை மக்களின் உணர்வை அரசியல் மயப்படுத்துவதில் ஜே.ஆர். வெற்றிபெற்றார். ஜூலைக் கலவரத்தின் போது அதனை அடக்காமல் தமிழினத்தின் மீதான வெறித்தனத்தை வெளிக்காட்டுவதற்கு சிங்களவர்களுக்கு தாராளமாக இடமளித்தார். தன்னை கிறிஸ்தவர் என்றும் முஸ்லிம் என்றும் கூறு போட்டுப் பார்த்த சிங்கள மக்களுக்கு மத்தியில் தன்னை சிங்கள இனவாதியாகக் காட்டிக் கொள்வதற்கு ஜேஆருக்கு இந்தக் கலவரம் தேவைப்பட்டது. அதிலிருந்து 2015 தேர்தல் வரை தமிழரை அடக்கி வைத்திருக்கும் ஒருவரையே சிங்களவர் தலைவராகத் தெரிவு செய்தனர். 2015 தேர்தல் வித்தியாசமாக அமைந்த போதிலும் தனது தோல்விக்கு தமிழரும் முஸ்லிம்களுமே காரணம் என மஹிந்த ராஜபக்ஷ ஜன்னல் கட்டிலிருந்து தெரிவித்த வார்த்தைகள் சிங்களவர் மனதில் ஊசி போல் குத்தின. இந்தத் தவறை மீண்டும் செய்யக் கூடாது என்பதில் சிங்கள சமூகம் ஒன்றிணைந்ததன் வெளிப்பாடே ராஜபக்ஷ குடும்பத்தினை மீண்டும் அரியாசனத்தில் ஏற்றி இருக்கிறது.

தேர்தலுக்காக வேண்டி சிங்கள மக்களை மீண்டும் ஒன்றிணைப்பதற்கு ஸஹ்ரானின் அடாவடித்தனம் உதவி செய்தது. தேர்தலின் ஆரம்பத்தில் ஹக்கீம், மனோ, ரிஷாட் என சிறுபான்மைகள் சஜித்தைச் சூழ அணிதிரளும் பொழுதே சிங்கள மக்கள் தம்மால் ஒன்றிணைவதைத் துரிதப்படுத்தினர். தேர்தல் வெற்றியின் பின்னர் பாற்சோறு பார்ட்டியில் கலந்து கொண்ட ஒருவர், அவர்களுக்கு எமக்கெதிராக ஒன்றிணைய முடியுமென்றால் எமக்கும் ஒன்றிணைய முடியும் என்பதை இப்பொழுது நாங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறோம். நாங்கள் ஒன்றிணைந்தால் எவனாலும் எங்களை ஆட்டிப் படைக்க முடியாது என்று கூறினார். இந்த ஒன்றிணைவுக்கு இறுதி நேரத்தில் ஒத்துழைத்த அம்சமாக தமிழ்த் தரப்பின் கோரிக்கையை சுட்டிக் காட்ட முடியும்.

கோதாபயவுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்த சிங்களவர்கள் கூட தமிழரின் 13 அம்சக் கோரிக்கையை எதிர்நிலையிலேயே பார்த்தார்கள். சிங்களக் கிராமங்களை அகற்றக் கோருகிறார்கள், புத்தர் சிலைகளை நீக்கச் சொல்கிறார்கள் என 13 அம்சக் கோரிக்கைகளின் ஒவ்வொன்றுமே சிங்கள தேசம் பற்றிய அவர்களின் அச்சத்தை ஊதிப் பெருப்பிப்பதாகவே அமைந்திருந்தது. இவர்களின் இந்தக் கோரிக்கைகளை எதிர்த்தரப்பு வேட்பாளர் சஜித் பிரேமதாச ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தவர்களை சஜித் பிரேமதாச இணைத்துக் கொண்டமையே அவருக்கு வினையாக முடிந்தது.

மஹிந்த ராஜபக்ஷ தனது தோல்வியின் பின்னர் தெரிவித்த கருத்தை ஒத்ததாகவே ஜனாதிபதி கோதாபயவும் தனது வெற்றியின் பின்னர் கருத்து வெளியிட்டிருந்தார். ''ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் போது சிங்கள மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற முடியும் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்தேன். எமது வெற்றியில் தமிழ் முஸ்லிம் மக்களும் பங்கு கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்தேன். ஆனால் எதிர்பார்த்த அளவு அவர்களின் ஆதரவு கிடைக்கவில்லை'' என அவர் குறிப்பிட்டிருந்தார். தேர்தல் முடிவுகள் ஜனாதிபதியுடைய இந்தக் கருத்தை தெளிவாக எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தன. எவ்வளவு தான் கணக்குப் போட்டுப் பார்த்தாலும் அவர் எதிர்பார்த்த அளவு சிறுபான்மை மக்களின் ஆதரவு அவருக்குக் கிடைக்கவில்லை என்பதை மறுப்பதற்கில்லை. இதனை அவர் எதிர்பார்த்ததனால் தான் கிழக்கு மாகாணத்துக்கு தேர்தல் பிரச்சாரத்துக்காக ஜனாதிபதி செல்லவில்லை என பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

சிறுபான்மையினரின் ஆதரவு பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கு தேர்தல்களின் போது தான் தேவைப்பட்டுக் கொண்டிருந்தது. இனி அதுவும் அவசியமில்லை என்ற நிலை உருவாகுமானால் நாட்டில் ஓரங்கட்டப்பட்ட ஒரு சமூகம் உருவாவது தவிர்க்க முடியாதது. இது நாட்டை இன்னும் பல தசாப்தங்களுக்கு பின்னோக்கி இழுத்துச் செல்லும். அதனால் ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பின் பக்கம் சிறுபான்மைச் சமூகங்கள் கவனம் செலுத்த வேண்டும். பொறுப்புக்களில் இருந்து ஒருபோதும் நான் விடுபடமாட்டேன். நடந்து முடிந்த தேர்தலில் எனக்கு ஆதரவு வழங்கியவர்கள், வழங்காதவர்கள் அனைவரினதும் ஜனாதிபதி நானாவேன் என்பதை நானறிவேன். இந்த அனைத்து மக்களினது உரிமைகளையும் ஜனாதிபதி என்ற பதவி நிலையிலிருந்து முழுமையாகப் பாதுகாப்பேன் என அவர் அறைகூவல் விடுத்திருக்கின்றார்.


ஒட்டுமொத்தமாகப் பார்க்கப் போனால் நாட்டை இப்போது அச்ச உணர்வே ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. சிங்களப் பெரும்பான்மை மக்கள் தமது இனம் அழிந்து விடும் என்றும் தமது நாடு தம்மிடம் இருந்து பறி போய் விடும் என்றும் அஞ்சுகின்றனர். நாட்டின் முன்னேற்றம் எப்படிப் போனாலும் தமது இனத்தைப் பாதுகாத்தல் என்பதுவே சிங்கள மக்களின் தேவையாகவிருக்கிறது. இதனால் தான் சஜித் பிரேமதாச முன்வைத்த அபிவிருத்திக் கோஷங்கள் சிங்கள மக்கள் மத்தியில் எடுபடவில்லை. சிங்கள மக்களின் பாதுகாப்பு உணர்வு என்ற சூழ்நிலை உருவாக்கிக் கொடுத்த தேர்தல் வாக்குறுதி தொடர்பில் சஜித் பிரேமதாச கொடுத்த அழுத்தம் சிங்கள மக்களின் நம்பிக்கையை வெல்லுவதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. அநுர குமாரவின் தேர்தல் உறுதிமொழிகளும் சூழ்நிலைக் கைதிகளை திருப்திப்படுத்துவதாக அமையவில்லை. எனவே பாதுகாப்பற்று அச்சத்தில் வாழ்கின்ற தமக்கு ஒரு தீர்வாக சிங்கள மக்கள் கோதாபயவையே தெரிவு செய்தனர்.

மறுபுறத்தில் இந்த மேலாதிக்க உணர்வு காரணமாக சிங்கள மக்கள் தம்மீது அத்துமீறுவார்களோ என சிறுபான்மை மக்கள் அஞ்சுகின்றனர். சிங்களப் பெரும்பான்மை மக்களது அச்சத்தைத் தீர்ப்பதற்கான மீட்பர்கள் காலத்துக்குக் காலம் தோன்றி வருகின்றனர். ஆனால் சிறுபான்மை மக்களின் அச்சம் காலாகாலமாகவும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

(பக்.14)

# மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய மக்கள் சக்தியாகும் கனவு

• இயான் மிஷ்அல்



பொருளாதாரக் கொள்கைகளை வைத்து உலகம் ஆளப்பட்டு வந்த காலத்தில் தான் ஜேவிபி உருவாகியது. சோஷலிஸப் பொருளாதாரமே 77 வரை இலங்கையின் பொருளாதாரக் கொள்கையாக இருந்தது. 1972 இல் காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை பூரணமான சுதந்திரம் அடைந்தவுடன் இலங்கை தன்னை ஜனநாயக சோஷலிஸக் குடியரசாகப் பிரகடனம் செய்தது. குடியரசின் முதல் பிரதமரான ஸ்ரீமாவோ அம்மையார் பின்பற்றிய சமவுடமைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட சோஷலிஸப் பொருளாதாரம் இலங்கை மக்களை வாட்டி வதைக்கத் தொடங்கியது. இந்த வேளையில் தான் ஜேஆரின் திறந்த பொருளாதாரக் கொள்கை இலங்கை மக்களிடையே வரவேற்பைப் பெற்றது.

1970 - 77 காலப்பகுதி இடது சாரி அரசியலின் பொற்காலமாக அமைந்திருந்தது. சோஷலிஸத்தை இலங்கையில் கட்டிக் காக்கும் இயக்கங்களாக அவை செயற்பட்டு வந்த வேளையிலேயே மக்களை பொருளாதாரப் பிடியிலிருந்து விடுதலை செய்யும் நோக்கில் மக்கள் விடுதலை முன்னணி தோன்றியது. சிறப்பானதொரு மக்கள் மயப்பட்ட இயக்கமாக இது கடுமையான உழைப்பு, அர்ப்பணிப்புகளுடன் கட்டி வளர்க்கப்பட்டது. இந்த இயக்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்வோருக்கு கொள்கை விளக்க வகுப்புக்கள் நடத்தப்பட்டன. காடுகளிலும் வனாந்தரங்களிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்தப் பயிற்சியும் கொள்கைப் பற்றும் வழங்கிய உரத்தை வைத்து இவர்கள் மக்களின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தார்கள்.

திறந்த பொருளாதாரக் கொள்கை எனப்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கை மக்களைச் சுரண்டுவதை எடுத்துக் காட்டி மக்களிடையே செல்வாக்கு மிக்க இயக்கமாக இது வளரத் தொடங்கிய வேளையில் தான் திறந்த பொருளாதாரக் கொள்கையின் சிற்பியான ஜேஆர் ஜயவர்தன இவர்களுக்கு எதிரான தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தார். இதற்கெதிரான ஜேவிபியின் போராட்டம் இறுதியில் வன்முறை வடிவை எடுக்கத் தொடங்கியது. ஆர். பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த வேளையில் [illegible] பிரேமதாச அரசாங்கம் [illegible] கொத்துக் கொத்தாகக் கொன்று பொது இடங்களில் டயரில் இட்டு எரித்ததோடு, தலைவர் ரோஹன விஜேவீரவையும் சுட்டுக் கொன்று மக்கள் விடுதலை முன்னணியைத் தடை செய்து கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.

ஜேவிபியின் இரண்டாவது எழுச்சி விடுதலைப் போராட்டத்தில் இருந்து அரசியல் பரிணாமம் எடுத்தது. ஆனாலும் முதற் பரம்பரையைப் போல புதிய பரம்பரை கொள்கைப் பற்றுள்ளவர்களாக வளர்க்கப்படவில்லை. இன்றுள்ள பலருக்கு ஜேவிபி என்பது மக்கள் விடுதலை முன்னணி என்பது கூடத் தெரியாது. அர்ப்பணிப்பும் கொள்கைப் பிடிப்பும் முன்னைய பரம்பரையின் அளவுக்கு இல்லாமையினால் காலப் போக்கில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் கவர்ச்சிக்கு முன்னால் தாக்குப் பிடிக்க முடியாமல் பலர் கட்சியை விட்டு நீங்கினர்.

(பக்.14)

| மாவட்டம் | 1999 | 2019 | வித்தியாசம் | 1999% | 2019% | வித்தியாசம் |
|---|---|---|---|---|---|---|
| கம்பஹா | 40,472 | 61,760 | 21,288 | 4.3 | 4.28 | (0.02) |
| கொழும்பு | 44,009 | 53,803 | 9,794 | 4.56 | 3.93 | (0.63) |
| குருநாகலை | 27,354 | 36,178 | 8,824 | 3.68 | 3.21 | (0.47) |
| அநுராதபுர | 14,612 | 22,879 | 8,267 | 4.18 | 3.94 | (0.24) |
| கண்டி | 15,512 | 23,539 | 8,027 | 2.53 | 2.52 | (0.01) |
| புத்தளம் | 7,876 | 12,912 | 5,036 | 2.86 | 2.84 | (0.02) |
| பொலன்னறுவை | 8,020 | 12,284 | 4,264 | 4.66 | 4.42 | (0.24) |
| களுத்தறை | 23,770 | 27,681 | 3,911 | 4.47 | 3.41 | (1.06) |
| திகாமடுல்ல | 4,068 | 7,460 | 3,392 | 1.51 | 1.81 | 0.30 |
| பதுள்ளை | 12,025 | 14,806 | 2,781 | 3.34 | 2.64 | (0.70) |
| இரத்தினபுரி | 16,482 | 18,887 | 2,405 | 3.43 | 2.53 | (0.90) |
| மட்டக்களப்பு | 290 | 2,304 | 2,014 | 0.17 | 0.76 | 0.59 |
| திருகோணமலை | 2,307 | 3,730 | 1,423 | 1.83 | 1.61 | (0.22) |
| மாத்தளை | 7,924 | 8,890 | 966 | 3.66 | 2.62 | (1.04) |
| யாழ்ப்பாணம் | 413 | 1,375 | 962 | 0.37 | 0.37 | - |
| மொனராகல | 10,456 | 11,235 | 779 | 5.8 | 3.52 | (2.28) |
| வன்னி | 482 | 1,156 | 674 | 0.77 | 0.54 | (0.23) |
| கேகாலை | 14,997 | 15,043 | 46 | 3.66 | 2.61 | (1.05) |
| நுவரெலியா | 5,879 | 5,891 | 12 | 1.87 | 1.24 | (0.63) |
| காலி | 27,257 | 27,006 | (251) | 5.32 | 3.72 | (1.60) |
| மாத்தறை | 26,229 | 23,439 | (2,790) | 6.93 | 4.21 | (2.72) |
| அம்பாந்தோட்டை | 33,739 | 26,295 | (7,444) | 13.3 | 6.24 | (7.06) |
|  | 344,173 | 418,553 | 74,380 | 4.08 | 3.16 | (0.92) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## அர்த்தமுள்ள எதிர்க்கட்சியின் தேவை

நாட்டில் ஜனநாயகபூர்வமான தேர்தலொன்று நிறைவு பெற்றிருக்கிறது. வன்முறைகள் அற்ற, மோசடிகள் அற்ற நியாயமான தேர்தலாக இம்முறை ஜனாதிபதித் தேர்தல் அமைந்திருந்தது. அரசியல் கட்சிகள் மட்டுமன்றி மக்களும் கூட பண்பட்டவர்களாக இந்தத் தேர்தலில் நடந்து கொண்டார்கள். நாடு என்ற ரீதியில் பெருமைப்பட வேண்டிய இந்தத் தேர்தலிலேயே ஜனநாயக ரீதியாக கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானார்.

ஜனநாயக நாட்டில் அரசாங்கத்தில் ஜனநாயகம் நிலைப்பதற்கு உறுதியான எதிர்க்கட்சி அவசியமானது. நாடு அராஜகத்தை நோக்கித் தள்ளப்படுவதிலிருந்து பாதுகாக்கும் அரணாக எதிர்க்கட்சி அமைகிறது. தேர்தலில் தோல்வி யடைந்த கட்சியினரினதும் வாக்காளர்களினதும் உரிமைகளைப் பேணுவதிலும் எதிர்க்கட்சியின் தேவை அத்தியா வசியமாகிறது.

இந்த வகையில் நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத் தும் வகையிலான எதிர்க்கட்சி ஒன்றினை மக்கள் தெரிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி இந்த இடத்தை நிரப்பலாம் என்று எதிர்பார்த்தாலும் அந்தக் கட்சியினுள் ஜனநாயகம் பேணப்படவில்லை என்பதை நாடு நன்கறிந்து வைத்துள்ளது. நீண்ட காலமாக கட்சியின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் கட்சியின் தலைவரால் எந்தவிதமான ஆக்கபூர்வமான பங்களிப்பையும் கட்சிக்கோ நாட்டுக்கோ வழங்க முடியவில்லை என்பதனை வரலாறு நெடுகிலும் கட்சித் தலைவரின் கீழ் ஈட்டப்பட்ட தோல்வி கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்தத் தேர்தலும் கூட கட்சித் தலைவரின் தோல்விக்கு இன்னுமொரு எண்ணிக்கை யையே சேர்த்திருக்கிறது.

எனவே நாட்டின் ஜனநாயகத்தை பலப்படுத்தும் வகையில் எதிர்க்கட்சியினைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகள் செய்யப்பட வேண்டும். பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இந்தச் சவாலை முன்னெடுக்கும் வகையில் தனது கட்சியில் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும். அடுத்த தேர்தலில் நாட்டின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்த இடத்தில் நிற்கும் என்பதை சொல்ல முடியாது. அதனால் ஜனநாயகத்தைப் பாதுகாப்ப தற்கான எதிர்க்கட்சி ஸ்தானத்தைப் பெறும் வகையில் ஐதேக தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலின் போது பலமான நாடு ஒன்றுக் காக ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனம் புத்திஜீவிகள் பலரதும் பாராட்டைப் பெற்றிருந்தது. இத்தகைய சிந்தனை உடையவர்கள் எதிர்க்கட்சி தரப்பில் இருப்பதனால் நாட்டை அறிவார்ந்த முறையில் வழிநடத்துவது சாத்தியமாகிறது. இவ்வாறான சிந்தனை களை வடிவமைத்தவர்கள், அதற்காக உழைத்தவர்கள் தேர்தலின் பின்னர் ஓய்வெடுத்து ஒதுங்குவது நாட்டுக்கு நல்லதல்ல. அதனால் நாட்டின் நலனில் அக்கறையுடன் செயற்பட்டவர்கள் தொடர்ந்தும் நாட்டுக்காக உழைப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

இம்முறைய தேர்தல் இனங்களுக்கிடையிலான துருவமயப்படுதலை கூர்மையாக்கியிருக்கிறது. ஆட்சியிலிருக் கும் ஜனாதிபதி தனக்கு சிறுபான்மை மக்கள் போதுமான அளவு வாக்களிக்கவில்லை எனத் தெரிவித்திருக்கிறார். எதிர்த்தரப்பில் போட்டியிட்ட சஜித் பிரேமதாசவுக்கே சிறு பான்மை மக்கள் வாக்களித்திருக்கின்றனர். இது கட்சி என்ற நிலையையும் தாண்டி தனி நபரில் வைத்த நம்பிக்கை யாகவே கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே தனக்கு வாக்களித்த சிறுபான்மையினரின் நலனுக்காக தொடர்ந்தும் அரசியலில் இருந்து உழைக்க வேண்டிய தேவை, யாரை நம்பி சிறுபான்மையினர் வாக்களித்தார்களோ அவர்களுக்கு இருக்கிறது.

எனவே, நாட்டில் ஜனநாயகத்தைப் பேணுவதற்காகவும், சிறுபான்மை மக்களின் நலன் விடயத்தில் அக்கறை செலுத்துவதற்காகவும் பலமான எதிர்க்கட்சியின் தேவை நன்கு உணரப்படுகிறது. இதனால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டதோடு நில்லாமல் பலமான எதிர்க்கட்சியை உருவாக்குவதிலும் மக்கள் தமது பணியைச் செய்ய வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srpckwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

• அகிலன் கதிர்காமர்

இலங்கை அதன் அரசியலைப் பொறுத்த வரை ஒருபோதும் தனித் தீவாக இருந்ததில்லை. பொருளாதாரப் பிரச்சினை, 'பயங்கர வாதம் மீதான யுத்தம்', இஸ்லாமிய வெறுப்பு போன்ற உலகளாவிய போக்குகள் இங்கும் தாக்கம் செலுத்தியே வந்திருக்கின்றன.

உலகம் முழுவதும் ஜனநாயக ரீதியில் தேர்வு செய்யப்படும் சர்வாதிகார அரசுகள் தோன்றுவது போலவே இங்கும் நடக்கிறது. இப்படியான சர்வதேசப் போக்குகள் இலங்கை அரசியலை முன்னகர்த்திச் சென்றாலும் உள்ளூர் பிரச்சினைகளும் அரசியல் பொருளாதாரமும் தான் கடந்த சில ஆண்டுகளாக இங்குள்ள அரசுகளை இயக்குகின்றன.

பல தசாப்தங்களாக உள்நாட்டுப் போர் இலங்கையை கிழித்துப் போட்டிருந்த நிலையில், போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் மத வாத சக்திகள் நடத்திய முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் சமூகத்தை பிளவு படுத்தியிருக்கின்றன. உலகம் முழுவதும் நடந்து வரும் 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தின்' ஒரு பகுதி என்ற பெயரில்தான் உள்நாட்டு யுத்தத்திற்கு சர்வதேச சக்திகளின் ஆதரவு பெறப்பட்டது. புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட பிறகு, ஆதிக்க சக்திகள் இஸ்லாமியர்களைப் புதிய எதிரியாகக் கட்டமைத்து, அதன் மூலம் தங்களுக்கான புதிய சமூக அடித்தளத்தை உருவாக்க முயற்சிக்கின்றன.



# இரும்பு மனிதனின் வருகை

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ம் திகதி நடந்த ஈஸ்டர் தாக்குதல்கள், பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற பதத்தை பத்தாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பரவலாக்கியிருக்கிறது. இந்தத் தாக்குதல்களுக்குப் பிறகு தேசம் முழுவதும் பரவியிருந்த அச்சமும் இஸ்லாமியர்களுக்கு எதிரான தாக்குதல்களும் தேசிய அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. வர்த்தக யுத்தமும் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் மந்த நிலையும், ஈஸ்டர் தாக்குதலால் நிலைகுலைந்திருக்கும் இலங்கைப் பொருளாதாரத்தை மேலும் மோசமாக்கியிருக்கின்றன. இம்மாதிரியான பாதுகாப்புக் கவலைகள், பொருளாதார மந்த நிலை ஆகியவற்றுக்கான தீர்வை பலர் ஒரு வலுவான தலைவரிடம் தேடுகிறார்கள். சமீப காலமாக உலகம் முழுவதுமே ஏற்பட்டிருக்கும் ஒரு போக்கு இது.

### வாய்ப்புகளைப் பயன்படுத்திய ராஜபக்ஷ

இம்மாதிரியான உலகளாவிய சூழல்களால் ராஜபக்ஷ குடும்பத்தினர் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கான நிலைமை ஏற்பட்டிருந்தது. ஆனால், தேர்தலில் வெற்றி பெற, அரசியல் ரீதியான அணிதிரட்டலும் தேவைப்படும். 2005 ஆம் ஆண்டில் நடந்த ஜனாதிபதி தேர்தலின் போது புலிகள் இயக்கம் தேர்தலைப் புறக்கணிக்கச் சொன்னதையடுத்து, மிகக் குறைவான வாக்கு வித்தியாசத்தில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றார். இந்த வெற்றி புலிகள் இயக்கத்திற்கு ஒரு தற்கொலையாக முடிந்துபோனது. யுத்தத்தின் பிற்பகுதியின்போது மஹிந்தவின் ஆட்சி, அரசையும் சமூகத்தையும் தனக்கு ஆதரவாக ஒன்று திரட்டியது. ஆனாலும் ஜனநாயக சக்திகள் ஒன்று திரண்டு, 2015ல் நடந்த ஜனாதிபதி தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அந்த ஆட்சியைத் தோற்கடித்தது.

தேசிய அளவில் தோற்கடிக்கப்பட்டு, சர்வதேச அளவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ராஜபக்ஷ குடும்பத்தினர், இடைவிடாமல் பணியாற்றினர். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன (எஸ்எல்பிபி) என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றைத் துவங்கவும் செய்தனர். சிங்கள கிராமப்புற மக்கள், கீழ் மத்திய தர வர்க்கத்தினரிடம் தொடர்ந்து ஊடாடி, தங்கள் அடிப்படை வாக்கு வங்கியை மீண்டும் கட்டமைத்து, அதனை வலுப்படுத்தினர். மோசமாகிவரும் பொருளாதாரச் சூழலாலும் நீண்டகாலம் நீடித்த வறட்சியாலும் அதிருப்தி அடைந்திருந்த மக்களிடம் அவர்கள் உரையாடினர். ராஜபக்ஷ ஆட்சியின் மீது முன்வைக்கப்பட்ட ஊழல் தொடர்பான புகார்கள், அவர்களது பிம்பத்தைக் கடுமையாகப் பாதித்திருந்த நிலையில், அதே போன்ற ஊழல் புகார்களை தற்போதைய அரசு மீது முன்வைத்தனர்.

நல்லாட்சி தருவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு, மத்திய வங்கி பிணை முறி ஊழலில் சிக்கியிருப்பதைச் சுட்டிக்காட்டினர். 2018 பெப்ரவரியில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் தங்கள் பலத்தைச் சோதித்துப் பார்த்தது ராஜபக்ஷ தரப்பு. அந்தத் தேர்தலில் அவர்கள் புதிதாக உருவாக்கியிருந்த கட்சிக் கட்டமைப்பு, அவர்களுக்கு தென்பகுதித் தொகுதிகளில் மாபெரும் [illegible] நம்பிக்கை அவர்களுக்கு உருவானது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் போன்றவற்றின் மூலம் பாராளுமன்றத்தைக் கொதிநிலையிலேயே வைத்திருந்த ராஜபக்ஷ தரப்பு, ஆட்சி நடத்துவதையே மிகச் சிக்கலான காரியமாக்கியது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூலம் மஹிந்தவை பிரதமராக அறிவிக்கச் செய்து, பாராளுமன் றத்தில் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பிற்கும் முயன்றனர். ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. பாதுகாப்புக் குறைபாடுகள் இல்லையென்றால், கொடூரமான ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுத்திருக்க முடியுமென பிரதமரும் ஜனாதிபதியும் மாற்றிமாற்றி குற்றம்சாட்டிக் கொண்டிருந்த நிலையில், தங்களால் மட்டுமே தேசியப் பாதுகாப்பை நிலைநிறுத்த முடியுமென ராஜபக்ஷ தரப்பினர் திரும்பத் திரும்பக் கூறினர்.

கடந்த நான்கு ஆண்டுகளில் அரசைத் தாக்குவதற்கான ஒரு வாய்ப்பைக்கூட அவர்கள் விட்டுவிடவில்லை. அதேநேரம், களத்தில் தொடர்ந்து தங்களது தளத்தை உறுதிப்படுத்தியபடியே இருந்தனர். அதிருப்தியில் இருந்த கிராமப்புற சிங்கள மக்கள், ராஜபக்ஷவுக்குக் கீழ் செயல்படுவதில் சௌகர்யமாக உணர்ந்த அதிகாரவர்க்கம், ராஜபக்ஷவின் பொருளாதாரக் கொள்கைகளால் லாபமடைந்த தொழில்துறையினர், மதவாத, சமூக இயக்கங்கள் ஆகியவை இதற்கு உதவின. இந்தக் காரியங்களையெல்லாம் ஒருபக்கம் செய்துகொண்டிருந்தபோது, ஆட்சி மீதிருந்து தங்கள் பார்வையை அகற்றாமல் இருந்தனர் ராஜபக்ஷ குடும்பத்தினர். இப்போது ஜனாதிபதி தேர்தலில் பெற்றி பெற்றிருக்கும் நிலையில், நீண்டகால நோக்கில் அவர்களால் அதிகாரத்தை தற்போது திரட்ட முடியும்.

### தாராளவாத ஜனநாயகம் வெற்றி பெறாதது ஏன்?

ராஜபக்ஷவுக்குக் கிடைத்த ஒவ்வொரு வெற்றியும் சிறிசேன - ரணில் அரசின் தோல்வி என்பதுதான் உண்மை. மக்களின் பொருளாதார கவலைகளை பின்தள்ளிவிட்டு, வெளிநாட்டு முதலீடுகளுக்காகவும் வர்த்தக தாராளமயமாக்கத்திற்காகவும் கொண்டுவரப்பட்ட புதிய பொருளாதார திட்டங்களில் கவனம் செலுத்தியது சிறிசேன அரசு. கூட்டணி ஆட்சிக்குள் இருந்த உட்கட்சிப் பூசல்கள் ஒருபுறமிருக்க, அரசியல் தலைமைகளும் மக்களிடமிருந்து விலகியே இருந்தன. உலகளாவிய வர்த்தக யுத்தம் அதிகரித்து வந்த நிலையில், இவர்கள் தொடர்ந்து தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகத்தைப் பற்றிப் பேசினர்.

பயங்கரவாதத் தாக்குதல் குறித்த அச்சம் நிலவியபோது, ஈஸ்டர் தாக்குதல் போன்ற மிக மோசமான தாக்குதல் நிகழ அனுமதிக்கும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் சீர்குலைந்திருந்தன. உலகம் முழுவதும் இஸ்லாமியர்களுக்கு எதிராக குரல்கள் எழுந்த நிலையில், முஸ்லிம்களை புதிய எதிரிகளாகக் கட்டமைத்து மதவாத சக்திகள் சிங்கள வாக்குகளைத் திரட்டுவதை நிறுத்த அரசு எதுவுமே செய்யவில்லை. இதனால்தான், 2015 இல் உருவான மகத்தான தாராளவாத ஜனநாயக பரிசோதனை முயற்சி, ஜனரஞ்சகமான சர்வாதிகாரத்தால் வெற்றி கொள்ளப்பட்டது.

ரணில் விக்ரமசிங்க தலைமையிலான தாராளவாதிகள் பொருளாதாரத்தில் கோட்டை விட்டார்கள். மற்றொரு பக்கம், இராணுவமயமாக்கமும் கண்காணிப்பும் நாடு முழுவதும் குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் குறைக்கப்பட்டன. போராட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது. கருத்து சுதந்திரம் ஓரளவுக்குப் பாதுகாக்கப்பட்டது. வடக்கில் இராணுவத்தின் வசம் இருந்த நிலங்கள், உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. நீதித்துறை தன் சுதந்திரத்தைத் திரும்பப் பெற்றது. ஊடகங்களும் சமூக இயக்கங்களும் அரசைக் குற்றம்சாட்டும் தன்னம்பிக்கையைப் பெற்றன. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்பட்டது. மனித உரிமை கமிஷன், தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆணையம் போன்றவை வலுப்படுத்தப்பட்டன.

ராஜபக்ஷவை எதிர்கொள்ள மக்களின் அரசியல் பொருளாதாரக் கவலைகளுக்கு முகம் கொடுக்கும் ஒரு வலுவான கூட்டணி தேவை. ஆனால் இம்மாதிரி ஒரு கூட்டணியை உருவாக்க, மூன்றாவது சக்தியாக உருவாக நினைக்கும் மக்கள் விடுதலை முன்னணி அதற்கு உதவாது. தன்னுடைய தலைமைப் பதவிக்கு அச்சுறுத்தல் வந்துவிடுமோ எனக் கருதி, தம் கட்சி வேட்பாளரின் வெற்றியையே தடுக்க நினைக்கும் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையும் அதற்கு உதவாது.

### தேர்தல் முடிவுகள் சொல்வதென்ன?

இந்தப் பின்னணியில் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் போது பிராந்திய ரீதியாக பிளவுகள் தென்படுகின்றன. தமிழர்களும் முஸ்லிம்களும் பெருமளவில் வசிக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள்; ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு தளமாகவும் மலையகத் தமிழர்களும் அதிகம் வசிக்கும் பகுதியாகவும் உள்ள மத்திய இலங்கை; கொழும்பு நகரைச் சுற்றியுள்ள சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகள் ஆகியவை சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்திருக்கின்றன. ஆனால், மற்ற பகுதிகளில் உள்ள பெரும்பான்மையினர் கோட்டாபயவுக்கு வாக்களித்துள்ளனர்.

மக்கள் வாக்களித்திருக்கும் விதத்தை வைத்துப் பார்த்தால், நாடு இனம் - தேசியவாதத்தின் அடிப்படையில் பிளவுபட்டிருப்பது போல தோன்றும். ஆனால், ஒவ்வொரு பிராந்தியத்தின் அரசியலையும் உற்றுநோக்கி, ஆழமாகப் பார்க்கும்போது வேறுவிதமான புரிதல் கிடைக்கும். வடக்கில் உள்ள தொகுதிகளில் வாக்களித்தோர் சதவீதம் கடந்த முறையைவிட அதிகமாக இருந்தது. இத்தனைக்கும் எந்த வேட்பாளரும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாகச் சொல்லவில்லை. மற்றொரு பக்கம் தமிழ் தேசியக் குழுக்கள் சில தேர்தலைப் புறக்கணிக்கும்படி அறிக்கை விடுத்திருந்தன.

சஜித் பிரேமதாஸவுக்கு பெருமளவில் வாக்களித்திருப்பதன் மூலம், தேசிய அரசியலுடன் செயல்பட்டு, அதற்கு ஒரு வடிவம் தரும் ஒரு காலத்திற்குள் இப்பகுதிகள் நுழைந்திருக்கின்றன. அதேபோல, சிங்களர்கள் பெரும்பான்மையாகத் திரண்டு, ஒரு பெரும்பான்மைவாத அரசுக்கு வாக்களித்துவிட்டார்கள் என்று சொல்வது எளிதாக இருக்கலாம். ஆனால், உண்மையில், கீழ்த்தட்டு, மத்திய தர வர்க்க மக்கள் பொருளாதார ரீதியாக அடைந்த பாதிப்பு, இளைஞர்களின் நிராசை ஆகியவையே கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பெரும் எண்ணிக்கையில் வாக்குகளைக் கிடைக்கச் செய்திருக்கின்றன.

### ஜனநாயகமும் சக வாழ்வும்

தற்போது இலங்கை புதிய அரசியல் பாதையில் செல்லத் துவங்கியிருக்கிறது. இந்த நிலையில், எஞ்சியிருக்கும் ஜனநாயக வெளியைப் பயன்படுத்துவது மீதமுள்ள அரசியல் சக்திகளின் வேலை. விரைவிலேயே நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக அவர்கள் ஒன்றிணைய வேண்டும். ராஜபக்ஷ அதிகாரத்திற்கு வருவதை விரும்பாத இஸ்லாமிய, தமிழ் சிறுபான்மைக் கட்சிகள், இடதுசாரிகளுடன் இணைந்து மூன்றாவது முன்னணியைக் கட்டமைக்க நினைத்த ஜேவிபி, சமூக இயக்கங்கள் ஆகியவை தன் அதிகாரத்தை வலுப்படுத்திக்கொள்ளவிருக்கும் சர்வாதிகார அரசிடமிருந்து இந்த ஜனநாயக வெளியை காப்பாற்ற வேண்டும்.

ஜனநாயக ரீதியிலான சர்வாதிகாரம் என்பதும் தற்போது உலகளாவிய போக்காக இருக்கிறது. அம்மாதிரியான ஆட்சியாளர்களோடு உலகின் மிகப் பெரிய அரசுகள் ஒப்பந்தங்களைச் செய்துகொள்கின்றன. ஆசியாவிலேயே முதல் முறையாக 1931இல் எல்லோருக்கும் வாக்குரிமை அளித்த நாடு இலங்கைதான். ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் இலங்கை பெரும் உறுதியையும் வெளிப்படுத்தியிருக்கிறது. ஆனால், இலங்கையில் உள்ள எல்லா சமூகத்தினரும் ஒன்றிணைந்து செயல்படும் போதுதான் இது சாத்தியம். அதற்கு முதற்கட்டமாக இரு தரப்பினரும் சக வாழ்வு வாழ்வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்த வேண்டும். பிளவுபடுத்தும் பாதைகளை விட்டுவிட்டு, பல இன உறவுகளை மீண்டும் உருவாக்கம் செய்வதைத்தான் உலகம் முழுவதும் உள்ள தங்கள் நண்பர்களிடமிருந்து இலங்கை மக்கள் தற்போது கற்றுக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தை வெற்றிகரமாகத் தோற்கடித்த ரணில்



• அபூ அர்ஸலான்

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் பெறுபேறு சஜித்திற்கு ஆதரவளித்தவர்களுக்கும் ஐ.தே.க.வுக்கும் அதிர்ச்சியளித்துள்ளது. இந்தத் தோல்வி எதிர்பார்க்கப்பட்டதல்ல. இன்னொரு வகையில் சஜித்தின் தோல்வி ஐ.தே.க.வின் தோல்வி மட்டுமல்ல. ஜனநாயகத்தை நேசிக்கும் அனைவரினதும் தோல்வியாகும். இந்தத் தோல்வியை சஜித் எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை அவரது தேர்தலுக்குப் பிந்திய நகர்வுகள் காட்டுகின்றன.

ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து உடனடியாக ராஜினாமாச் செய்த அவர், 18 ஆம் திகதி கோல்பேஸ் ஹோட்டலில் தனக்கு நெருக்கமானவர்களுடன் நடத்திய சந்திப்பின்போது வெளியிட்ட கருத்துக்கள் அவரது தோல்விக்குப் பின்னால் இருந்த சக்திகளை தோலுரித்துள்ளன. சஜித் இந்தத் தோல்வியினால் பெரிதும் மனமுடைந்து போயுள்ளார்.

''52 வயதான நான் நாட்டுக்குச் சிறந்ததையே கொடுக்க முயன்றேன். நான் சிறந்த பௌத்தன். எனினும், பௌத்தர்கள் எனக்கு அதிகளவில் வாக்களிக்காது விட்டு விட்டனர்'' என அவர் தனது கவலையைப் பகிர்ந்துள்ளார்.

''தேர்தல் பிரச்சார காலத்தில் நான் சகலரையும் நம்பினேன். எனது கட்சியின் தலைமை எனக்குத் துரோகம் செய்தது. எனக்குத் தேவையான பணத்தை கட்சி வழங்கவில்லை. நான் தற்போது கடனாளியாகியுள்ளேன். தேர்தல் பிரச்சாரத்திற்கு பணமின்மையால் நெருக்கடிகளை எதிர்கொண்டேன். சிலர் பாம்புகளைப் போல் செயற்பட்டனர். எனக்குத் துரோகம் செய்யப்பட்டுள்ளதாக உணர்கின்றேன்.'' இவ்வாறு சஜித் தனது ஆழ்ந்த கவலையை கொட்டித் தீர்த்துள்ளார்.

எவ்வாறாயினும், ஐ.தே.க. மீளவும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு குறைந்தது இன்னும் 20 ஆண்டுகள் செல்லலாம். ரணில் அதன் தலைமையில் இருக்கும்போது இன்னும் பல தசாப்தங்கள் செல்லலாம். சஜித்தின் தோல்விக்குப் பங்களித்த காரணிகளை ஆராய்வதும் எதிர்காலத்தில் அவற்றுக்கு நிவாரணம் காண்பதும் ஐ.தே.க.வின் இருப்புக்கு அவசியமானது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் லங்கா சமசமாஜ கட்சிக்குப் பின்னர் தோன்றிய மிகப் பெரிய முதல் அரசியல் கட்சி ஐக்கிய தேசிய கட்சியே. அதிலிருந்து பிரிந்தே SWRD பண்டாரநாயக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார்.

சஜித்தை இந்தத் தேர்தலில் தோற்கடிப்பதில் பின்புலமாக இருந்தவர் கட்சியின் தலைவர் ரணில் என்பது தெட்டத் தெளிவானது. 2008 ஆம் ஆண்டிலிருந்து கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக ஐ.தே.க.வில் சீர்திருத்தத்தை விரும்பியோர் ரணிலின் தலைமைத்துவத்திற்கு சவால் விட்டு வந்தனர். மஹிந்தவின் ஆட்சியின்போது எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த ரணிலை ஐ.தே.க. ஆதரவாளர்களே 'பிஸ்ஸு பூசா அபிட எபா' என நிராகரிக்கத் தொடங்கினர்.

எவ்வாறாயினும், ரவி கருணாநாயக்க, ருவன் விஜேவர்தன, இரான் விக்ரமசிங்க, அகில விராஜ் ஆகியோர் உள்ளிட்ட ஒரு பரிவாரம் ரணிலைக் காப்பாற்றி வந்தது. தொடக்கத்திலிருந்து சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்க ரணில் விரும்பவில்லை. சிறுபான்மைக் கட்சிகளின் கடும்போராட்டத்திற்குப் பின்னரும் சஜித்திற்கு களத்திலுள்ள ஆதரவு பலமாக நிறுவப்பட்ட பின்னருமே ரணில் சஜித்தை களமிறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

ஐ.தே.க.விற்கு ரணில் தலைமை வழங்கத் தொடங்கியதன் பிற்பாடு நடைபெற்ற எந்தத் தேர்தலிலும் அக்கட்சி வெற்றி பெறவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. ரணில் அடிப்படையில் கிறிஸ்தவ மதப் பின்புலத்திலிருந்து வந்தவர். பெரும்பான்மை சிங்கள மக்கள் அவரை ஒரு தூய பௌத்தராக ஏற்பதில்லை. இன்னொரு புறம் ஐ.தே.க.விற்குள் மேட்டிமை அரசியலை (Elite Politic) முன்னெடுத்தவர் ரணில். நாட்டின் அடிமட்ட மக்களது பிரச்சினைகளை ரணில் ஒருபோதும் புரிந்துகொண்டதில்லை.

வயல் நிலத்தில் நிற்கும் விவசாயியையும் சோளக்காட்டு பொம்மையையும் (பம்பயா) பிரித்தறிய முடியாத ரணில், மேலைய நாடுகளின் கலாச்சார அரசியல் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டவர் என்பதே நாட்டின் பொதுப் புத்தியாக உள்ளது.

ஐ.தே.க.விற்குள் நிலவி வரும் சாதி வேறுபாடு சஜித் போன்றவர்களுக்கு சரியான இடத்தைக் கொடுப்பதற்குத் தடையாக இருந்தது. சஜித்தை எதிர்த்துக் களமிறங்கியவர்களுக்கு சிங்கள பௌத்தர்களிடையே பிரச்சாரம் செய்வதற்கு மிகச் சாதகமான சூழலை ரணில் உருவாக்கியிருந்தார். இதுவே சஜித் தோல்வியின் ஆரம்பமாகும்.

தேர்தலுக்கு சற்று முன்னர் நாட்டின் பெரும்பாலான ஊடகங்களில் பேசு பொருளாக்கப்பட்ட எம்.சீ.சீ. ஒப்பந்தம் எதிர்த்தரப்பினருக்கு அணிக்கு நல்ல அவலாக அமைந்தது. அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்ய விளையும் ஐ.தே.க. நாட்டை அமெரிக்காவுக்குத் தாரைவார்க்கத் திட்டம் தீட்டியுள்ளது என்று எதிர்த்தரப்பினர் மேற்கொண்ட பிரச்சாரம் சிங்கள பௌத்தர்களிடையே செறிவான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதற்கென ஒரு மதகுரு உண்ணாவிரதத்தில் ஈடுபடுத்தப்பட்டார். இவ்விடயத்தை 18 ஆம் திகதி சந்திப்பின்போது சஜித் பிரேமதாஸவும் தான் தோற்றமைக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார்.

எங்கள் அணியிலிருந்த சிலர் அமெரிக்காவுடன் மிலேனியம் கூட்டுறவு ஒப்பந்தத்தைச் செய்ய முயற்சித்தனர் என சஜித் கவலை வெளியிட்டுள்ளார். இதேவேளை, ரஞ்சன் ராமநாயக்க போன்றவர்கள் பௌத்த மதகுருமாருக்கு எதிராகத் தெரிவித்த கருத்துக்கள் எதிர்த்தரப்பின் பிரச்சாரத்திற்கு நன்கு பயன்படுத்தப்பட்டன. சஜித் தோல்வி காண்பதற்கு, அதாவது சிங்கள பௌத்தர்களின் வாக்குகள் அவருக்கு 16 மாவட்டங்களில் குறைவாகக் கிடைத்தமைக்கு இது பிரதான காரணம் என சஜித் வலியுறுத்தியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் அப்பால் ஐ.தே.க. கட்சியின் தலைவர் ரணில் சஜித் வெற்றி பெறுவதை ஒருபோதும் விரும்பவில்லை. அதனால் அவரைச் சூழவிருந்த அவருக்கு விசுவாசமான பரிவாரமும் சஜித் தோற்கடிக்கப்பட வேண்டுமென்றே விரும்பினர். இதனால் சிங்கள பௌத்தர்களை வெறுப்பூட்டும் கருத்துக்களை அவர்கள் திட்டமிட்டுப் பரப்பினர்.

மஹிந்த அணியின் பிரச்சாரம் போன்று சஜித்தின் பிரச்சாரத்தில் செறிவும் வீச்சும் இருக்கவில்லை. சிங்கள பௌத்தர்களின் அடிமட்டம் வரை பிரச்சாரம் ஆழமாக முன்னெடுக்கப்படவில்லை. 25 ஆண்டுகள் தான் சிங்கள பௌத்தர்களுக்குப் பணியாற்றியுள்ளேன். தான் நாட்டுக்காக உயிர் துறந்த ஒரு ஜனாதிபதியின் மகன், ஒரு சிறந்த பௌத்தன் போன்ற காரணிகளை முன்னிறுத்தி தேர்தலில் வெற்றி பெறலாம் என்ற அதீத நம்பிக்கை சஜித்திற்கு இருந்தது.

குறை நிரப்புக்குத் தேவைப்படும் வாக்குகள் சிறுபான்மைக் கட்சிகளிடமிருந்து தனக்குக் கிடைக்கும். ஆகையால் வெற்றி நிச்சயம் என்ற எதிர்பார்ப்பில் சஜித் இருந்தமை ஆச்சரியத்திற்குரியதல்ல. சிறுபான்மை தமிழ், முஸ்லிம் சமூகங்களும் இதே எதிர்பார்ப்பினையே கொண்டிருந்தன. தேர்தல் பெறுபேறுகள் வெளிவந்தபோதே எதிர்க்கட்சியின் பிரச்சாரம் எவ்வளவு ஆழமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் உணரக் கிடைத்தது.

மூன்று முக்கிய விடயங்கள் ஐ.தே.க.வுக்கு எதிரான வாக்குகளைத் தீர்மானித்துள்ளன என்று அறுதியிட்டுக் கூற முடியும். ரணிலின் தலைமையிலான ஐ.தே.க. நல்லாட்சி என்ற பெயரில் நாட்டின் செல்வங்களை சூரையாடி வருவதாக மஹிந்த அணி கடும் பிரச்சாரம் செய்தது. ரவி கருணாநாயக்க சம்பந்தப்படும் மத்திய வங்கியின் பிணைமுறி ஊழல் எதிர்க்கட்சியின் பிரச்சாரத்திற்கு சாதகமாய் அமைந்தது. ஐ.தே.க.வினரே மிகப் பெரும் ஊழல் பெருச்சாளிகள் என்ற விம்பத்தை எதிர்க்கட்சியினர் உருவாக்கி அதில் வெற்றியும் கண்டனர்.

4/21 பயங்கரவாதத் தாக்குதல் ஐ.தே.க.வின் அரசியல் எதிர்காலம் மீது விழுந்த மிகப் பெரிய அடியாகும். நாட்டில் பாதுகாப்பு இல்லை என்ற படிமத்தை அத்தாக்குதல் ஏற்படுத்தியது. சிங்கள பௌத்தர்களுக்குள்ள ஒரே நாடு இலங்கை. அதில் இஸ்லாமியப் பயங்கரவாதிகள் ஊடுருவி, அதன் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் மிகப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளனர். இன்னொரு புறம் நாட்டின் அனைத்துப் பொருளாதார மூல வளங்களும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு தாரைவார்க்கப்படுகின்றது. இதற்கு அப்பால் பௌத்த மதத்திற்கும் மதகுருக்களுக்கும் உள்ள மதிப்பும் மரியாதையும் அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றது. இது போன்ற கருத்துக்கள் 4/21 தாக்குதலைத் தொடர்ந்து பெரும்பான்மை மக்களிடையே தொடர்ச்சியாக பிரச்சாரம் செய்யப்பட்டு வந்தன.

பெப்ரல் அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டியாராச்சி வாக்களிப்பு நிலையங்களாக மதஸ்தலங்கள் மாற்றப்பட்டமை இந்தத் தேர்தலில் தாக்கம் செலுத்தியுள்ளது என்று குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

சஜித் மற்றும் கோட்டாபய ஆகிய வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு எடுத்துக் கொண்ட கால அளவில் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது. 4/21 ஐ அடுத்து மஹிந்த அணியினர் பிரச்சாரத்தைத் தொடங்கி விட்டனர். அதற்கென விகாரைகள் அனைத்தும் நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏன் கோத்தாபயவை ஆதரிக்க வேண்டும் என்பது சிங்கள மக்களுக்கு நன்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தெற்கில் வரலாறு காணாத அளவு ஒரு மில்லியனுக்கும் அதிகமான வாக்குகளால் கோத்தாபய வெற்றி பெற்றதற்கும் 16 மாவட்டங்களில் சஜித் தோல்வியடைந்தமைக்கும் இந்தப் பிரச்சாரத்தின் வீச்சும் செறிவும் முக்கிய காரணமாகும்.

ஆனால், ஐ.தே.க.வின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது இறுதி வரையும் இழுபறி நிலையிலேயே இருந்தது. மூன்று முறை பிரதமர் பதவி வகித்த ரணில் ஒரு முறையேனும் ஜனாதிபதியாக வேண்டும் என்ற -அதிலும் குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வேண்டும் என்ற நப்பாசையில் இருந்தவர். சாதி அடிப்படையில் கீழ் நிலையிலுள்ள ஒருவருக்கு ஜனாதிபதிப் பதவி கிடைப்பதையோ ஐ.தே.க.வின் தலைமைப் பதவி கிடைப்பதையோ ரணில் ஒருபோதும் விரும்பவில்லை. ஐக்கிய ஜனநாயக முன்னணி என்ற கூட்டமைப்பின் அழுத்தமே சஜித்தை அங்கீகரிக்கும் நிர்ப்பந்தத்தை ரணிலுக்கு ஏற்படுத்தியது.

ரணில் ஐ.தே.க. ஜனநாயகக் கட்சி என்று பீற்றிக் கொண்டாலும் கட்சிக்குள்ளே ஜனநாயகம் இருக்கவில்லை. கடந்த நான்கரை ஆண்டுகளில் மூவாயிரம் தொழிற்சங்கப் போராட்டங்களும் வீதி ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றுள்ளன. ஆனால், ஒருவர் கூடக் கொல்லப்படவில்லை. இதுவே எங்கள் ஜனநாயகம் என்று ரணில் வீர வாக்கியம் பேசினார். ஆனால் நான்கரை ஆண்டுகளுக்குள் இத்தனை ஆர்ப்பாட்டங்கள் ஏற்படும் வகையில்தான் ஐ.தே.க.வின் ஆட்சி இருந்தது என்ற கசப்பான உண்மையை வசதியாக ரணில் மறந்து போனார்.

தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற ரயில்வே ஊழியர்களின் சம்பள அதிகரிப்புப் போராட்டம் அன்றாடம் தொழிலுக்காகப் பயணிக்கும் மக்களுக்கு எவ்வளவு இடையூறாக இருந்தது என்பதை நாட்டின் மக்கள் அறிந்து வைத்திருந்தார்கள். தேர்தலுக்கு சற்று முன்பாக சமயல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களுக்குப் பஞ்சமே இல்லாத அளவுக்கு ஒவ்வொரு நாளும் அது நடந்துகொண்டே இருந்தது.

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் இவை மிகக் குறைவாகவே இடம்பெற்றது. மக்கள் அவற்றை ஒப்பிட்டுப் பார்த்துள்ளனர். ரணிலின் கையாலாகத்தனத்தையும் தற்துணிவின்மையையும் அதீத ஜனநாயக வேசத்தால் அவர் மறைத்துக் கொண்டு வந்தார். ரணிலை சிங்கள பௌத்தர்கள் மிகச் சிறந்த ஒரு பௌத்த தலைவராக ஒருபொழுதும் ஏற்றதில்லை என்பது இந்தத் தேர்தலில் நன்கு பிரதிபலித்துள்ளது.

தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக களனி ரஜமகா விகாரையின் தாயக்க சபா தலைவர் பதவியிலிருந்து அவரை களனி ரஜமகா விகாரை விலக்கியது. இது சிங்கள பௌத்தர்களுக்கு மத்தியில் ரணில் குறித்து ஏற்பட்ட மிக முக்கிய மனநிலை மாற்றமாகும். ரணிலின் செல்வாக்கு அவ்விகாரையிலிருந்து அவருக்குத் தெரியாமலேயே துடைத்தெறியப்பட்டது. களனி ரஜமகா விகாரை ரணிலின் குடும்பத்தினால் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தனது பிரதமர் பதவியை விட தாயக்க சபா தலைமைப் பதவி பெரிய பதவி என்றே சிங்கள பௌத்தர்கள் கருதுகின்றனர். இதுபோன்ற ஒரு சமூக மதிப்பு மிக்க பதவியைக் கூட ரணிலால் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. இந்நிலையில் அவர் தேர்தலில் குதித்திருந்தால் நிச்சயம் தோல்வி கண்டிருப்பார். அவரைச் சுற்றியிருந்த வளவ்வ பக்தர் கூட்டம் அவரை தேர்தலில் இறக்கியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜே.ஆர்.இற்குப் பின்னர் தோன்றிய மிகப் பெரிய அரசியல் நரித் தந்திரியே ரணில். சிங்கள சிவில் சமூகத்தில் ரணில் பெறுமானமற்ற அல்லது தலைமைத்துவ கவர்ச்சியற்ற ஒரு நபராகவே பார்க்கப்படுகின்றார் என்பதற்கு இதுவோர் உதாரணம் மட்டுமே.

ரணிலின் மேற்கத்தேய சார்பும் ஐ.தே.க.வின் பின்னடைவுக்கு இன்னொரு முக்கிய காரணமாகும். புஷ் ஈராக் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தை நியாயப்படுத்திய ஒரேயொரு மூன்றாம் மண்டலத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவே. பயங்கரவாதத்திற்கு எதிரான போரை நியாயப்படுத்திய ரணில், கோமாவில் இருந்து இறந்த ஏரியல் ஷெரோனின் மரணத்திற்கு அனுதாபக் குறிப்பு எழுதுவதற்கு டில்லி சென்றவர். தூக்கத்திலும் கனவிலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்று புலம்பித் திரிந்தவர்.

2003 மூதூர் பற்றியெரிந்ததற்குப் பின்னர் சாம்பல் மீது தண்ணீர் தெளிக்கச் சென்றவர். நரேந்திர மோசடியின் அரசு காஷ்மீரின் சிறப்பதிகாரத்தை ரத்துச் செய்தபோது காஷ்மீர் விவகாரம் இந்தியாவின் உள்விவகாரம் என்று மோடியை நியாயப்படுத்தியவர் ரணில். இலங்கையில் இனி நடக்கப் போகும் எந்தவொரு தேர்தலிலும் ஐ.தே.க. வெற்றி பெற வேண்டுமாயின் அது ரணில் இல்லாத கட்சியாக இருப்பது தான் அடிப்படை நிபந்தனை.

முஸ்லிம்கள் உலகம் அழியும் வரை ஐ.தே.க.வின் ஆதரவாளர்களாக இருக்க வேண்டும் என்பதுமல்ல. கால, வர்த்தமான சூழ்நிலைகளுக்கு ஏற்ப அரசியலில் நமது மூலோபாயங்களையும் செயற்திட்டங்களையும் மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. ரணிலைத் தலைவராகக் கொண்ட ஒரு ஐக்கிய தேசியக் கட்சி என்பது இதற்குப் பின்னரான இலங்கையின் அரசியலில் மிக ஆபத்தானது என்பதை முஸ்லிம்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், சஜித்தைத் திட்டமிட்டுத் தோற்கடித்தவர் ரணில்தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.


நான்கரை ஆண்டு கால நல்லாட்சியில் ரணில் சாதித்தது எதுவுமில்லை என்பதோடு, 2014 டிசம்பர் தேர்தல் பிரச்சார மேடைகளில் அவர் அளித்த எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. ரணிலின் இந்த அரசியல் வங்குரோத்தின் இறுதி விளைவை துரதிஷ்டவசமாக சஜித் அனுபவிக்க நேர்ந்துள்ளது. இது ஐ.தே.க. உறுப்பினர்களுக்கும் பக்தர்களுக்கும் கற்றுக் கொடுத்துள்ள கசப்பான பாடம். இன்னொரு முறை இது மீளக் கூடாது. அதுவே ஜனநாயகத்தை நேசிக்கும் ஒவ்வொரு இலங்கையரினதும் எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தல் முடிவு: முஸ்லிம் சமூகம் இனி என்ன செய்ய வேண்டும்?

• கலாநிதி பாஸில்

அரசியல்துறை தலைவர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்





இலங்கையில் ஜனாதிபதிகளைத் தீர்மானிக்கின்ற சக்திகளாக சிறுபான்மையினர் முக்கிய பங்களிப்பைச் செய்து வந்த நிலையில், சனிக்கிழமை நடைபெற்ற தேர்தலிலே சிங்கள மக்கள் ஒன்றிணையப் போகிறார்கள் என்பதையும், அந்த ஒன்றிணைவு 50 சதவீதத்தைத் தாண்டிச் செல்லப் போகிறது என்பதையும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் அனுமானிக்கவில்லையா என்கிற கேள்வி எழுவதாக, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அரசியல் துறை தலைவர் கலாநிதி எம்.எம். பாஸில் தெரிவித்தார்.

இலங்கையின் 7ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக, கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட தேர்தலில், சிங்கள மக்களின் அமோக ஆதரவுடன் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார். தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்து பெரும்பான்மையான வாக்குகளை வழங்கிய ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸ, இந்த தேர்தலில் தோல்வியடைந்துள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில், முஸ்லிம் மக்களின் அரசியல் குறித்து, எதிர்காலத்தில் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது பற்றியும், கலாநிதி பாஸில் "தேர்தலுக்குப் பின்னரான தற்போதைய சூழ்நிலையை மிகக் கவனமாகப் புரிந்து கொண்டு, முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்து, தமது சமூகத்துக்காக பெரும்பான்மை மக்களின் ஆதரவுள்ள அரசியல் தலைமைகளோடு ஒத்திசைந்து போவது பற்றி யோசிக்க வேண்டும்" என குறிப்பிடுகிறார்.

### முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

இலங்கை முஸ்லிம்களை பொறுத்தவரை, அவர்களின் அரசியல் போக்கு, மிக முக்கியமான மாற்றம் மற்றும் சிக்கல்களுக்குள் அகப்பட்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையில் தமிழ் மக்கள் எவ்வாறான எதிர்ப்பு அரசியல் நிலைமைகளை - சிங்கள பெரும்பான்மை சமூகத்திலிருந்து எதிர் நோக்கினார்களோ, அதனை ஒத்த மாதிரியான நிகழ்வுகள், யுத்தத்துக்குப் பின்னரும் இடம்பெற்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக எழுச்சியடைய முற்பட்ட தமிழ் சமூகமானது, பெரும்பான்மை சிங்கள சமூகத்தின் அரசியல் ரீதியான செயற்பாட்டின் ஊடாக, சிறுமைப்படுத்தப்பட்ட ஒரு சூழ்நிலை தென்பட்டிருக்கிற வேளையிலே, முஸ்லிம் சமூகம் தன்னை ஒழுங்கமைத்துக் கொண்டு எழுச்சியடைந்து வருகிறது. ஆனால், தற்போது அந்த சமூகமும், இலங்கையின் அரசியல் வரலாற்றில் மீளவும் ஒரு சவாலுக்கு உட்பட்டுள்ளது. முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்த வரைக்கும், யுத்தத்திற்கு பின்னர் அவர்களுடைய அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்கள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் குறித்து எதிர்ப்புப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களுடைய அரசியல், சமூக, பொருளாதார இருப்புக்கள் அழிவுக்குட்படுத்தப்படுகின்ற சூழ்நிலைகள் தோன்றியிருக்கின்றன.

அதேவேளையில், கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலானது, முஸ்லிம் சமூகத்துக்கு பாரிய சவாலை ஏற்படுத்தியிருக்கிறது. முஸ்லிம்களின் இருப்பின் மீதும், அவர்களின் சுதந்திரமாக வாழ்வுரிமை மற்றும் மனித உரிமைகள் மீதும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வாறான சூழ்நிலையில்தான், இலங்கையினுடைய ஏழாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடந்து முடிந்துள்ளதோடு, அதில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார்.

### சிங்கள சமூகத்தின் ஒன்றிணைவு

பொதுஜன பெரமுன கட்சி சார்பில் போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்ஷ 52.25 வீத வாக்குகளை பெற்றிருக்கிறார். மற்றைய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ 41.99 வீத வாக்குகளை மட்டும் பெற்றிருக்கின்றார். இந்த நிலவரமானது இந்த நாட்டினுடைய சிறுபான்மையினர் பற்றிய மிக முக்கியமான செய்தியை சொல்ல வருகிறது.

இலங்கையில், முஸ்லிம்களுடைய அரசியல் இருப்பு கேள்விக்குட்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் மிக முக்கிய அம்சமாக, சிங்கள தேசிய வாதத்தின் மீள் எழுச்சி இடம்பெற்றிருக்கிறது. சிங்கள மக்களோடு வாழ்கிற முஸ்லிம்கள் சார்பாக விடப்பட்ட தவறுகள் இதற்குப் பங்களித்திருக்கலாமென்றும் பார்க்கப்படுகிறது.

தற்போது 52 வீதத்தையும் தாண்டிய வெற்றியினை கோட்டாபய ராஜபக்ஷ பெற்றிருக்கும் நிலையில், இலங்கை முஸ்லிம்கள் இந்த தேர்தலில் வழிநடத்தப்பட்டமை குறித்தும் நாங்கள் மிக கவனமாகப் பார்க்க வேண்டியிருக்கிறது. சிங்கள பெரும்பான்மை மக்கள், பல விடயங்களூடாக ஒன்றிணைக்கப்பட்டார்கள். சிறுபான்மையினருக்கு எதிரான கருத்துப் பிரச்சாரங்களின் ஊடாகவும், எதிர்ப்பு பிரச்சாரத்தின் ஊடாகவும், அந்த ஒழுங்கமைப்புகள் இடம்பெற்றன.

மேலும் ஏப்ரல் 21ஆம் திகதி நடந்த பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர், சிங்கள மக்கள் மத்தியில் பாதுகாப்புப் பற்றிய ஒரு அச்சம் ஏற்பட்டதோடு, பலம் வாய்ந்த அரசியல் தலைவர் ஒருவரின் தேவையும் வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சூழ்நிலை ஏற்படுத்துவதற்கு தேசிய சூழல், சர்வதேசத்தின் தலையீடு போன்றன பின்னணியில் இருந்திருக்கலாம் என்கிற பார்வையும் உள்ளது. இதன் அடிப்படையில் சிங்களச் சமூகம் ஒன்றிணைந்திருக்கின்ற வேளையிலே, முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மிகக் கவனமாகச் சிந்தித்து, தமது சமூகத்தை வழி நடத்தியிருக்க வேண்டும் என்கிற கருத்து உள்ளது.

### கவனிக்கத் தவறிய விடயங்கள்

அந்த வகையில் பார்க்கின்ற போது, சிங்கள மக்களின் ஒன்று திரண்ட செயற்பாட்டினை, முஸ்லிம் தலைவர்கள் அனுமானித்துக் கொள்ளவில்லையா, அல்லது விளங்கிக் கொள்ளவில்லையோ என்கிற கேள்விகளும் எழுந்துள்ளன.

இலங்கையில் ஜனாதிபதிகளைத் தீர்மானிக்கின்ற சக்திகளாக சிறுபான்மையினர் முக்கிய பங்களிப்பைச் செய்து வந்திருக்கின்றனர். ஆனால் இந்தத் தேர்தலிலே சிங்கள மக்கள் ஒன்றிணையப் போகிறார்கள் என்பதையும், அந்த ஒன்றிணைவு 50 வீதத்தைத் தாண்டிச் செல்லப் போகிறது என்பதையும் முஸ்லிம்களை வழிநடத்தி வரும் - முஸ்லிம் அரசியல் தலைமைகளான ரஊப் ஹக்கீமும், ரிசாட் பதியுதீனும் அனுமானிக்கவில்லையா என்கிற கேள்வி எழுகிறது.

### பலமிழந்த சிறுபான்மையினர்

1990களிலே அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸவுடன் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் இணைந்திருந்த காலம் மற்றும் ஜனாதிபதி சந்திரிக்காவுடன் அஷ்ரப் இணைந்திருந்த காலங்களில் ஜனாதிபதிகளைத் தீர்மானிக்கின்ற சக்தியாக சிறுபான்மையின மக்கள் இருந்து வந்துள்ளார்கள். 2015ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் இதனை மிகத் தெளிவாகக் கண்டோம்.

ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ வெற்றியீட்டியுள்ள இந்தத் தேர்தல் முடிவானது, சிறுபான்மையினரின் ஆதரவில்லாமலேயே, ஜனாதிபதியொருவரை பெரும்பான்மை இனத்தவர்கள் தெரிவு செய்வதற்கானதொரு நிலையினை ஏற்படுத்தியிருக்கின்றது.

வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள முஸ்லிம்கள் ஆங்காங்கே கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்திருந்தாலும் கூட, வடக்கு, கிழக்கிலே தமிழர்களுடன் ஒன்றிணைந்து வாழ்கின்ற முஸ்லிம்கள், பெரும்பாலும் தமது வாக்குகளை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கினர். இதன் காரணத்தினால், முஸ்லிம்களுடைய பங்குபற்றுதல் இல்லாமலேயே சிங்கள ஜனாதிபதியொருவரை சிங்கள சமூகம் தெரிவுசெய்திருக்கிறது. இந்த ஜனாதிபதி ஆட்சி முறைமை சிறுபான்மையினருக்கு சாதமானது என்று சொல்லப்பட்ட போதிலும், அது இன்று கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் முக்கியத்துவம் இழக்கப்பட்டிருக்கிற தற்போதைய சூழ்நிலையில், ஜனாதிபதி தேர்தலிலே முஸ்லிம்களின் பேரம் பேசும் சக்தியும் கேள்விக்குரியதாக மாறியுள்ளதோடு, அது தேவையில்லை என்கிற சூழ்நிலையினையும் இந்தத் தேர்தல் முடிவு வெளிக்காட்டியிருக்கிறது.

### செய்ய வேண்டியவை என்ன?

எனவே, முஸ்லிம் தலைமைகள் மீண்டும் மிகக் கவனமாகச் சிந்தித்து, தங்கள் அரசியல் செயல்முறைமையினை கொண்டு நடத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. இங்கு இரண்டு வகையான செய்திகளை என்னால் சொல்ல முடியும். ஒன்று முஸ்லிம் சமூகத்துக்கானது. மற்றையது முஸ்லிம் சமூகத்தை வழிநடத்தும் அரசியல் தலைமைகளுக்கானது.

முஸ்லிம் சமூகம் மிகவும் அவதானத்துடன் கவனமாகச் சிந்தித்து பெரும்பான்மைச் சமூகத்தோடு இந்த நாட்டிலே ஒன்றித்துச் செயற்பட வேண்டும் என்கிறதொரு செய்தி சிங்களப் பெரும்பான்மையினரால் முஸ்லிம்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது. எனவே, அவர்களோடு ஒற்றுமையாக வாழ்வதற்குரிய வழிமுறைகளை முஸ்லிம்கள் தேட வேண்டும்.

இந்த நாட்டின் இனத்துவ வீதாசாரப் புள்ளி விவரத்தின் படி, 74 வீதத்தினர் சிங்களவர்களாக இருக்கின்றனர். அதன் காரணத்தினால் சிறுபான்மையினர் அரசியலில் பெரும் செல்வாக்கினை தொடர்ந்தும் செலுத்த முடியாத நிலைமை இருப்பதனாலும், முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுவதனாலும், முஸ்லிம்கள் ஒத்தியங்கிப் போய் தங்களின் வாழ்க்கையினையும் தம்முடைய எதிர்கால சமூகத்தின் வாழ்க்கையினையும் நிலைப்படுத்துவதற்கான தேவையினைத் தேட வேண்டியுள்ளது

அடுத்து நான் கூறும் செய்தி, இந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகளுக்கிணங்க முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து, மிக முக்கியமான ஒரு விடயத்தைக் கவனத்திற்கொள்ள வேண்டும் என்பதாகும். அதாவது எதிர்காலத்தில் முஸ்லிம் சமூகத்தை எப்படி வழிநடத்துவது என்பதாகும். பெரும்பான்மை மக்களுடன் ஒன்றிணைந்து செயற்படக் கூடிய அரசியல் நடவடிக்கைகளை, எதிர்காலத்தில் முஸ்லிம் தலைமைகள் எடுப்பதன் ஊடாகத்தான், முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்க முடியும்.

இந்த நிலையில், அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை (பக்.14)

---

# 2019 தேர்தல் முடிவு குறித்து...

• விக்டர் ஐவன்



ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாவை விட சஜித்துக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என நான் கூறியிருந்தேன்.

ஆனாலும் அது அவ்வாறு நடக்கவில்லை. அதனுடைய பரிமாணம் எனக்குப் புரியாத புதிராகவிருக்கின்றது. அதனால் இந்தப் புதிரை விடுவிப்பதற்கான முயற்சிகளில் இறங்கினேன். ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பான மக்களுக்கு மேலதிகமாக வறிய மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் ஈர்ப்பு சஜித்துக்குக் கிடைக்கும் என்பது எனது கருத்தாகவிருந்தது. அவரது தந்தை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஏழைகளினதும் ஒடுக்கப்பட்டவர்களினதும் உள்ளங்களைக் கவரும் வண்ணம் பல சேவைகளைச் செய்த தலைவராக இருந்தார்.

தற்பொழுது சமுர்த்தி என நடைமுறைப்படுத்தப்படுகின்ற முன்னைய ஜனசவிய செயற்திட்டம் ஏழை மக்களுக்காக அவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அவரது வீடமைப்புத் திட்டங்களினால் வீடுகளுக்குச் சொந்தக்காரரானவர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். ஆடைத் தொழிற்சாலைகளும் அவருடையதே. இதனால் பயன்பெற்ற ஏழைக் குமரிகளும் ஏராளமானோர் இருக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கு மேலதிகமாக சஜித் இவர்கள் அனைவரினதும் ஆதரவைப் பெறுவார் என்பதே எனது கணிப்பாக இருந்தது.

எனது புதிருக்கு விடை இவ்வாறு கிடைத்தது. 2019 இல் கோதாபய பெற்ற வெற்றியை 1956 புரட்சியின் மறுபதிப்பாகக் கருத முடியும். ஹொவார்ட் ரிகின்ஸ் உடைய (Howard Wriggins) "Ceylon: Dilemmas of a New Nation எனும் நூல் 56 புரட்சியை விபரமாக விளக்குகின்ற சிறந்த தொரு நூல். ரிகின்ஸ் (1918-2008) கொலம்பியா பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் மற்றும் சர்வதேச விவகாரங்கள் பேராசியராகத் திகழ்ந்தார். பல வருடங்களாகவே அவர் சர்வதேச விவகாரங்களில் இலங்கை தொடர்பிலான சிறந்த விமர்சகராக அறியப்பட்டிருந்தார். 1977 -1979 காலப் பகுதியில் அவர் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராகவும் கடமையாற்றினார். மேலே குறிப்பிடப்பட்ட நூல் 1960 இல் அவரால் எழுதப்பட்டது. அவர் கே.எம். டி சில்வாவினால் திருத்தி அமைக்கப்பட்ட ஜே.ஆர்.ஜயவர்தன சுயசரிதையின் தொகுப்பாளராகவும் செயலாற்றினார்.

56 புரட்சியில் தாக்கம் செலுத்திய சிங்கள பௌத்த பதற்ற நிலை தொடர்பிலும் அந்த நிலைமையை வெற்றி கொள்வதற்கு சிங்கள பௌத்த இயக்கங்களின் பிக்குமாரையும் நாடு முழுவதிலும் உள்ள பன்சலைகளையும் பயன்படுத்தி 1953 முதல் 56 இன் வெற்றி வரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட நுணுக்கமான வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் அவர் அந்த நூலில் குறிப்பிடுகின்றார். கோத்தாவின் வெற்றிக்கென முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளும் பெரும்பாலும் இதனையொத்ததாகவே அமைந்திருந்தன.

1956 புரட்சியைப் போலவே 2019 புரட்சியினதும் அரசியல் இயந்திரமாக பிக்குமாரே செயற்பட்டிருக்கிறார்கள். முதல் புரட்சியைப் போலவே இரண்டாம் புரட்சியிலும் மக்களின் மூளைகளைச் சலவை செய்யும் தலமாக பன்சலைகளே செயற்பட்டன.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை தோல்வியடையச் செய்த விடயமானது சிங்கள பௌத்த சக்திகளை திக்குமுக்காட வைத்தது. இவர்கள் இப் பெறுபேற்றினை, தெற்கின் சிறியதொரு பௌத்த எதிர்ப்புக் கூட்டம் தமிழ் முஸ்லிம் சக்திகளோடு கூட்டுச் சேர்ந்து சிங்கள பௌத்த சக்திகளது வெற்றியை பறித்துக் கொண்டதாகவே நோக்கினர்.

இவ்வாறானதொரு நிலைமை மீள உருவாவதை தடுத்துக் கொள்வதற்காக வேண்டி தமிழ் முஸ்லிம் மக்களது ஆதரவின்றியே சிங்கள வாக்காளர்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட வெற்றிக்காக சிங்கள பௌத்தர்களின் சிந்தனையை மாற்றியமைக்கும் வேலைத்திட்டத்தில் இறங்கினார்கள். சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டு வந்த இன, மதம் குறித்த பாதுகாப்பற்ற நிலைமை குறித்த அச்சம், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னர் மிகப்பெரும் அச்ச நிலையாக மாறுவதற்கு காரணமாய் அமைந்தது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் பொழுது சிங்கள இனத்தினதும் பௌத்த சமயத்தினதும் பாதுகாப்புக்காக வேண்டி தனிச் சிங்கள வாக்குகளால் கோட்டாபய ராஜபக்ஷவை தெரிவுசெய்ய வேண்டும் என்கின்ற கடுமையான மனோநிலையில் சிங்களவர்கள் காணப்பட்டார்கள். வறுமை மற்றும் ஜனநாயக உரிமைகளை கவனத்திற்கொள்ளும் மனோநிலை அவர்களிடம் காணப்படவில்லை. சிங்கள இனமும் பௌத்த சமயமும் நிச்சயமற்ற நிலையில் காணப்படுகிறது என்கின்ற உளவியல் போக்கில் இருந்தார்கள். இத்தகைய சூழ்நிலையில் சஜித்தை விடுத்து அவரை விட ஒசத்தியான ஒருவரால் கூட, கோட்டாபயவை தோற்கடிக்க முடியுமான இயலுமை காணப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் இனங்களுக்கிடையிலான பிளவுகளையே கோடிட்டுக் காட்டுகின்றன



**கலாநிதி ஜெஹான் பெரேரா**
சிவில் சமூக செயற்பாட்டாளர் மற்றும் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர்

**இந்நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமெனில் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்ப வேண்டும் என்பதை கோட்டாபய ராஜபக்ஷ நன்கு அறிந்திருப்பார். எனவே அவர் இதற்காக வேண்டி செயற்பட வேண்டும்.**

- **தற்பொழுது ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்துள்ளது. இந்தத் தேர்தலில் நாட்டு மக்கள் வழங்கிய தீர்ப்பை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

இம்முறை தேர்தல் முடிவுகள் தெளிவாகவே இனங்களுக்கிடையிலான பிரிவினையே கோடிட்டுக் காட்டுகின்றது. வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் ஒரு பக்கத்திற்கும், தெற்கிலுள்ள மக்கள் இன்னுமொரு பக்கத்திற்கும் வாக்களித்தார்கள். வடக்கு கிழக்கைச் சேர்ந்த மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகவே வாக்களித்தனர். அதுவல்லாமல் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்கவில்லை. ஏனெனில் சஜித் பிரேமதாசவை அம்மக்களுக்கு அவ்வளவு அறிமுகம் போதாது. கோட்டாபய முன்வைத்த பிரதான கொள்கைத் திட்டத்தை எதிர்த்தே அம்மக்கள் வாக்களித்தார்கள். தேசியப் பாதுகாப்பு என்பதே அவரது பிரதான கொள்கைத் திட்டமாகக் காணப்பட்டது. இதுவே அவரது கொள்கைத் திட்டங்களில் முதன்மை விடயமாகக் காணப்பட்டது.

மறுபுறத்தில் சிங்களப் பெரும்பான்மை மக்கள் கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த கொள்கைத் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்து வாக்களித்துள்ளனர். இதில் தேசியப் பாதுகாப்பும் தேசிய அபிமானமுமே மிக முக்கிய விடயங்களாகும். எனவே தேசியப் பாதுகாப்புக்கும் தேசிய அபிமானத்திற்குமே முதலிடம் வழங்கப்பட்டுள்ளது. தேசியப் பாதுகாப்பு என்னும் விடயம் தங்களுக்கு எதிரானது என்பதாகவே தமிழ் முஸ்லிம் சிறுபான்மை மக்கள் நோக்குகின்றனர். தங்களை நோக்கியே இந்த தேசியப் பாதுகாப்பு என்கின்ற விடயம் கொண்டுவரப்படுகின்றது என்பதே இவர்களது நிலைப்பாடாக உள்ளது. இம்மக்கள் மத்தியில் தேசியப் பாதுகாப்பு என்பதன் மூலம் மிகப்பெரும் சந்தேக நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பிளவுபட்டுள்ள சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை மக்களை ஒன்றிணைக்கும் மிகப்பெரும் பொறுப்பு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உள்ளது.

- **வடகிழக்கைச் சேர்ந்த மக்கள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்து வாக்களித்துள்ளனர். இந்நிலை எதிர்வரும் காலங்களில் எப்படியான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

இதுவே மிகப்பெரும் சவாலாகும். இதுபோன்றதொரு சவாலான கட்டம் யுத்த வெற்றியைத் தொடர்ந்து 2010 இல் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஏற்பட்டது. நூற்றுக்கு நூறு வீத மக்களது தலைவராக மஹிந்த ராஜபக்ஷவினால் திகழ முடியவில்லை. சிங்களப் பெரும்பான்மையினத்தின் தலைவராகவே அவரால் செயற்பட முடிந்தது. ஒட்டுமொத்த மக்களினதும் விசுவாசத்தை வெல்லக் கூடிய தலைவராக இவர் திகழவில்லை. தற்பொழுது இது போன்றதொரு சவாலான கட்டத்திலேயே கோட்டாபய ராஜபக்ஷவும் உள்ளார். எல்லா மக்களினதும் உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கான பாதுகாப்பை வழங்கும் தலைவராக கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட வேண்டியுள்ளார்.

சகல இன மக்களுக்கும் ஒரே மாதிரியான பாதுகாப்பு இருக்க வேண்டும். இவ்வாட்சி முறையில் ஒரே மாதிரியான உரிமைகள் காணப்பட வேண்டும். மக்களது தேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அபிவிருத்தி வசதிகளை கவனத்திற் கொள்ள வேண்டும். அவர்களது தேவைகளைச் செவிமடுக்க வேண்டும். இவையே புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முன்னால் காணப்படுகின்ற சவால்களாகும்.

- **தற்பொழுது நாட்டின் ஜனாதிபதியாக பொதுஜன பெரமுனவை சேர்ந்த கோட்டாபய ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஆனால் அரசாங்கம் இன்னும் ஐதேகாவை முதன்மையாகக் கொண்ட கூட்டணியிடம் உள்ளது. பொதுத் தேர்தல் நடைபெறும் வரையில் இந்நிலைமை எவ்வாறு காணப்படும்?**

தற்பொழுது கூட பெரும்பாலான அமைச்சர்கள் பதவி விலகல் கடிதங்களை (17ஆம் திகதி) ஒப்படைத்துக் கொண்டுள்ளனர். பெரும்பாலும் நாளைய தினம் (18) அல்லது அதற்குப் பிந்திய தினத்தில் பிரதமரும் தனது இராஜினாமா கடிதத்தை ஒப்படைப்பார் என நான் நினைக்கின்றேன். அதன் பிறகு புதிய ஜனாதிபதிக்கு பிரதமரையும் அமைச்சரவையையும் நியமிக்க வேண்டியேற்படும். இது நிச்சயமற்றது, பிரதமர் தனது இராஜினாமா கடிதத்தை ஒப்படைப்பார் என நான் நம்புகின்றேன். சிலவேளை அவர் பதவி விலகாமலும் இருக்கக்கூடும்.

- **பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதவி விலகாமல் கோட்டாபய ராஜபக்ஷவினுடைய பிரஜா உரிமை குறித்த சர்ச்சையை மேலெழுப்பி அதிகாரத்தைக் கைப்பற்றும் போராட்டத்தில் குதிக்கும் சாத்தியங்கள் காணப்படுகின்றதா?**

நாம் அவ்வாறு நினைக்கவில்லை. இதுபோன்ற தெளிவானதொரு வெற்றி கிடைக்கும் போது நீதிமன்றம் கூட இதற்கு எதிராக செயற்படும் என நான் கருதவில்லை. நீதிமன்றத்தினால் அவருடைய பிரஜாவுரிமை குறித்த பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று நான் கருதவில்லை. ஜனநாயகம் என்பது பெரும்பான்மை மக்களது விருப்பத்துக்குக் கட்டுப்படுவதாகும். இதற்குத் தான் முதலிடம் வழங்கப்பட வேண்டும்.

- **புதிய ஜனாதிபதி மற்றும் அவரது அரசாங்கத்துக்கு கீழால் சிறுபான்மை மக்களாகிய நாம் எமக்கான சலுகைகள் மற்றும் உரிமைகளை எவ்வாறு வென்றெடுக்க வேண்டும்?**

சிறுபான்மை மக்கள் தங்களது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். அம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் இப்பொறுப்பை ஏற்க வேண்டும். எனினும் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜனாதிபதியின் முக்கிய பொறுப்பாக தேசியப் பாதுகாப்பு காணப்படுகிறது. அதனை அவர் உறுதிப்படுத்த முயற்சிப்பார். இதனால் சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் அம்மக்களது உரிமைகளை வேண்டுகின்ற போது, அவ்வுரிமைகளை வென்றெடுக்க செயற்படுகின்ற போது இவை தேசியப் பாதுகாப்புக்கு பாதிப்பானதல்ல என்பதை காண்பிக்க வேண்டியேற்படும். இந்த நம்பிக்கையை புதிய ஜனாதிபதிக்கு சிறுபான்மைத் தலைவர்கள் காண்பிக்க வேண்டும். இது கட்டாயமான விடயம்.

- **ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் சிறுபான்மை மக்களது பாதுகாப்பு மற்றும் உரிமைகள் உத்தரவாதப் படுத்தப்படும் என நீங்கள் கருதுகிறீர்களா?**

இந்நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமெனில் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்ப வேண்டும் என்பதை கோட்டாபய ராஜபக்ஷ நன்கு அறிந்திருப்பார். எனவே அவர் இதற்காக வேண்டி செயற்பட வேண்டும். பெரும்பாலும் அவரது கட்சி மற்றும் அவரது கடந்த கால செயற்பாடுகளை நோக்கும் போது அவர் பொருளாதார அபிவிருத்தியையே கட்டியெழுப்பார். பொருளாதார அபிவிருத்தியின் மூலம் சகல இன மக்களினதும் உரிமைகளையும் பாதுகாக்க முயற்சிப்பார் என்று நான் கருதுகின்றேன்.

அதிகாரப் பகிர்வு என்கின்ற விடயங்களைக் கையில் எடுக்காமல் பொருளாதார அபிவிருத்திற் கூடாக சிறுபான்மை மக்களது உரிமைகளை பாதுகாக்கவே முயற்சிப்பார்கள். இவ்விடயம் எல்லா மக்களுக்கும் சமமாகச் செல்ல வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. பிற்பட்ட காலத்தில் நம்பிக்கைகள் கட்டியெழுப்பப்படுகின்ற போது தமிழ் சமூகத்திற்கு விஷேட உரிமைகளை வழங் குவது குறித்தும் சிந்திக்க முடியும். ஆனாலும் நான் நினைக்கின்றேன் அதற்கு இன்னும் அதிக காலம் செலவாகும் என்று.

- **வடகிழக்கிலுள்ள சிறுபான்மை மக்கள் சஜித் பிரேமதாசவிற்கே அறுதிப் பெரும்பான்மையை கொடுத்துள்ளனர். அது போன்று தெற்கி லுள்ள சிங்களப் பெரும்பான்மை மக்களும் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு பெரும் பான்மை வாக்குகளை அளித்துள்ளனர். இந்நிலையில் சிறுபான்மை மக்கள் தற்பொழுது தங்களது எதிர்காலம் குறித்த அச்ச நிலையில் உறைந்து போயுள்ளனர். இந்நிலையை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

இவ் அச்சநிலையை போக்குவதே புதிய ஜனாதிபதிக்குள்ள சவாலாகக் காணப்படுகின்றது. புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனக்கு வாக்களித்த 52 வீதமான மக்களுக்கு மாத்திரமல்லாமல் சகல இன மக்களுக்கும் அதாவது தனக்கு வாக்களிக்காத மக்களதும் உரிமைகள் மற்றும் சலுகைகளை பாதுகாத்துக் கொடுக்க வேண்டும். இந்த சவால் அவருக்கு உள்ளது. அதனை அவர் நிறைவேற்றுவதாக தேர்தல்கள் ஆணையாளர் இறுதி முடிவை அறிவித்த சமயத்தில் கூறியிருந்தார்.

- **சிறுபான்மை மக்கள் மத்தியில் காணப்படுகின்ற சிவில் சமூக அமைப்புக்கள் இந்தத் தேர்தலைத் தொடர்ந்து நாட்டில் நீண்ட கால சமாதானம் மற்றும் சகவாழ்வு உருவாவதற்கு எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

இந்நாட்டில் பிரிவினை, பேதம் காணப்பட்டது என்பது எமக்குத் தெரியும். எனவே இப்பிரிவினையை குணப்படுத்தும் பொறுப்பே எம்மிடம் முதன்மையாகக் காணப்பட வேண்டும். அத்துடன் சமூகங்களுக்கிடையிலான நம்பிக்கையையும் கட்டியெழுப்ப வேண்டும். சகல இன மக்களையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி விட வேண்டும். ஒருவர் குறித்து மற்றவர் மத்தியில் காணப்படுகின்ற அச்சம், சந்தேக நிலைமைகளை போக்க வேண்டும். அவர்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். சமுதாயத்தின் அடிமட்டத்திலிருந்து நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். இதுவே எமது மிகப்பெரும் கடப்பாடாகும்.




நாட்டின் தேர்தல் திருவிழா நிறைவுபெற்றிருக்கிறது. மத உணர்வுகள் போல மக்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்துள்ள சில விடயங்கள் இருப்பதனை தேர்தல் எடுத்துக் காட்டியிருக்கிறது. இந்த வகையில் மதஸ்தலங்கள் தேர்தல் பிரச்சாரங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட கதைகளை தேர்தல் கண்காணிப்பு முகவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

பௌத்த வழிபாட்டுத் தலங்கள் அரசியல் பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற சந்தேகம் ஏனைய தரப்புக்களிடம் இருப்பது போலவே முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் ஊடாக ஜனாதிபதி கோதாபயவுக்கு எதிரான பிரச்சாரம் நடந்ததாக சிங்களவர் சந்தேகிக்கின்றனர். இந்தச் சந்தேகங்கள் வலுக்குமானால் மதஸ்தலங்களும் கூட அரசியல் சாக்கடையில் விழுவது தவிர்க்க முடியாமல் போய்விடும்.

பௌத்த விகாரைகளை வாக்குச் சாவடிகளாகப் பயன்படுத்துவது தொடர்பில் பபரல் அமைப்பு மாற்றுக் கருத்துக்களை முன்வைத்துள்ளது. நாட்டின் பல்வேறு இடங்களிலும் பௌத்த விகாரைகள் வாக்குச் சாவடிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிங்கள சமூகம் பன்சலைகளினூடாக இனரீதியாக ஒன்று சேர்க்கப்படுகின்றனர் என்ற கதைகள் பரவலாக அடிபடும் நிலையில் வாக்குச் சாவடிகளையும் அங்கு கொண்டு போய் அமைப்பது சந்தேகங்களை வலுக்கத் தான் செய்யும். தேர்தல் கடமைக்காகச் செல்லும் அதிகமான முஸ்லிம் பெண்கள் விகாரைகளில் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த நிலையில் பெரும்பான்மைச் சமூகங்கள் மாத்திரமே தேர்தல் உத்தியோகத்தர்களாகக் கடமை புரியும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

நாட்டின் மொத்த அரசாங்க உத்தியோகத்தர் படையிலிருந்து தேர்தல் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். தேர்தல் கடமையில் ஈடுபடுபவர்கள் தங்களது வாக்குகளை தபால் மூல வாக்குகளாக ஏற்கனவே வாக்களித்துவிட்டே கடமைக்குச் செல்கி றார்கள். தேர்தல் முடிவுகள் வரும் போது தபால் மூல வாக்குகளில் பெரும்பாலானவை குறித்த ஒரு வேட்பாளருக்குப் போடப்பட் டுள்ளமை தெரியவருகிறது. தபால் வாக்குகளில் வெற்றி பெறுபவர் தான் தேர்தலில் வெற்றி பெறுவார் என்ற கருத்துக்களும் தேர்தல் மேடைகளில் சொல்லப் பட்டன. இந்த வகையில் தேர்தல் கடமை களில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களில் பெரும்பாலானவர்கள் குறித்ததொரு வேட்பாளருக்கு சார்பானவர்கள் என்ற நிலை தோன்றுகிறது. அந்த வேட்பாளரே தேர்தலில் வெற்றி பெறும் நிலையும் இருப்பதனால் மதஸ்தலங்கள் வாக்குச் சாவடிகளாகவும் பயன்படுத்தப்படும் போது தேர்தல் மீதான மக்களின் நம்பிக்கை குறைந்து விடுகிறது.

இதனால் பபரல் அமைப்பு சுட்டிக் காட்டியது போல எதிர்காலங்களில் மதஸ்தலங்களை வாக்குச் சாவடிகளாகப் பயன்படுத்துவது தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

அதேபோல மதஸ்தலங்களை தேர்தல் பிரச்சாரங்களுக்காகப் பயன்படுத்துவதும் தவிர்க்கப்பட வேண்டும். தேர்தல் சட்ட விதிகளின் கீழ் மதஸ்தலங்கள் தேர்தல் பிரச்சாரத்துக்காகப் பயன் படுத்தப்படுவது தேர்தல் விதிகளை மீறும் செயற்பாடாகும். ஆனால் இஸ்லாம் வேறு, உலகம் வேறு, இஸ்லாம் வேறு, அரசியல் வேறு என்றெல்லாம் போதித்த சில பள்ளிவாசல்களுக்கு தேர்தல் என்று வரும் போது இஸ்லாத்தில் அரசியலும் இருப்பது ஞாபகத்துக்கு வருகிறது. எனவே சிலவேளைகளில் குத்பாக்கள் கூட அரசியல் பிரச்சாரமாக வெளிப்படுகிறது. தேர்தல் விதிகள் என்று வரும்போது இல்லை, நாங்கள் மார்க்கக் கடமையைத் தான் செய்தோம் என்று அரச அதிகாரிகளுக்குச் சொல்லத் தொடங்கினால் பின்னர் தேர்தல் காலங்களில் இந்த மார்க்கக் கடமை தேவையில்லை என்றதொரு தேர்தல் விதியைக் கொண்டு வருவதை அது சாத்தியமாக்கும்.

சம்மாந்துறைப் பள்ளிவாசல் இவ்வாறான தேர்தல் விதிகளை மீறும் வகையில் செயற்படுவதாக குற்றச்சாட்டுக்கள் கிடைத்திருப்பதாக கபே அமைப்பு தெரிவித்திருந்தது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மையாக இருக்குமாக இருந்தால் ஏனைய பள்ளிவாசல்களும் இது போன்ற விடயங்களில் ஈடுபடுவதில் இருந்து தம்மைக் காத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். பள்ளிவாசல்களில் விளம்பரங்கள் செய்வதைக் கூட பெரும்பாலான பள்ளிவாசல்கள் தவிர்த்தே வருகின்றன. பள்ளிவாசல் வளவினுள் துண்டுப் பிரசுரங்கள் வழங்குவதைக் கூட சில பள்ளிவாசல்கள் தடை செய்திருக்கின்றன. இந்த நிலையில் அரசியல் என்று வரும்போது இவை எல்லாவற்றையும் விட்டுக் கொடுப்பது என்பது பள்ளிவாசலின் முக்கியத்துவம் அரசியலாக இருப்பதைக் காட்டுகிறது.

சமூக செயற்பாடுகளில் பள்ளிவாசல்கள் ஈடுபடுவது வரவேற் கத்தக்கதே. சமூகநலனில் அக்கறையுள்ள விடயங்களில் பள்ளிவாசல்கள் நிச்சயம் அக்கறை காட்ட வேண்டும். பிரதேச மக்களின் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக பள்ளிவாசல்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதேவேளை தமது நடவடிக்கைகளினால் மொத்த சமூகமும் பாதிப்படையாமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

பள்ளிவாசல்கள் என்பது ஒவ்வொரு ஊரிலும் உள்ள மத வழிபாட்டுத் தலம் அல்ல. அது முழு சமூகத்தினதும் அடையாளம். பள்ளிவாசலில் வாள்கள் இருந்தன என்பதனூடாக குறித்த பள்ளிவாசல் மட்டும் அடையாளப்படுத்தப்படவில்லை. அதேபோல ஒவ்வொரு பள்ளிவாசலினதும் செயற்பாடுகள் மொத்த சமூகத்தையும் பிரபலிக்கிறது என்பதை நினைவில் வைக்க வேண்டும்.

அரசியல் மதம் கொள்ளாமல் அவதானமாக இருப்பது காலத்தின் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவிலேயே பெருந்தொகை சிறுவர்கள் தடுப்புக் காவலில் உள்ளனர்



ஐக்கிய அமெரிக்காவில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. மேற்கொண்ட புதிய ஆய்வொன்று வெளிப்படுத்தியுள்ளது. சர்வதேச சட்டங்களை உதாசீனம் செய்து புலம் பெயர்வு குற்றச்சாட்டின் பெயரில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டுச் சிறுவர்களை அமெரிக்கா தடுப்புக் காவலில் வைத்துள்ளது என ஐ.நா. தெரிவித்துள்ளது.

உலக அளவில் 18 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் 7 மில்லியனுக்கும் அதிகமானோர் சிறைகளிலும் பொலிஸ் தடுப்புக் காவல் நிலையங்களிலும் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 330,000 சிறுவர்கள் குடியகல்வு தடுப்புக் காவல் நிலையங்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர் மென்ஃப்ரட் நொவாக் தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் மிகக் குறைந்தளவு காலமே -அதுவும் கடைசித் தெரிவாக- தடுத்து வைக்கப்படலாம். ஆனால் இச் சிறுவர்கள் நீண்டகாலமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். சுதந்திரம் பறித்தெடுக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பான ஐ.நா.வின் பூகோள ஆய்வு

## ஐ.நா. அறிக்கை

இது தொடர்பில் பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளது. உலகிலுள்ள 193 தேச அரசுகளிலும் ஆகக் கூடிய எண்ணிக்கையிலான சிறுவர்களை நீண்ட காலம் தடுப்புக் காவலில் வைத்திருக்கும் ஒரே நாடு அமெரிக்கா என்பது பெரும் ஆச்சரியத்தைத் தோற்றுவித்துள்ளது.

குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான சர்வதேச சிறுவர் உரிமைப் பட்டங்களின் படி பெற்றோர்களிடமிருந்து சிறுவர்களைப் பிரித்து வைப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. துரதிஷ்டவசமாக மெக்சிகோ அமெ ரிக்க எல்லைப் புறத்தி லுள்ள குடியல்வு தடுப்புக் காவல் முகாம்களில் ஒரு இலட்சத்திற்கும் அதிக மான சிறுவார்கள் அடைத்து வைக்கப் பட்டு துன்புறுத்தப்படுகின்றனர்.

நொவாக்கின் இந்த அறிக்கை குறித்து அமெரிக்க அதிகாரிகள் இதுவரை எவ்விதக் கருத்தினையம் வெளியிடவில்லை. சர்வதேச சிறுவர் உரிமைப் பட்டயங்கள், சிவில் மற்றும் அரசியல் உரிமை தொடர்பான சாசனங்களை ஏற்றுக் கொண்டுள்ள நாடு என்ற வகையில் வொஷிங்டன் சிறுவர் உரிமைகளை மதிப்பதற்கு முன்வர வேண்டும் என நொவாக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்திய அமெரிக்காவிலிருந்து ஐக்கிய அமெரிக்காவுக்குப் புலம் பெயரும் மக்கள் தொகை சமீபகாலமாக அதிகரித்து வருகின்றது. பொலீவியா, போஸ்ட்வானா, இலங்கை என்பன இது விடயத்தில் அமெரிக்காவுக்கு அடுத்த நாடுகளாக உள்ளன. 18 வயதிற்குக் குறைவான அனைவரும் சிறுவர்கள் என்பதே சர்வதேச சட்டமாகும். இதனை வொஷிங்டன் தொடர்ந்தும் மீறி வருவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று நொவாக் மேலும் தெரிவித்துள்ளார்.

# சர்வதேசப் பார்வை



# லெபனானின் புதிய அரசு?

லெபனானில் புதிய அரசாங்கமொன்றை உருவாக்குவது குறித்து ஜனாதிபதி மிச்செல் அவ்ன் கருத்து வெளியிட்டுள்ளார். கட்சிகளுக்கிடையில் பேச்சுவார்த்தைகளை நடத்தி புதிய அரசாங்கம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் சில நாட்களில் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார். அரச எதிர்ப்பாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக மிச்செல் அவ்ன் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய நலன்களைக் கருத்திற் கொண்டும் அரசாங்க எதிர்ப்பாளர்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்தும் இந்நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சர் சமீபத்தில் லெபனானுக்கு மேற்கொண்ட விஜயத்தினை அடுத்து இப்புதிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. லெபனான் முன்னர் பிரான்ஸின் கொலனியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

''லெபனான் இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை நாம் நன்கு அறிவோம். லெபனான் மக்கள் வேண்டுவதைப் புரிந்துகொள்வதற்காகவே எனது பயணம் அமைந்தது'' என பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். லெபனானில் நீண்டகாலமாக ஸ்திரமான ஒரு அரசாங்கம் இல்லை என்பது பாரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

# இஸ்ரேல் தூதுவரின் உரையை பகிஷ்கரித்த ஹாவேர்ட் மாணவர்கள்



நியூயோர்க்கிற்கான இஸ்ரேலின் துணைத் தூதுவர் அமெரிக்காவின் ஹாவேர்ட் பல்கலைக் கழகத்திலுள்ள சட்டக் கல்லூரியில் உரையாற்றத் தொடங்கியபோது நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் வெளிநடப்புச் செய்த சம்பவமொன்று சமீபத்தில் இடம்பெற்றது.

தானிதயான் என்பவர் நியூயோர்க் நகரிலுள்ள இஸ்ரேலின் துணைத் தூதரக அதிகாரி. அவர் ஹாவேர்ட் சட்டக் கல்லூரி யில் ''இஸ்ரேல் குடியேற்றத் திட்டங்களின் சட்டரீதியான மூலோபாயம்'' எனும் தலைப்பில் உரையாற்றுவதற்கு அரம் பித்தபோதே அங்கிருந்த மாணவர்கள் இக்குடியேற்றங்கள் போர்க் குற்றம் எனக் கூச்சலிட்டுக் கொண்டு மண்டபத்தை விட்டு வெளியேறினர். இது இஸ்ரேல் துணைத் தூதுவருக்கு அவமானத்தை ஏற்படுத்தியதாக அங்கிருந்த மாணவர்கள் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்குத் தெரிவித்தனர்.

தற்போது அமெரிக்கா எங்கும் இஸ்ரேலின் சட்டவிரோதக் குடியேற்றங்களுக்கு ஆதரவு திரட்டும் முயற்சிகள் பல மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியே இவ்வுரை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஈரானில் அமெரிக்க சதி தோல்வியடைந்துள்ளது



## -ஈரான் தெரிவிப்பு

ஈரானில் அரசாங்கத்திற்கு எதிரான வன்முறை ஆர்ப்பாட்டங்களைத் தூண்டிவிடுவதற்கு அமெரிக்க மேற்கொண்ட அனைத்து சதி நடவடிக்கைகளையும் தாம் முறியடித்துள்ளதாகவும் அந்த வகையில் அமெரிக்க சதித் திட்டம் தோல்வியடைந்துள்ளதாகவும் பிரிகேடியர் ஜெனரல் குலாம் ரிஸா சுலைமானி தெரிவித்துள்ளார்.

ஈரான் அரசாங்கத்தின் விசுவாசமிக்க பிரிகேடியர், அமெரிக்க சதித் திட்டம் தோல்வியடைந்துள்ளது என ஈரானின் உத்தியோகபூர்வ செய்திச் சேவை யான இஸ்னாவிடம் தெரிவித்துள்ளார்.

60 லீட்டருக்கும் அதிகமான பெற்றோல் கொள்வனவாளர்களுக்கு பெற்றோலின் விலை 50 சமவீதத்தால் அதிகரிக்கப்படும் எனவும் அதைவிட அதிகம் நுகர்வோருக்கு 200 வீதம் விலை அதிகரிப்புச் செய்யப்படும் எனவும் 15 ஆம் திகதி ஈரான் அறிவித்தது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் குறைந்தது இருவர் கொல்லப்பட்டதோடு, பலர் காயமடைந்தனர். எவ்வாறாயினும் இந்த ஆர்ப்பாட்டங்களைத் தூண்டியது வொஷிங்டனே எனவும் அதனைத் தம்மால் முறியடிக்க முடிந்தது எனவும் குலாம் ரிஸா தெரிவித்துள்ளார்.

# குவைத் அமீர் இரு அமைச்சர்களைப் பதவி நீக்கினார்



குவைத் அமீர் ஸபா அல் அஹ்மத் ஜாபிர் அல் ஸபாஹ் பிறப்பித்துள்ள ஆணையொன்றின்படி நாட்டின் பாதுகாப்பு மற்றும் உள்விவகார அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். குவைத்தின் உத்தியோகபூர்வ செய்திச் சேவை நிறுவனமான 'குனா' இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் நாஸிர் அல் ஸபாஹ், உள்விவகார அமைச்சர் காலித் அல் ஸபாஹ் ஆகியோரே இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள் குறித்து இவர்கள் பகிரங்கமாக அரசைக் குற்றம் சாட்டினர் என்பதே இவர்கள் மீதான பிரதான குற்றச்சாட்டாகும்.

தேசிய இராணுவத்தில் இடம்பெறும் நிதிமுறைகேடுகளை அரசாங்கம் சரியாகக் கையாளவில்லை என நாஸிர் அல் ஸபாஹ் தெரிவித்துள்ளார். குவைத் அமைச்சரவை பதவி விலகியதை அடுத்து அமீர் இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார். முன்னாள் பிரதமர் ஜாபிர் முபாரக் தலைமையிலான அரசாங்கம் தற்போது பதவி விலகியுள்ளது. புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு அமீர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# வளைகுடா கூட்டுறவு நாடுகளின் சபையில் மீண்டும் நெருக்கடி



சவூதியின் அரம்கோ மீது செப்டம்பர் 14 இல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பிராந்தியத்தில் வளைகுடா கூட்டுறவு நாடுகள் சபை குறித்த ரியாதின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னர் வளைகுடா ஒப்பந்த நாடுகள் சபை பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதத் தொடக்கத்தில் சவூதி, ஐக்கிய அமீரகம், பஹ்ரைன் என்பன கட்டாரில் இடம்பெறவுள்ள அறேபிய வளைகுடா கிண்ணத்திற்கான உதைப் பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்வதாகத் தெரிவித்துள்ளனர். எனினும் 2011 ஆம் ஆண்டு கட்டார் மீது இந்நாடுகள் விதித்த பொருளாதாரத் தடை இதுவரை நீக்கப்படவில்லை.

உதைப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்வது ஓர் அரசியல் தீர்மானம் என அபூதாபியில் உள்ள அரசியல் பகுப்பாய்வாளர் அப்துல் காலிக் அப்துல்லாஹ் தெரிவித்துள்ளார். அயல் நாடுகளுடன் கட்டார் தனது உறவை சுமுகமாக்கிக் கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. எனினும் சவூதி அறேபியா அதற்கான நல்ல சமிக்ஞைகளை இதுவரை வெளிப்படுத்தவில்லை.

ஹூதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வரும் சவூதி அனைத்து வளைகுடா கூட்டுறவு நாடுகளுடனும் தனது உறவைப் பலப்படுத்த வேண்டிய தேவை உள்ளதென்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலஸ்தீனம் குறித்த அமெரிக்கக் கொள்கை மாற்றம்

## சர்வதேச சட்டங்கள் மீது விழும் பேரிடியாகும்

• கலாநிதி றவூப் ஸெய்ன்

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன நிலங்களின் மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான சட்டவிரோதக் குடியேற்றங்களை இதற்கு மேல் வொஷிங்டன் சட்ட விரோதமாகக் கருதாது என அறிவித்துள்ளமை சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்வினைகளை உருவாக்கியுள்ளது.

பலஸ்தீன உரிமை அமைப்புக்கள் மட்டுமன்றி பல சர்வதேச மனித உரிமை நிறுவனங்களும் வொஷிங்டனின் இந்த நிலைப்பாட்டை வன்மையாகக் கண்டித்துள்ளன. ட்ரம்ப் நிருவாகம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரையில் இஸ்ரேல் உருவாக்கி வரும் புதிய குடியேற்றங்களை சட்டவிரோதமற்றவை எனக் கூறுவது சர்வதேச சட்டங்களையும் அவற்றினூடாக உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகளையும் அப்பட்டமாக மீறும் அணுகுமுறை என அவை தெரிவித்துள்ளன.

அமெரிக்காராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ, ட்ரம்பின் சார்பாக வெளியிட்ட புதிய நிலைப்பாடு குறித்து சர்வதேச சட்ட வல்லுனர்கள் தமது ஆழ்ந்த கவலையையும் விமர்சனத்தையும் வெளியிட்டுள்ளனர். 1978 ஆம் ஆண்டில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் கூட ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன் நிலங்களில் இஸ்ரேல் உருவாக்கும் புதிய அனைத்துக் குடியேற்றத் திட்டங்களும் சட்டவிரோதமானவை என ஏற்றுக் கொண்டிருந்த நிலையில் மைக் பொம்பியோவின் கருத்து பெரும் சர்ச்சையைக் கிளறியுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் பல்வேறு தீர்மானங்கள் 2016 இல் வெளியிடப்பட்ட தீர்மானம் உள்ளிட்டு, இஸ்ரேலின் அனைத்துக் குடியேற்றங்களும் சர்வதேச சட்டங்களின் கீழ் சட்டவிரோதமானவை என்பதோடு, நான்காவது ஜெனீவா மனித உரிமைப் பட்டயத்தையும் அப்பட்டமாக மீறுகின்றவை என வலியுறுத்துகின்றன.

நான்காவது ஜெனீவா ஒப்பந்தம் பின்வருமாறு கூறுகின்றது. ஒரு பிராந்தியத்தை ஆக்கிரமிக்கின்ற நாடு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் தனது மக்களைக் கொண்டு சென்று குடியேற்றுவது சட்டவிரோதமாகும். இஸ்ரேலுக்கு ஆதரவாக டொனால்ட் ட்ரம்ப் நிருவாகம் மேற்கொண்டு வரும் குருட்டுத்தனமான நகர்வுகளை மனித உரிமை குழுக்கள் மட்டுமன்றி, சர்வதேச அளவில் அரசியல் தலைவர்களும் கடுமையாகச் சாடியுள்ளனர்.

பலஸ்தீன் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் பேச்சாளர், ''ட்ரம்பின் தீர்மானம் சர்வதேச சட்டங்களை முழுமையர்க மீறுகின்றது'' எனத் தெரிவித்துள்ளார். சர்வதேச சட்டங்களின் தீர்மானங்களையும் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களையும் ரத்துச் செய்வதற்கு வொஷிங்டனுக்கு தகுதியோ அதிகாரமோ இல்லை. அதன் மூலம் இஸ்ரேலிய குடியேற்றத் திட்டங்களை சட்டபூர்வமாக்கும் உரிமை வொஷிங்டனுக்குக் கிடையாது என அப்பாஸின் பேச்சாளர் நபில் அபூ ஹுதைனா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன் விடுதலை அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களில் ஒருவரான கலாநிதி ஹனான் அஷ்ராவி தனது டுவிட்டர் பக்கத்தில், ''பொம்பியோவின் அறிக்கை சர்வதேச சட்டம், நீதி, சமாதான நகர்வுகள் மீது விழும் பேரிடியாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வொஷிங்டனின் இத்தகைய நிலைப்பாடு மாற்றம் ஆபத்தான விளைவுகளையே கொண்டு வரும். அது மத்திய கிழக்கு சமாதான செயன்முறைக்கு பெரும் இடையூறாக அமையும் என ஜோர்தான் வெளிவிவகார அமைச்சர் ஐமன் ஸபாரி எச்சரித்துள்ளார்.

பலஸ்தீன நிலங்கள் மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் குடியேற்றத் திட்டங்கள் அனைத்துமே சட்டவிரோதமானவை. இரு நாட்டுத் தீர்வு குறித்த எதிர்பார்ப்பை உடைத்து நொறுக்குபவை. இஸ்ரேலுக்கு அருகில் பலஸ்தீன நாடு அமைய வேண்டும். அதுவே பல தசாப்தங்களாக நீடித்து வரும் அறபு-இஸ்ரேல் முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வரும் என ஐமன் ஸபாரி குறிப்பிட்டுள்ளார்.

பலஸ்தீன் மனித உரிமை சட்டத்தரணியான நூரா அரகத் தனது டுவிட்டர் பக்கத்தில், ''மத்திய கிழக்கு தொடர்பான அமெரிக்கக் கொள்கையில் கடந்த ஐந்து தசாப்தங்களாகக் காணப்பட்ட நிலைப்பாட்டை பொம்பியோ தலைகீழாகப் புரட்டியுள்ளார். இது பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் வன்முறைகளை நியாயப்படுத்தும் செயலாகும். பலஸ்தீன மக்களுக்கு உள்ள அடிப்படையான மனித உரிமைகளை இந்நிலைப்பாடு கடுமையாக மீறுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பலஸ்தீன அமெரிக்க சட்டத்தரணி ஹுவைதா அர்ராப், ''வொஷிங்டனின் இந்த அறிவிப்பு எமக்கு ஆச்சரியமளிக்கவில்லை. ட்ரம்ப் நிருவாகம் மீண்டும் ஒருமுறை சட்டத்தை முற்றாக மீறியுள்ளது. சட்டவிரோதமான கட்டடங்களை ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் நிர்மானிப்பதே சமாதானத்திற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் என்பதை பொம்பியோ உணர்வதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில், அவர்கள் இஸ்ரேலை வாழ வைப்பதில் மாத்திரமே குறியாய் உள்ளனர்.''

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரையில் தற்போது 6 இலட்சம் யூதர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெரூசலத்திலும் யூதர்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். தற்போது



மேற்குக்கரையிலும் கிழக்கு ஜெரூசலத்திலும் 3 மில்லியன் பலஸ்தீனர்கள் உள்ளனர். ட்ரம்ப் பதவியேற்றது முதல் இஸ்ரேல் சட்டவிரோதக் குடியேற்றத் திட்டங்களை துரிதப்படுத்தியது. 1967 இல் இடம்பெற்ற 6 நாள் அறபு-இஸ்ரேல் யுத்தத்தின்போது கிழக்கு ஜெரூசலம், மேற்குக்கரை, காஸா என்பவற்றை இஸ் ரேல் ஆக்கிரமித்தது. ஜெரூசலத்தைத் தலைநகராகக் கொண்ட எதிர்கால பலஸ்தீன் நாட்டிற்காக எஞ்சியுள்ள மூன்று பிராந்தியங்களே இவை. இதில் காஸாவும் கிழக்கு ஜெரூசலமும் ஒப்பீட்டு ரீதியில் சிறியவை. மேற்குக்கரையே ஓரளவு பெரிய பிராந்தியம். அதனைத் தொடர்ச்சியாக யூதா மயமாக்கவதில் இஸ்ரேல் பல சட்டவிரோத கட்டட நிர்மாணங்களில் ஈடுபட்டு வருகின்றது.

பலஸ்தீன்-இஸ்ரேல் முரண்பாட்டில் வொஷிங்டன் மிகுந்த பக்கச்சார்புடனும் பாரபட்சத்துடனும் செயல்பட்டு வருகின்றமை நீண்டகாலமாக கண்டனத்திற்குரியதாக இருந்து வருகின்றது. ட்ரம்பின் வருகையின் பின்னர் பலஸ்தீனர்கள் மற்றும் பலஸ்தீனுக்கு ஆதரவளித்து வருகின்ற ஒரு சில அறபு நாடுகளுக்கு எதிராகவும் வொஷிங்டன் களமிறங்கியிருப்பது அதன் யூத ஆதரவினை வெளிப்படுத்துகின்றது.

2017 இல் ட்ரம்ப் ஜெரூசலத்தை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்தார். 2018 இல் அமெரிக்க தூதரகத்தை டெல் அவிவிலிருந்து இஸ்ரேலுக்கு மாற்றினார். ஜெரூசலம் யாருக்குரியது என்பதை மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரே தீர்மானிக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் முன்னைய நிலைப்பாடாகும். ட்ரம்ப் அதனை முற்றாக மீறி ஒருதலைப்பட்சமாக இஸ்ரேலுக்குரியதாக அறிவித்தார்.

2018 இல் ட்ரம்ப் மேற்கொண்ட இன்னொரு நடவடிக்கை பலஸ்தீனர்களை பட்டினியில் போட்டு கொல்வதற்கு வழியமைத்தது. பலஸ்தீன அகதிகளுக்காக ஐ.நா. சார்பில் செயல்படும் விஷேட அமைப்பான ஐ.நா. நிவாரணம் மற்றும் செயற்பாடு முகவர் நிறுவனத்திற்கு (UN Relief and Works Agency - UNRWA) அதுவரை அமெரிக்கா வழங்கி வந்த நிதி ஆதரவினையும் பங்களிப்பினையும் நிறுத்திக் கொள்வதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

ஆக்கிரமிக்கப்பட்டு வதைசெய்யப்பட்டு வரும் மக்கள் மீது இஸ்ரேல் கடந்த 15 ஆண்டுகளாக பொருளாதாரத் தடை காரணமாக காஸாவிலும் மேற்குக் கரையின் சில பகுதிகளிலும் மனிதாபிமான நெருக்கடிகள் கூர்மையடைந்தன. இந்நிலையில் பலஸ்தீனர்களில் பெரும்பான்மையினர் வெளிநாட்டு நிவாரண உதவிகளில் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் டொனால்ட் ட்ரம்ப் பலஸ்தீனர்களுக்கான உதவியைப் பின்வாங்கிக் கொண்டமை மனித நேயமற்ற ஒரு துரோகச் செயல் என கண்டிக்கப்பட்டது.

2019 மார்ச் மாதம் இஸ்ரேல் எடுத்த தீர்மானமொன்றை டொனால்ட் ட்ரம்ப் பகிரங்கமாக அங்கீகரித்தார். 1981 ஆம் ஆண்டில் சிரியாவுக்குச் சொந்தமான கோலான் குன்றுப் பிராந்தியத்தை இஸ்ரேல் தன்னுடன் இணைத்துக் கொண்டது. சட்டவிரோதமாக இணைக்கப்பட்ட இப்பிரதேசம் சிரியாவுக்குரியது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கோலான் குன்றுகளை இஸ்ரேல் தனக்குரியது என்று மார்ச்சில் அறிவித்தபோது ட்ரம்பும் விழுந்தடித்துக் கொண்டு அது இஸ்ரேலுக்குரியதே என அறிவித்தார். 1967 யுத்தத்தில் இஸ்ரேல் கைப்பற்றிய கோலான் குன்றுகளில் இஸ்ரேல் 1981 ஆம் ஆண்டிலிருந்து தனது நிருவாகத்தை நடைமுறைப்படுத்தி வந்தது. இன்றளவிலும் இப்பகுதியில் சிரிய அறேபியர்களும் கணிசமாக வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு பலஸ்தீன் மற்றும் இஸ்ரேல் தொடர்பான ட்ரம்ப் நிருவாகத்தின் கொள்கைகளும் நிலைப்பாடுகளும் படிப்படியாக மாற்றமடைந்து வந்து, தற்போது இஸ்ரேல் மேற்கொள்ளும் எந்தக் குடியேற்றத் திட்டமும் சட்டவிரோதமானவை அல்ல எனக் கூறுமளவுக்கு இஸ்ரேலை வொஷிங்டன் ஆதரித்து வருகின்றது.

இது வெறும் குருட்டுத்தனமான ஆதரவு மட்டுமன்றி, பிரச்சினையின் மையத்தைக் காணத் தவறும் பெரும் அரசியல் துரோகமாகும். குறைந்தபட்சம் சர்வதேச சட்டங்களின் பின்னணியில் இருந்தேனும் வொஷிங்டன் இந்நெருக்கடியைப் பார்க்க வேண்டும்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயகம் என்று தன்னைப் புகழ்ந்துரைக்கும் அமெரிக்கா, சட்டவிரோதமாக உருவாக்கப்பட்ட ஒரு நாட்டையும், அதன் தொடர்ச்சியான சட்டவிரோதக் குடியேற்றத் திட்டத்தையும் நியாயம் காண்பது ஜனநாயக விரோத நிலைப்பாடாகும். அதற்கும் மேல் அனைத்து வகையான சர்வதேச சட்டங்களையும் தான்தோன்றித்தனமாக மீறும் நிலைப்பாடாகும்.

பலஸ்தீனர்களை இஸ்ரேலியர்களுக்குச் சமமான மனிதர்களாக மதிக்கத் தெரியாத இறுமாப்பும் கர்வமும் இந்த நிலைப்பாடுகளுக்குப் பின்னணியில் உள்ளன. எப்போதும் இதுபோன்ற முக்கிய நெருக்கடிகளின்போது பேச்சளவிலும் அறிக்கையளவிலும் கருத்து வெளியிடுகின்ற ஐரோப்பிய ஒன்றியம் பொம்பியோவின் அறிவிப்புக் குறித்து வழமை போன்ற கருத்தொன்றை வெளியிட்டுள்ளது.

''ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிராந்தியத்தில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் குடியேற்றத் திட்ட செயற்பாடுகள் சர்வதேச சட்டங்களின் கீழ் சட்டவிரோதமானவை. மேலும் நிலையான சமாதானம் குறித்த எதிர்பார்ப்புக்களை இல்லாதொழிப்பவை. இஸ்ரேல் அனைத்துக் குடியேற்றத் திட்டங்களையும் நிறுத்துவதற்கு முன்வர வேண்டும். அது ஆக்கிரமிப்பு நாடு என்ற வகையில் அதற்குரிய பொறுப்பு இது'' என ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டுக் கொள்கை பொறுப்பாளர் பெடரிக்கா மொகரினி இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# சிலியில் அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் கிளர்ச்சி தொடர்கிறது

லத்தீன் அமெரிக்காவில் (தென் அமெரிக்கா) உள்ள சிலி எனும் சிறிய நாட்டில் ஒரு மாதத்திற்கு மேலாக மக்கள் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்று வரும் இந்த ஆர்ப்பாட்டங்களை வெளிநாட்டு சக்திகள் ஊக்குவிக்கின்றனவா என்ற ஐயம் பரவலாக எழுந்துள்ளது.

அரசாங்கம் மக்களுக்கு பல்வேறு நிவாரணங்களை அறிவித்துள்ள போதும், நாட்டின் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் அநீதியையும் நீக்குவதற்கு முறையான மாற்றமொன்றை அரசு அறிமுகப்படுத்தும் வரை தாம் ஆர்ப்பாட்டங்களைக் கைவிடப்போவதில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஒக்டோபர் நடுப்பகுதியில் தொடங்கிய ஆர்ப்பாட்டம் தலைநகர் சான்டியாகோவிலிருந்து பல நகரங்களுக்குப் பரவி வருகின்றது. நாட்டின் பொருளாதார அரசியல் மாதிரியில் பாரிய மாற்றம் ஒன்று தேவை எனக் கோரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அரச படையினரால்



ஒடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. அரசியலமைப்புச் சபையை நிறுவுவது, ஓய்வூதியத்தை அதிகரிப்பது, ஊதியத்தை அதிகரிப்பதோடு, கல்வி மற்றும் சுகாதாரத் துறைக்கான அரச செலவீனங்களை அதிகரிப்பது என்பவையே கிளர்ச்சியாளர்கள் தரப்பில் முன்வைக்கப்படும் பிரதான கோரிக்கைகளாகும்.

''லத்தீன் அமெரிக்காவின் [illegible] யாகக் காட்சி தரும் நாடு என்றே சிலியைச் சொல் வார்கள். ஆனால் யதார்த்தம் ஒருபோதும் அப்படியிருந்ததில்லை'' என்கிறார் சட்டத் துறை மாணவ னான மட்சுபாரா. நாளாந்தம் மக்கள் ஆர்ப்பாட்டம் அதிகரித்து வரு கின்றது.

1980 களில் சர்வதிகாரி ஜெனரல் ஒகஸ்டோ பினோசிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் இவ்வாறு தான் தொடங்கி யது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அப்போது கொல்லப்பட்டனர் என நினைவு படுத்து கிறார் மட்சுபாரா. இன்றிருப்பதும் மறைமுகமான சர்வதிகாரமே. அது மாற வேண்டும்.

கடந்த வாரம் ஜனாதிபதி செபஸ்டியன் பினீரா வெளியிட்டுள்ள அறிக்கையில், சிலியின் மில்லியன் கணக்கான மக்கள் கோரும் நியாயமான வேண்டு கோள்களை அரசு நிறைவேற்றும். ஓய்வூதியத்தை [illegible] அரசு தீர்மானித்துள் [illegible] அனைத்துப் பிரச்சினைகளையும் உடனடியாகத் தீர்த்து விடும் என்று நாம் சொல்ல முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்கள் மேற்கொண்டு வரும் வன்முறைகளும் சொத்தழிப்பு நட வடிக்கைகளும் கண்டனத்திற்குரியவை. இது தொடர்பில் இராணுவமும் பொலிஸாரும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் நன்றிக்குரியவை என பினீரா மேலும் தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக தென்னமெரிக்காவின் பல்வேறு நாடுகளில் அரச எதிர்ப்புக் கிளர்ச்சிகள் பரவலடை ந்து வருகின்றன. வெனிசுவேலா, ஆர்ஜன்டீனா, பொலிவியா ஆகிய நாடுகளில் தீவிரமடைந்து வரும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் தற்போது சிலியை ஊடறுத்திருக்கிறது. பொலிவியாவில் ஏற்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்களை அடுத்து அதன் பிரதமர் பதவி விலகியுள்ளார். ஆர்ஜன்டீனாவிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. லெபனான் மற்றும் சூடானில் ஆட்சி மாற்றம் கோரும் மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் வலுப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் 2019:

## தேர்தல் முடிவுகள் ஒரு பார்வை

• ஹெட்டி ரம்ஸி

இலங்கையின் 7ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக, கடந்த நவம்பர் 16ஆம் திகதி நடத்தப்பட்ட தேர்தலில், சிங்கள மக்களின் அமோக ஆதரவுடன் கோட்டா பய ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ளார். 1978 இல் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைக்குப் பின்னர் நடந்த தேர்தல்களில், கடந்த 2015 தேர்தல் 18ஆவது திருத்தச் சட்டம் மூலம் ஒருவர் இரண்டு முறைக்கு மேல் போட்டியிட அனுமதிக்கும் தேர்தலாக மாற்றம் கண்டு நடைபெற்றது. ஆனால் அவையனைத்திலும் இருந்து வேறுபட்டு, இம்முறை நடைபெற்ற தேர்தல் 19ஆவது திருத்தச் சட்டம் மூலம், ஜனாதிபதி அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஜனாதிபதிக்கான தேர்தலாகவும், ஐந்து வருட பதவிக் காலம் கொண்ட தேர்தலாகவும் அரங்கேறியது. நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது வாக்களிப்பு முறை எவ்வாறு அமைந்து காணப்படுகிறது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.



இம்முறை தேர்தலில் 1 கோடியே 59 லட்சத்து 92 ஆயிரத்து 96 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இது கடந்த 2015 தேர்தலிலான 1 கோடியே 50 லட்சத்து 44 ஆயிரத்து 490 ஐ விட 9 லட்சத்து 47 ஆயிரத்து 606 பேர் அதிகமாகும்.

**வாக்களிப்பு வீதம்:**

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 83.72 சதவீத வாக்களிப்பு பதிவாகியுள்ளது. இதில் 1.01 வீத வாக்குகளே நிராகரிக்கப்பட்டுள்ளன. ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகள் 1 கோடியே 33 லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து 951 ஆகும். 2015 ஜனாதிபதித் தேர்தலில் 81.52 சதவீத வாக்களிப்பே பதிவானது. அதில் 1.15 சதவீத வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. ஏற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகள் 1 கோடியே 21 இலட்சத்து 23 ஆயிரத்து 452 ஆகும்.

2010 தேர்தலில் 74.50 சதவீத வாக்களிப்பு, 0.72 சதவீதம் நிராகரிப்பு, ஏற்பு 1 கோடியே 4 இலட்சத்து 95 ஆயிரத்து 451.

2005 இல் 73.73 சதவீத வாக்குப்பதிவும், 1999 இல் 73.31 சதவீத வாக்குப்பதிவும் ஜனாதிபதித் தேர்தல்களில் பதிவாகியுள்ளன. 1999 முதல் கடந்த 20 ஆண்டுகளில், நடைபெற்றுள்ள 4 ஜனாதிபதித் தேர்தல்கள் (1999, 2005, 2010, 2015) மற்றும் 5 பாராளுமன்றத் தேர்தல்களில் (2000, 2001, 2004, 2010, 2015) அதாவது 9 தேர்தல்களிலான சராசரி வாக்களிப்பு 74.32 சதவீதமேயாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலே எட்டப்பட்ட அதியுயர் நிலையாகும். அதற்கு பல்வேறு காரணிகள் காரணமாக அமைந்தன. அதில் ராஜபக்ஷவை அகற்றியே ஆக வேண்டும் என்ற தமிழ், முஸ்லிம் மக்களின் வேட்கை மற்றும் சிங்கள மக்களின் ஒரு பகுதியில் அது குறித்து எழுந்த எழுச்சி எனப் பலர் அதற்கான காரணங்கள் ஆகின. ஆனால் இம்முறை அதே பார்வையுடன், கடந்த ஐந்து வருட ஆட்சியில் ஏற்பட்டுள்ள அதிருப்தி 83.72 வீதமென்ற அதி கூடிய வாக்களிப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது.

எனவே இம்முறை வாக்களிப்பு கடந்த 20 ஆண்டுகளிலான ஏனைய மூன்று தேர்தல்களை விட அதிகரித்துள்ளது. மைத்திரிபால சிறிசேனவிற்கு கடந்தமுறை மொத்தமாக விழுந்த வாக்குகள் 62 இலட்சத்து 17 ஆயிரத்து 162. அதாவது 51.28 சதவீதம். மஹிந்த ராஜபக்ஷவிற்கு 57 இலட்சத்து 68 ஆயிரத்து 090. அதாவது 47.58 சதவீதம். இருவருக்குமிடையிலான வித்தியாசம் 4 இலட்சத்து 49 ஆயிரத்து 072. இருக்க, 1 இலட்சத்து 38 ஆயிரத்து 200 வாக்குகள் வேறு நிராகரிக்கப்பட்டன. அதாவது 1.15 சதவீத வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இம்முறை இரண்டாம் மூன்றாம் தெரிவுகள் என வாக்குகள் முதன்மைப்படுத்தப்படுவதால் அதற்கு முழுமையாக பரிச்சியப்படுத்தப்படாத மக்கள் அதில் குழப்பத்தை எதிர்கொள்ளும் நிலையும், அதனால் நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கும், வாய்ப்புக்கள் அதிகம் உண்டு என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், முதல் வாக்கிலேயே கோட்டாபய ராஜபக்ஷ மொத்தமாக 6,924,255 வாக்குகளை 52.25 என்ற சதவீதத்தில் பெற்றுக்கொண்டார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட சஜித் பிரேமதாச 5,564,239 வாக்குகளை 41.99 சதவீதத்தில் பெற்றார். இருவருக்குமிடையிலான வித்தியாசம் 1,360,016 ஆகும். இம்முறை 135,452 என்னும் 1.01 வீத வாக்குகளே நிராகரிக்கப்பட்டன.




கடந்த 2015 தேர்தலில், மஹிந்த வடக்குக் கிழக்கிலுள்ள ஆறு மாவட்டங்களில் பெற்ற மொத்த வாக்குகள், 3 இலட்சத்து 23 ஆயிரத்து 600. வடக்குக் கிழக்கிற்கு வெளியே, 16 மாவட்டங்களில் பெற்ற வாக்குகள், 54 இலட்சத்து 44 ஆயிரத்து 490. அதேவேளை மைத்திரி வடக்குக் கிழக்கில் பெற்ற மொத்த வாக்குகள், 9 இலட்சத்து 78 ஆயிரத்து 111. வெளியே உள்ள 16 மாவட்டங்களில் பெற்ற வாக்குகள், 52 இலட்சத்து 39 ஆயிரத்து 051. ஆகவே மை[illegible] வடக்குக் கிழக்கிற்கு வெளியே, 2 இலட்சத்து 5 ஆயிரத்து 439 வாக்குகள் மஹிந்தவை விடக் குறைவாகவே விழுந்தன. ஆனால் வடக்குக் கிழக்கில் மஹிந்தவை விட, 6 இலட்சத்து 54 ஆயிரத்து 511 மேலதிக வாக்குகள் விழுந்தன. அதுவே மைத்திரியின் வெற்றியை உறுதி செய்தது.

2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய வடக்கு கிழக்கில் பெற்ற மொத்த [illegible] வடக்குக் கிழக்கிற்கு வெளியே, 17 மாவட்டங்களில் பெற்ற வாக்குகள், 66 இலட்சத்து 47 ஆயிரத்து 236. அதே வேளை சஜித் வடக்குக் கிழக்கில் பெற்ற மொத்த வாக்குகள், 11 இலட்சத்து 52 ஆயிரத்து 624. வெளியே உள்ள 17 மாவட்டங்களில் பெற்ற வாக்குகள், 44 இலட்சத்து, 11 ஆயிரத்து 615. ஆகவே சஜித்திற்கு வடக்கு கிழக்கிற்கு வெளியே 22 இலட்சத்து 35 ஆயிரத்து 621 வாக்குகள் கோட்டாபயவை விடக் குறைவாகவே விழுந்துள்ளன. ஆனால் வடக்கு கிழக்கில் கோட்டாபயவை விட, 8 இலட்சத்து 75 ஆயிரத்து 605 மேலதிக வாக்குகள் விழுந்துள்ளன. ஆனால் இவ்வெண்ணிக்கை சஜித்தின் வெற்றியை உறுதி செய்யவில்லை. வடக்குக் கிழக்கிற்கு வெளியே அவர் குறைவான எண்ணிக்கையில் வாக்குப் பெற்றமையே அவரது தோல்விக்கு காரணமாக அமைந்தது.

ஆனால் கடந்த 2015 தேர்தலில் வடக்குக் கிழக்கு உட்பட உள்ள சிங்கள மக்கள் மத்தியில், 58 சதவீத வாக்களிப்பை மகிந்த பெற்றார் என்பதுவும், கவனத்தில் கொள்ளத்தக்கது.

அதேவேளை மஹிந்தவை அகற்றுவதற்காக 84 சதவீத தமிழ், முஸ்லிம் வாக்குகள் மைத்திரியை சென்றடைந்தன. அதே வேளை யாரொருவர் சிங்கள மக்களின் 60 சதவீதத்திற்கு அதிக மான வாக்குகளைப் பெற்று, அதில் தொடர்ந்தும் முன்னேறிச் சென்றால், அவரது வெற்றி வாய்ப்பை தமிழ், முஸ்லிம் வாக்குகளை மட்டும் கொண்டு தடுத்து விடுவது, முடியாது போய் விடும் என்பதுவும் உண்மை. இதைக் கருத்தில் கொண்டே ராஜபக்ஷ தரப்பு, தமது வியூகத்தை கட்டியெழுப்பி செயற்பட்டது. அதில் அவர்களால் வெற்றி பெறவும் முடிந்தது என்பதை இம்முறை தேர்தல் முடிவுகளை கூர்ந்து கவனிக்கும் போது புரிந்து கொள்ள முடிகிறது.

அதேவேளை கடந்த தேர்தலில், 22 மாவட்டங்களில், 12 மாவட்டங்களில் மைத்திரி முன்னிலை பெற, மஹிந்த 10 மாவட்டங்களிலேயே முன்னிலை பெற்றார். அதன் விபரம் வருமாறு.

**மைத்திரி முன்னிலை பெற்ற 12 மாவட்டங்கள்:**

யாழ்ப்பாணம்: 1,79,120 வாக்குகள் (மைத்திரி: 2,53,574 மஹிந்த: 74,454 அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 3,40,571) வாக்களிப்பு வீதம்: 66.28

மட்டக்களப்பு: 1,67,791 (மைத்திரி: 2,09,422 மஹிந்த: 41,631 அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 2,56,586) வாக்களிப்பு வீதம்: 70.97

கொழும்பு - முன்னிலை: 1,62,459

நுவரெலியா - முன்னிலை: 1,27,266

அம்பாறை - முன்னிலை: 1,12,333 (மைத்திரி: 2,33,360 மஹிந்த: 1,21,027 அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 3,57,817) வாக்களிப்பு வீதம்: 77.39

வன்னி - முன்னிலை: 1,07,040 (மைத்திரி: 1,41,417 மஹிந்த: 34,377 அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 1,80,225) வாக்களிப்பு வீதம்: 72.57

கண்டி - முன்னிலை: 88,409

திருகோணமலை - முன்னிலை: 88,227 (மைத்திரி: 1,40,338 மஹிந்த: 52,111 அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 1,95,356) வாக்களிப்பு வீதம்: 76.76

பொலனறுவை - முன்னிலை: 42,334

கம்பஹா - முன்னிலை: 4,660

புத்தளம் - முன்னிலை: 4,622

பதுளை - முன்னிலை: 281

இதில் ஒன்றை கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டும். மைத்திரியை வெற்றியை நோக்கி நகர்த்திய முதல் இரண்டு மாவட்டங்களாக இருப்பவை யாழ்ப்பாணமும், மட்டக்களப்புமே. குறைந்த வாக்கு வங்கியைக் கொண்டுள்ள இம் மாவட்டங்களே அதிகரித்த வித்தியாசத்திலான வாக்குகளை வழங்கியவை. இந்த வரிசையில் தமிழர் அதிகம் வாழும் நுவரேலியா 4ஆம் இடத்திலும், 5ஆம் இடத்தில் அம்பாறை, 6ஆம் இடத்தில் வன்னி, 8ஆம் இடத்தில் திருமலையும் இருப்பதைக் காணலாம்.

அதேவேளை ரணில் விக்ரமசிங்கவின் கோட்டையான கொழும்பே அதிகரித்த வாக்கு வங்கியைக் கொண்ட மாவட்டம். ஆனாலும், மூன்றாம் இடத்திலும், மைத்திரியின் கோட்டை பொலனறுவை 9ஆம் இடத்திலும், சந்திரிக்காவின் அதிகரித்த வாக்கு வங்கியைக் கொண்ட கம்பஹா மாவட்டம் இரண்டாம் இடத்திலும் உள்ளன. ஆனாலும், வெறும் 4,622 வாக்குகள் வித்தியாசத்தில் 11 இடத்திலேயே உள்ளதையும் காணலாம்.

அதேவேளை மஹிந்த முன்னிலை பெற்ற 10 மாவட்டங்களின் விபரம் வருமாறு:

ஹம்பாந்தோட்டை - மஹிந்த முன்னிலை: 1,04,587 வாக்குகள்

இரத்தினபுரி - முன்னிலை: 86,539

மாத்தறை - முன்னிலை: 85,388

காலி - முன்னிலை: 83,132

குருநாகல் - முன்னிலை: 80,266

மொணராகலை - முன்னிலை: 67,469

களுத்துறை - முன்னிலை: 46,486

அநுராதபுரம் - முன்னிலை: 42,754

கேகாலை - முன்னிலை: 25,597

மாத்தளை - முன்னிலை: 12,952

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய 16 மாவட்டங்களில் முன்னிலை பெற்றுள்ளார். இம்மாவட்டங்களில் அவர் கூடுதலான வாக்கு வீதங்களையும் பெற்றுள்ளார். ஆனால் சஜித் 6 மாவட்டங்களில் மாத்திரமே முன்னிலை பெற்றுள்ளார்.

| | கோத்தாபய ராஜபக்ச | | சஜித் பிரேமதாச | | ஏனையோர் | | | செல்லுபடியானவை | நிராகரிக்கப்பட்டவை | மொத்த வாக்குகள் | பதிவான வாக்காளர்கள் | வாக்கு வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் | மாகாணம் | வாக்குகள் | % | வாக்குகள் | % | வாக்குகள் | % | | | | | |
| பதுளை | ஊவா | 276,211 | 49.2% | 251,706 | 44.92% | 32,428 | 5.79% | 560,345 | 6,978 | 567,323 | 657,766 | 86,25% |
| மொனராகலை | ஊவா | 208,814 | 65.3% | 92,539 | 28.95% | 18,251 | 5.71% | 319,604 | 3,000 | 322,604 | 366,524 | 88.02% |
| அம்பாறை | கிழக்கு | 135,058 | 32.8% | 259,673 | 63.09% | 16,839 | 4.09% | 411,570 | 3,158 | 414,728 | 503,790 | 82.32% |
| திருகோணமலை | கிழக்கு | 54,135 | 23.39% | 166,841 | 72.10% | 10,434 | 4.51% | 231,410 | 1,832 | 233,242 | 281,114 | 82.97% |
| மட்டக்களப்பு | கிழக்கு | 38,460 | 12.68% | 238,649 | 78.70% | 26,112 | 8.61% | 303,221 | 4,258 | 307,479 | 398,301 | 77.20% |
| இரத்தினபுரி | சப்ரகமுவா | 448,044 | 59.93% | 264,503 | 35.38% | 35,124 | 4.70% | 747,671 | 5,853 | 753,524 | 864,978 | 87.11% |
| கேகாலை | சப்ரகமுவா | 320,484 | 55.66% | 228,032 | 39.60% | 27,315 | 4.74% | 575,831 | 5,152 | 580,983 | 676,440 | 85.89% |
| அம்பாந்தோட்டை | தெற்கு | 278,804 | 66.17% | 108,906 | 25.85% | 33,664 | 7.99% | 421,374 | 3,179 | 424,553 | 485,786 | 87.40% |
| காலி | தெற்கு | 466,148 | 64.26% | 217,401 | 29.97% | 41,809 | 5.76% | 725,358 | 5,878 | 731,236 | 858,749 | 85.15% |
| மாத்தறை | தெற்கு | 374,481 | 67.25% | 149,026 | 26.76% | 33,361 | 5.99% | 556,868 | 3,782 | 560,650 | 652,417 | 85.93% |
| கண்டி | மத்தி | 471,502 | 50.43% | 417,355 | 44.64% | 46,018 | 4.92% | 934,875 | 9,020 | 943,895 | 1,111,860 | 84.89% |
| மாத்தளை | மத்தி | 187,821 | 55.37% | 134,291 | 39.59% | 17,109 | 5.04% | 339,221 | 3,252 | 342,473 | 401,496 | 85.30% |
| நுவரெலியா | மத்தி | 175,823 | 36.87% | 277,913 | 58.28% | 23,128 | 4.85% | 476,864 | 7,155 | 484,019 | 569,028 | 85.06% |
| கம்பஹா | மேற்கு | 855,870 | 59.28% | 494,671 | 34.26% | 93,259 | 6.46% | 1,443,800 | 15,751 | 1,459,551 | 1,751,892 | 83.31% |
| களுத்துறை | மேற்கு | 482,920 | 59.49% | 284,213 | 35.01% | 44,630 | 5.50% | 811,763 | 6,847 | 818,610 | 955,079 | 85.71% |
| கொழும்பு | மேற்கு | 727,713 | 53.19% | 559,921 | 40.92% | 80,543 | 5.89% | 1,368,177 | 15,333 | 1,383,510 | 1,670,403 | 82.82% |
| யாழ்ப்பாணம் | வடக்கு | 23,261 | 6.24% | 312,722 | 83.86% | 36,930 | 9.90% | 372,913 | 11,251 | 384,164 | 564,714 | 68.03% |
| வன்னி | வடக்கு | 26,105 | 12.27% | 174,739 | 82.12% | 11,934 | 5.61% | 212,778 | 3,294 | 216,072 | 282,119 | 76.59% |
| அனுராதபுரம் | வடமத்தி | 342,223 | 58.97% | 202,348 | 34.87% | 35,775 | 6.16% | 580,346 | 4,916 | 585,262 | 682,450 | 85.76% |
| பொலன்னறுவை | வடமத்தி | 147,340 | 53.01% | 112,473 | 40.47% | 18,111 | 6.52% | 277,924 | 2,563 | 280,487 | 326,443 | 85.92% |
| புத்தளம் | வடமேல் | 230,760 | 50.83% | 199,356 | 43.91% | 23,860 | 5.26% | 453,976 | 4,478 | 458,454 | 599,042 | 76.53% |
| குருணாகல் | வடமேல் | 652,278 | 57.90% | 416,961 | 37.01% | 57,371 | 5.09% | 1,126,610 | 8,522 | 1,135,132 | 1,331,705 | 85.24% |
| மொத்தம் | | 6,924,255 | 52.25% | 5,564,239 | 41.99% | 764,005 | 5.76% | 13,252,499 | 135,452 | 13,387,951 | 15,992,096 | |



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காயங்களுக்கு மருந்திட வேண்டிய புதிய இலக்கு

• ஜயதேவ உயங்கொட

வென்றவர்களையும் தோற்றவர்களையும் கண்காணிப்பாளர்களையும் ஆச்சரியப்படுத்தும் பெறுபேறுகளுடன் 08 ஆவது ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. மக்களின் தேர்தல் தெரிவுகளின் உடனடி வெளிப்பாடாக பெரும்பான்மை - சிறுபான்மை வேறுபாடுகள் கூர்மையடைந்திருப்பதனை எதிர்பாராத திருப்பமாக அவதானிக்க முடிகிறது. வெற்றி பெற்ற கோதாபய ராஜபக்ஷ சிங்கள பௌத்த சமூகத்தின் அமோகமான ஆதரவைப் பெற்றிருக்கிறார்.

அதேவேளை வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் மேல், தென் மாகாணங்களின் சில பிரதேசங்களிலும் திரண்டிருக்கின்ற தமிழ் முஸ்லிம் மக்களால் அவர் நிராகரிக்கப்பட்டிருக்கிறார். ராஜபக்ஷவின் பிரதான சவாலாக விளங்கிய சஜித் பிரேமதாச தமிழ் முஸ்லிம் மக்களின் அமோகமான ஆதரவைப் பெற்றிருக்கிறார். மறுபுறத்தில் அவர் சில தொகுதிகளில் மூன்றில் ஒரு பங்கு வாக்குளையே பெறுமளவுக்கு சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறார். இறுதியில் பிரேமதாச பெற்ற 41.99 வீதத்துக்குப் பகரமாக ராஜபக்ஷ பெற்ற 52.55 வீதம் மூலம் அவர் தெளிவான மக்கள் ஆணையைப் பெற்றிருப்பதோடு தனது எதிராளியின் அரசியல் கூட்டணியையும் உலுக்கியிருக்கிறார். வெற்றியாளரின் பெரும்பான்மை இலங்கையின் 1.36 மில்லியனாக உச்ச எல்லையைத் தொட்டிருக்கிறது.

## இனங்கள் துருவமயமாதல்

இலங்கைச் சமூகங்களின் அரசியல் இலக்குகளை வடிவமைப்பதில் இன துருவமயப்படுதல் பலவீனமடைந்து செல்லாமல் தொடர்ந்து 'செல்வதனை இரண்டு வேட்பாளர்களுக்குமிடையிலான வாக்குப் பகிர்வு உறுதி செய்திருக்கிறது. புதிய ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் கடந்த கால காயங்களை ஆறச் செய்வதற்கான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இது உணர்த்துகிறது. கடந்த காலங்களின் இரு கட்சி அரசியல் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான ''மூன்றாவது சக்தியாக'' பரிணமித்த வேட்பாளருக்கும் தேர்தல் முடிவுகள் பலத்த அடியைக் கொடுத்துள்ளது. இந்த மாற்று வேட்பாளர்களுக்கு மொத்த வாக்குகளில் நான்கு வீதத்தைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இனங்களுக்கிடையிலான இந்தத் துருவமயப்படுதலுக்கான பிரதான காரணமாக முஸ்லிம் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதலின் அரசியல் தாக்கங்களை அடையாளப்படுத்த முடியும். 9/11 தாக்குதல் அமெரிக்காவினதும் மேற்கு ஐரோப்பாவினதும் சமகால அரசியலில் ஏற்படுத்திய தாக்கம் போன்றதானதொரு தாக்கத்தையே அது இங்கும் விளைவித்தது.

## ஈஸ்டர் தாக்குதல்

அரசாங்கத்துக்கும் தமிழ்க் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான 30 வருட யுத்தத்தின் தாக்கத்திலிருந்து நாடு மீண்டு வரும் நிலையிலேயே ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதல்கள் நடந்தேறின. அரச தலைமைகளின் கடுமையான தோல்வியையும் பாதுகாப்புத் துறையின் பலவீனத்தையும் இந்தத் தாக்குதல்கள் எடுத்துக் காட்டின. தாக்குதல்களின் அரசியல் தாக்கம் பலவாறாக அமைந்திருந்தது. இது நாட்டு மக்களிடையே பாதுகாப்பின்மை உணர்வை ஏற்படுத்தியது. அரசாங்கமும் அதனுடைய நிர்வாகமும் மக்களுக்கு பாதுகாப்பும் பாதுகாவலும் வழங்கும் என்ற நம்பிக்கையை மக்கள் இழந்தார்கள். மக்களின் கடும் கோபத்துக்கு மத்தியில் அரசாங்கம் உடனடியாகவே மக்களின் நம்பிக்கையீனத்துக்கு முகம் கொடுக்க வேண்டி வந்தது. இதனைத் தொடர்ந்து சமூக ஊடகங்களால் பரப்பப்பட்ட இஸ்லாமோபோபியா அலை குறிப்பாக சிங்கள பௌத்த மக்களிடையே வியாபிக்கத் தொடங்கியது.

## பலமான ஆட்சியாளர் - பலமான அரசு

சிங்கள தேசியவாதத்தின் இந்தப் புதிய பரிணாமம் புதிய அரசியல் அதிர்வலைகளை தோற்றுவித்திருக்கிறது. சர்வதேச தொடர்புகளை உடைய தொழில்நுட்பத் திறன் நிறைந்த புதிய தலைமுறை பயங்கரவாதத்திலிருந்து மக்களைக் காப்பாற்றக் கூடிய பலமான தலைவரைக் கொண்ட பல்மான அரசாங்கம் ஒன்றின் மூலமாக பலவீனமான செயற்திறனில்லாத அரசாங்கம் பிரதியீடு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை அது மேலோங்கச் செய்தது.

இதற்கிடையில் எல்ரிரிஈ க்கு எதிரான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த பாதுகாப்புச் செயலாளர் கோதபய ராஜபக்ஷ இந்த இடத்தை நிரப்புவதற்கான அபேட்சகராக தன்னை பிரச்சாரப்படுத்தத் தொடங்கினார். அதேபோல அவரது இரு சகோதரர்களும் முன்னிலை வகித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் தாராளவாத ஜனநாயகத்திலிருந்து விடுபட்ட தேசிய பாதுகாப்பை முன்னிறுத்திய அரசியல் பிரச்சாரமொன்றை மறுபுறத்திலிருந்து முன்னெடுத்தனர். ஆழமாகப் பிளவுபட்டு பலவீனப்பட்டிருந்த மைத்திரி - ரணில் அரசாங்கத்துக்கான பதிலீடாக அவர்கள் தம்மை முன்வைத்தனர். இதனால் ஈஸ்டர் தாக்குதல் பலவீனமான ஜனநாயக ஆட்சிக்கும் பலமான தேசியப் பாதுகாப்புக்கும் இடையிலான தெரிவொன்றை மேற்கொள்வதற்கான வாய்ப்பை ஈஸ்டர் தாக்குதல் வழங்கியது. இரு பிரதான வேட்பாளர்களாலும் முன்வைக்கப்பட்ட அரசியல் மாற்றீடுகளுக்கு தமிழ் சிங்கள முஸ்லிம் சமூகங்கள் வழங்கிய மறுமொழி இப்பொழுது வரலாறாகி விட்டது.

## தேர்தல் பிரச்சாரம்

தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னே ஆரம்பிக்கப்பட்ட புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளராக சஜித் பிரேமதாச களமிறங்கினார். இந்தக் கூட்டணியின் பிரதான பங்காளியாக ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அமைந்தது. இது பிரதானமாக தமிழ், முஸ்லிம் இனங்களை இணைத்த பல்லினங்களின் ஆதரவுடனான கூட்டணியாக அமைந்திருந்தது. கட்சிக்குள்ளால் சஜித்துக்கும் ரணிலுக்கும் நிலவிய ஒவ்வாமைகள் காரணமாக செப்டம்பர் மாதத்தின் இறுதிப்பகுதியிலேயே சஜித் வேட்பாளராக களமிறங்குவதற்கு கட்சியினால் அனுமதிக்கப்பட்டார். பந்தயத்தில் தாமதமாக வந்து குதித்த அவர், கோதபாய ராஜபக்ஷ முன்வைத்த தேசிய பாதுகாப்பு தொனிப் பொருளுக்கு மாற்றமாக தனது அரசாங்கத்தின் நவ-தாராளவாத பொருளாதாரத்தினதும் சமூக மாற்றக் கொள்கையினதும் நிகழ்ச்சி நிரலுக்குள் அடங்கி சமூக நல அரசொன்றைப் பற்றிய பிரச்சாரத்தை முன்னெடுத்தார். தனது பிரச்சாரங்களினூடாக அவர் தன்னை ஏழை எளிய மக்களின் தலைவனாக எடுத்துக் காட்டினார்.

பிரேமதாசவின் பிரச்சாரத்தின் மையப் புள்ளியாக அமைந்த சமூக நல அரசை மீளக்கட்டியெழுப்பும் தனது தந்தைவழி ஜனரஞ்சகம், சிங்கள பௌத்த வாக்காளர்களுக்கு மத்தியில் போதுமான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அத்தோடு பிரேமதாச மக்களின் நம்பிக்கையை இழந்த ஆளும் கட்சியின் வேட்பாளர் என்பதனால் ஆட்சிக்கெதிரான பிரதிகூலங்கள் எல்லாம் இவரது எதிர்த்தரப்புக்கான வாய்ப்புகளாக மாறின.

தென்மாகாணத்தின் உள்ளே நடந்த சஜித்தினது தேர்தல் பிரச்சாரங்களின் போதெல்லாம் 1980 களின் பிற்பகுதியில் சஜித்தின் தந்தையால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் மக்களின் ஞாபகத்துக்கு வந்து போயிருக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக, ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னரான சூழலில் சஜித் இலங்கையின் ஜனாதிபதியாவதற்குப் போதுமான அளவு தன்னை தேசியவாதியாகக் காட்டத் தவறியமை சிங்கள வேட்பாளர்கள் அவரை நிராகரிப்பதற்குக் காரணமாக அமைந்திருப்பதாகக் கருதலாம்.

## சமூகத்தின் பாதுகாப்பற்ற தன்மை

மறுபுறத்தில் பிரேமதாச பலமான சிங்களத் தேசியவாதியாக இல்லாமல் இருந்தமை தான் தமிழ் முஸ்லிம் வாக்குகளை, சில இடங்களில் 80 வீதம் வரை, அவருக்கு அள்ளித் தந்திருக்கிறது. தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் சிங்களவரை விட வித்தியாசமான பாதுகாப்பு அச்சம் இருக்கவே செய்தது. சிறுபான்மையின் பாதுகாப்பற்ற தன்மைக்கான முக்கிய காரணியாக அவர்கள் ராஜபக்ஷ குடும்பத்தின் தலைமையிலான சிங்கள தேசியவாத கூட்டணியின் அரசியல் மேலாதிக்கத்தைக் கருதுகிறார்கள். அவர்களுடைய கடந்த காலப் பதிவுகள் சிறுபான்மைச் சமூகத்துக்கு மொத்தமான சிங்களத் தேசியவாதக் கண்ணோட்டத்தையே காண்பித்திருக்கிறது.

ராஜபக்ஷவுடைய தேர்தல் வெற்றிக்கு வியூகம் அமைத்தவர்கள், சிறுபான்மையின் ஆதரவு இன்றி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்பதை நிறுவுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். இந்தியாவின் பிஜேபி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதைப் போல, பெரும்பான்மைச் சமூகத்தின் பாதுகாப்பு உணர்வையும் இனங்களுக்கிடையிலான ஆழமான பிளவையும் தேர்தலுக்கான வியூகமாகப் பயன்படுத்தும் உத்தியினால் இவர்கள் ஈர்க்கப்பட்டிருக்கலாம்.

தமிழ், முஸ்லிம் பெரும்பான்மை மாகாணங்களை நோக்கிய கோதாபய ராஜபக்ஷவுடைய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் சிறுபான்மைச் சமூகங்களுடைய பாதுகாப்பற்ற உணர்வுக்குத் தீர்வு தருவதாக அமையவில்லை. இதனால் தமிழ், முஸ்லிம்கள் எண்ணிக்கையில் அதிகமாக உள்ள மாவட்டங்களில் சஜித் பிரேமதாசவுக்கு கோதாபயவையும் விட ஒரு மில்லியன் வாக்குகளை அதிகமாகப் பெற முடிந்திருக்கிறது. பிரேமதாசவுடைய தேசிய அடைவையும் அடைவு வீதத்தையும் இவை தான் தூக்கிக் கொடுத்தன. வடக்கு கிழக்கின் பல தொகுதிகளில் கோதாபய 20 வீதத்துக்கும் குறைவான வாக்குகளையே பெற்றிருக்கிறார்.

9/11 தாக்குதல் மேற்கின் ஜனநாயகக் கொள்கைகளில் இருந்து தாராளமய ஜனநாயகத்தையும், பல்லினக் கலாச்சாரத்தையும், அரசியல் பன்மைத்துவத்தையும் கடத்திச் சென்று, பெரும்பான்மை இனங்களுக்கிடையில் பாதுகாப்பின்மை உணர்வை எப்படி ஆழமாக உருவாக்கியதோ அதேபோன்றதொரு படிமுறை மாற்றமே தெற்காசியாவிலும் நடைபெற்று வருகிறது. இது பல்லினச் சமூகங்கள் வாழும் சமூகங்களில் புதிய பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது. 2015 இல் ' இலங்கை இதற்கு விதிவிலக்கானது என நிறுவினாலும் 2019 ஆகும் போது அது தெளிவாகவே பூகோள ஒழுங்கில் இணைந்து கொண்டுள்ளது.

இதற்கிடையில், பாரிய தேர்தல் வெற்றியின் அழுத்தம், புதிய ஆட்சியின் முக்கிய பங்காளர்களாவிருக்கும் புதிய ஜனாதிபதிக்கும் அவரது குடும்பத்துக்கும் அவர்களது சிங்கள தேசியவாதிகளின் அபிலாஷைகளின் தூண்டுதலுக்கு இசைவதில் பெரும் தடைகளை ஏற்படுத்துவதாக அமையும். தேர்தல் முடிவுகளின் இனரீதியான துருவமயமாக்கல் குறிப்பாக இந்த விடயத்தில் தாக்கம் செலுத்தும்.

## நல்லிணக்கம்

இருந்த போதிலும், நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார மற்றும் நிர்வாகச் சிக்கல்களில் இருந்தும் தேக்க நிலையில் இருந்தும் நாட்டை விடுவித்து, பொருளாதார அபிவிருத்தியும் அரசியல் ஸ்திரத்தன்மையுமுள்ள நாடாக இலங்கையை மாற்றுவதாக வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு இலங்கையின் ஜனாதிபதி பெரும்பான்மை - சிறுபான்மை சமூகங்களுக்கு இடையில் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவது முக்கியமானது. அரசியல் ரீதியான குறைந்த செலவில் இந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு ஜனநாயக ரீதியான, உள்வாங்கும் போக்கிலான, கலந்துரையாடல்கள், மற்றும் இணக்கப்பாடான செயற்பாடுகளை முன்னெடுப்பதுவே சிறந்ததாக அமையும்.

அந்த வகையில், யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையில் மீளக்கட்டியெழுப்பல் மற்றும் மறுசீரமைப்பு விவகாரங் களில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைத் தொடர்வது எவ்வளவு தூரம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை ஜனாதிபதித் தேர்தலின் விளைவுகள் எடுத்துக் காட்டுகின்றன. முன்னைய முரண்பாடுகள், வன்முறைகள் மற்றும் ஜனநாயகப் பின்னடைவுகளில் இருந்து வெளியேறத் துடிக்கும் ஒரு நாட்டுக்கு காயத்தை ஆறச் செய்வதற்கே நல்லிணக்கம் தேவையாகிறது. அதனைக் கிளறுவதற்கல்ல.

(Economist.com)



# தனித்துவம் என்ற நிலைப்பாடு முஸ்லிம்களைத் தனிமைப்படுத்தி விட்டது

தனித்துவம் என்கிற அதீதமான பேச்சு, முஸ்லிம் சமூகத்தைத் தனிமைப்படுத்தி விட்டது என்று முன்னாள் அமைச்சரும் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத் பிபிசியிடம் கவலை தெரிவித்தார். அடையாளத்தையும் தனித்துவத்தையும் பேணிக் கொண்டு, தனிமைப்படாமல் இருப்பதற்குரிய அரசியலை முஸ்லிம்கள் செய்ய வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மூடுண்ட மனநிலையில், அறிவியல் பூர்வமான அரசியல் பார்வையைக் கொடுக்காத தலைவர்கள், தமிழர்களையும் முஸ்லிம்களையும் உணர்ச்சிவசப்பட்டு வாக்களிக்கும் இயந்திரங்களாக மாற்றி விட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களும் முஸ்லிம்களும் எடுத்த தீர்மானங்கள் வெற்றியளிக்காதது தொடர்பிலும், சிங்கள மக்களின் தனிப்பெரும்பான்மை ஆதரவுடன் கோட்டாபய ராஜபக்ஷ, இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றமை குறித்தும், முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் உடன் பிபிசி தமிழ் பேசியபோது, அவர் இந்த கருத்துக்களை தெரிவித்தார்.



தமிழர் விடுதலை இயக்கங்களில் ஒன்றான 'ஈரோஸ்' அமைப்பின் மூத்த போராளியான பஷீர் சேகுதாவூத், அந்தக் இயக்கம் ஊடாக 1989ஆம் ஆண்டு நாடாளுமன்றம் சென்றார். அதன்பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்ட அவர், அந்தக் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைமை அந்தஸ்துள்ள தவிசாளர் பதவியை நீண்டகாலம் வகித்து வந்தார். ஆயினும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் 'ஏற்பாட்ட முரண்பாடு காரணமாக அந்தக் கட்சியிலிருந்து வெளியேறிய பஷீர் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட கட்சியின் தவிசாளர் பதவியை தற்போது வகிக்கின்றார்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பஷீர் சேகுதாவூத் தலைமையிலான ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. இதற்காக முஸ்லிம் சமூகம் சார்பில் 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, கோட்டாபய ராஜபக்ஷவின் பொதுஜன பெரமுன கட்சியுடன் இவர் தலைமையிலான ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு - புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினையும் செய்து கொண்டது. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கும் பொருட்டு, கோரிக்கைகளை முன்வைத்து ஒப்பந்தமொன்றினை செய்து கொண்ட ஒரே முஸ்லிம் கட்சி ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பின்னணியில், பஷீர் சேகுதாவூத் தரப்பினர் ஆதரவளித்த ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தற்போது வெற்றிபெற்றுள்ள நிலையில், அது குறித்தும் பிபிசி உடன் பசீர் பேசினார். 'கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியானது, இலங்கை அரசியலில் பெரிய மாறுதலையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தும். இதன் மூலம் புதிய யுகம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். தமிழ் பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் புரிந் துணர்வு வரக்கூடிய வகையிலான வேலைத் திட்டங்களை எதிர்காலத்தில் செய்ய வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு எங்களுக்கு இருக்கிறது' என்றார் பஷீர்.

யாரும் யாரையும் பழிவாங்காத வகையில், குரோத உணர்வுகள் இல்லாத வகையில் மத, இன, மொழி அடிப்படையிலான வேறுபாடுகள் இல்லாத வகையில், புதியதொரு இலங்கையைக் கொண்டு செல்ல வேண்டும் என்கிற எண்ணம் இந்தப் புதிய அரசாங்கத்துக்கு இருக்கிறது என்பது தனது நம்பிக்கை. என்றும் அவர் கூறினார். எதிர்காலத்தில் எல்லா மக்களும் சேர்ந்து, கைகோர்த்து வாழ்கின்ற புதியதொரு நிலைமைக்கு நாட்டைக் கொண்டு செல்ல வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலின் பின்னர்

## - சில சிந்தனைகள்





அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பழீல்

முதற்கண் புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள். அவரது ஆட்சிக்காலம் இலங்கை மண்ணுக்கு நல்லதொரு சுபீட்சமான காலமாக அமைய வேண்டும் என்று வல்லவன் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கிறேன்.

இலங்கையின் வாக்காளர்களில் பெரும்பாலானவர்கள் கோத்தாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாக வருவதற்கான தமது விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். 50%ற்கு மேல் வாக்குகளைப் பெறுபவர் ஜனாதிபதியாக தெரிவாகுவார் என்ற ஜனநாயக முறையை ஏற்றவர்கள் யாராக இருப்பினும் இத்தீர்ப்பை அங்கீகரிக்க வேண்டும்.

**வாக்களிப்பு பின்வரும் உண்மைகளை உணர்த்துகிறது:-**

சிங்களவர்களிற் பெரும்பாலானவர்கள் அவரை ஆதரித்திருக்கிறார்கள். தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்காளர்களில் பெரும்பான்மையினர் அவரது வருகையை விரும்பவில்லை. எனவே, சஜித் பிரேமதாச அவர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். ஆனால், சிறுபான்மையினரின் ஒரு கணிசமான தொகையினர் கோட்டா அவர்களது கொள்கைகளை ஆதரித்தது மட்டுமன்றி அவரது வெற்றிக்காக உழைத்துமிருக்கிறார்கள்.

வாக்களிப்பது என்பது அவரவர் உரிமை என்பதையும் அது அவரவரது மனப்பாங்குகள் மற்றும் எதிர்பார்க்கைகளோடு சம்பந்தப்பட்டது என்பதாலும் அதனை நாம் மதிப்பது அவசியமாகும்.

மேலும் இரண்டு முடிவுகளுக்கு வர முடியும்.

1. சிங்களவர்களிற் பெரும்பாலானவர்களிடம் முஸ்லிம்கள் பற்றிய பயம், கோபம், வெறுப்பு, அரசியல் அதிகாரத்தை அவர்கள் பெற்றுக் கொண்டால் அதனை பயன்படுத்தி உழைப்பார்கள், அதிகமான சலுகைகளை பெற்றுக் கொள்வார்கள், முஸ்லிம் தீவிரவாதம் வளரும் போன்ற கருத்துக்கள் நிலவுகின்றன. எனவே, முஸ்லிம்கள் எந்தக் கட்சியை அல்லது வேட்பாளரை ஆதரிக்கிறார்களோ அந்தக் கட்சியை அல்லது வேட்பாளரை நாம் வீழ்த்த வேண்டும், இல்லாவிட்டால் நாடு குட்டிச்சுவராகி விடும், சிங்கள இனமும் அழிந்துவிடும் என்று அவர்கள் பலமாக நம்பினார்கள். இப்படியான நிலை இருக்கையில் இந்தத் தடவை தமிழ் முஸ்லிம் கட்சிகள் சஜித் உடன் இணைந்தமை எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல் ஆகிவிட்டது.

2. பெரும்பாலான முஸ்லிம்களும் தமிழர்களும் சஜித்தை ஆதரிக்கக் காரணங்கள் இருந்தன. கடந்தகால அனுபவங்களை வைத்துப் பார்க்கும் போது நமது உரிமைகள் எதிர்காலத்தில் மேலும் பாதிக்கப்படலாம், சிங்கள இனவாதம் மேலும் வளரலாம், எனவேதான் இந்நிலையிலிருந்து நம்மை சஜித் மீட்பார் என்ற நம்பிக்கை அவர்களுக்குள் ஊட்டப்பட்டது.

ஆனால், இப்படியாக இந்நாட்டின் எல்லா சமூகங்களும் போல் தமது தலைவரைத் தெரிவு செய்யும் போது இனரீதியாக சிந்திக்கின்ற நிலை பல்லினங்கள் வாழும் இந்த நாட்டுக்கு எப்படியுமே ஆரோக்கியமானதல்ல.

உணர்வு பூர்வமான இத்தகைய சூழல் நாட்டுக்கு பேராபத்தைக் கொண்டு வரும்.

இப்படியான பதட்டமான நிலையில் தான் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இப்படியான மிகவும் முரண்பட்ட பகைமை நிலையில் தமிழ் முஸ்லிம் சிங்கள சமூகங்கள் இருந்தால் நாடு உருப்படுமா? ஆனால், நாடு அபிவிருத்தி காண வேண்டு மாயின் இனங்களுக்கிடையில் உறவுகள் பலப்படுத்தப்பட வேண்டும். எனவே, பலருக்கும் பொறுப்புகள் இருக்கின்றன.

1. தமிழர்களிலும் முஸ்லிம்களிலும் கணிசமான தொகையினர் ஏன் அடுத்த பக்கத்துக்கு வாக்களித்தார்கள் என்பதை ஜனாதிபதி கோட்டாபய அவர்களும் அவருக்கு வாக்களித்தவர்களும் நன்கு புரிந்து அந்த சிறுபான்மையினரது மனதில் உள்ள அச்சத்தை, பயத்தை போக்கி அவர்களையும் அரவணைத்துக் கொண்டு போகவேண்டும். தமிழர்களையும் முஸ்லிம்களையும் பொருட்படுத்தாமல் அவர்களது சகவாசம் இன்றி அவர்களது ஒத்துழைப்பின்றி இந்த நாட்டை கொண்டு போக முடியாது, நாட்டில் சமாதானத்தை கட்டியெழுப்ப முடியாது. அவர்களை ஒதுக்கி வைத்து விட்டு பயணத்தை மேற்கொள்ள முடியாது என்று அவரும் அவரைச் சார்ந்தவர்களும் நினைத்து அதற்கேற்ப தமது கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். அவர்களது முதற் பணி சமாதான சகவாழ்வுக்கான வேலைத் திட்டங்களாக இருக்க வேண்டும்.

2. கோட்டாபய அவர்களை ஆதரித்த முஸ்லிம்களும் அவருக்கு நெருக்கமானவர்களும் இனங்களுக்கிடையிலான உறவுப் பாலமாக அமைய வேண்டும். அவர்களுக்கு பெரும் பொறுப்புள்ளது. அவர்கள் எப்படியாவது ஒரு சுமுகமான நிலையை உண்டுபண்ண அமானிதமாக முயற்சிக்க வேண்டும். இது அவர்களுடைய தலையாய கடமையாகும். அவர்களுக்கு அவரிடத்தில் இருக்கும் செல்வாக்கை இதற்காகப் பயன்படுத்துவது அமானிதமாகும்.

3. இந்நாட்டில் சமாதான சகவாழ்வு ஏற்பட வேண்டும் என்று விரும்பும் எல்லா சமூகங்களையும் சேர்ந்த கொள்கை வகுப்பாளர்கள் நாட்டில் இன ரீதியாக மத அடிப்படையில் சிந்திக்கும் தீவிரவாத குழுக்களுக்கு இந்த சூழல் தீனி போட்டு வளர்க்கும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். எனவே, கல்வி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் கொள்கைகளை வகுக்கின்ற பொழுது சமாதானத்தை வளர்க்கும் வகையில் அமைத்துக் கொள்ள வேண்டும். பண்டாவும் பெர்னான்டோவும் குமாரும் ஹம்சாவும் பழைய தவறுகளை மறந்து கைகோர்த்து பயணிக்கும் ஒத்திசைவான நிலை உருவாக வேண்டும்.

4. புதிய ஜனாதிபதி அவர்கள் முஸ்லிம் சமூகம் தொடர்பான முடிவுக்கு வருவதற்கு முன்னர் அதன் அரசியல் தலைவர்களது முடிவுகளை பார்த்து முடிவெடுக்காமல் சிவில் மற்றும் மார்க்கத் தலைமைகளது அபிப்பிராயங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. முஸ்லிம் சமூகத்தின் பொறுப்புகள்

- அல்லாஹ்வுடனான தொடர்பை வலுப்படுத்திக் கொள்வது,
- உயர்ந்த பட்ச அறிவுச் சமூகமாக மாறுவது,
- பண்பாடுகள் விடயத்தில் அதி கூடிய கரிசனை எடுப்பது,
- தமது நலன்களை விட தேசத்தின் நலனுக்கு முன்னுரிமை கொடுப்பது,
- கரைந்து போகாமல் கலந்து வாழுகின்ற அதே நேரத்தில் ஏனைய சமூகங்களுடைய உணர்வு களையும் புரிந்து வாழ்வது,
- ஏனைய சமூகங்களுக்கு முன்னால் தலை நிமிர்ந்து சுயகௌரவத்துடன் வாழ வேண்டும் என்பதனால் இலங்கையின் உயர் பொறுப்பு களில் மார்க்கமும் அறிவும் பண்பாடும் சமூக உணர்வும் பரந்த மனப்பாங்கும் தேசப்பற்றும் கொண்டவர்களை அமர்த்தும் வகையில் நீண்ட திட்டமிடல்களை செய்வது.

மேலும், பயமுறுத்தும் வகையிலான, அதைரியத்தை ஏற்படுத்தும் வகையிலான, வென்றவர்களை தூற்றும் வகையிலான சமூக வலைத்தள பதிவுகளை முற்றாகத் தவிர்ப்போம்.

பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த சிலர் முஸ்லிம்களை கடுப்பேற்றும் வகையில் சில பதவிகளை இட்டு வருகிறார்கள். அவற்றிற்கு கடுப்பான பதில் கொடுக்காதிருப்போம். இன்ஷா சுமுகமான சூழ்நிலை உருவாகும். அதற்காக ஒவ்வொருவரும் எம்மால் ஆனதைச் செய்வோம்.

எனவே, அல்லாஹ்வின் நாட்டத்தை ஏற்போம்! விரக்தியடையாமல் எமது தவறுகள் எனும் இடிபாடுகளுக்குள் இருந்து எழுந்து பயணிப்போம்.

அல்லாஹ்வின் அருளால் பயப்படத் தேவையில்லை. புதிய ஜனாதிபதி தேசத்துக்கு நல்லதைச் செய்வார் என நல்லெண்ணம் வைப்போம். எதனையும் நேர்மறையாகப் பார்ப்பது முஃமின்களது பண்பாகும்.

யஃகூப்(அலை) கூறியதாக அல்லாஹ் கூறுகிறான்:- 'அல்லாஹ்வின் அருளைப் பற்றி நம்பிக்கை இழக்காதீர்கள். நிச்சயமாக நிராகரிக்கும் சமூகத் தைத் தவிர (வேறுயாரும்) அல்லாஹ்வின் அருளைப் பற்றி நம்பிக்கை இழக்கமாட்டார்கள்.'

இறுதியாக! உரிமைகளுக்கு முன்னர் கடமைகள் என்பதே எமது தாரக மந்திரமாக இருக்கட்டும்.

எமது தேசம், இந்நாட்டு மக்கள், முஸ்லிம் சமூகம் என்ற முக்கோண குறிக்கோள்களைப் பாதுகாப்பது என்பது எம் அனைவரதும் இலக்காக இருக்க வேண்டும்.

அல்லாஹ் எம் அனைவரையும் இந்த நாட்டையும் பாதுகாப்பானாக!

ஐக்கியப் பட்ட மூன்று இனங்களுக்கு மேலால் நின்ற வண்ணம் இன்ஷா அல்லாஹ் அந்த வண்ணாத்திப் பூச்சி சிறகடித்துப் பறப்பதைக் காண ஆசையாக இருக்கிறது.

## குற்றஞ்சாட்டப்பட்டவர்... (01 ஆம் பக்கத் தொடர்)

தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை என்பதை கோட்டாபய ராஜபக்ஷ அறிந்திருப்பது நல்லதொரு விடயம் எனவும், அதற்கான காரணத்தையும் அவர் அறிந்திருக்க வேண்டும் எனவும் இந்த விடயம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சனையை தீர்த்துக் கொள்வதற்கு தமிழ் மக்களின் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி, அதனை தீர்த்துக்கொள்ள உடன் முன்வர வேண்டும் எனவும் அவ்வாறாயின், பெரும்பான்மை வாக்குகளினால் வெற்றி பெற்ற ஜனாதிபதியுடன் சேர்ந்து பயணிக்க தாம் தயாராகவே உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்..

தமிழர்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் தனது சகோதரரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமே கலந்துரையாட வேண்டும் என கோட்டாபய ராஜபக்ஷ தன்னிடம் தெரிவித்ததாகக் குறிப்பிடும் சுமந்திரன், அரசியல் தீர்வை வழங்கும் பொறுப்பு மஹிந்த ராஜபக்ஷவிடம் உள்ளதாக கூறப்பட்ட போதிலும், தான் அவரை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்திய சந்தர்ப்பங்களில் அவர்கள் வெவ்வேறு விடயங்களை வெளியிட்டாரே தவிர, அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் கலந்துரையாடவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் தீர்வு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியிடம் தெளிவான தன்மை இருந்ததாகவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிடம் தெளிவான தன்மை இருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இந்தியா - இலங்கை ஒப்பந்தம் தொடர்ந்தும் அமுலில் இருக்கின்றமையினால், இந்தியாவின் ஈடுபாடு தொடர்ந்தும் காணப்படும். இந்த விடயம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷ நன்கறிவார். இலங்கையில் அரசியல் மாற்றம் ஏற்பட்டால் முதலில் வாழ்த்து சொல்வது இந்தியா எனவும், இலங்கையில் தெரிவாகும் ஜனாதிபதியும் இந்தியாவிற்கே முதலில் பயணம் செய்வார் எனவும் அவர் கூறினார்.

இந்த நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ இந்தியாவிற்கான விஜயத்தில் ஈடுபடும் போது, தேர்தல் முடிவுகளே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு இன்னும் இல்லை என்பதை காட்டுகின்றது எனவும், தமிழர் பிரச்சினைக்கான தீர்வை செய்ய வேண்டும் என இந்திய பிரதமர், கோட்டாபய ராஜபக்ஷவை வலியுறுத்துவார் எனவும் அதன்பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும், இதுவே காலம்

காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழுத்தம் தொடர்ந்தும் வழங்கப்படும். மஹிந்த ராஜபக்ஷ 2009 முதல் 2015ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த சந்தர்ப்பத்திலும் தாம் வலுவான அழுத்தங்களை கொடுத்ததாக கூறிய அவர், அந்த சந்தர்ப்பத்திலேயே ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் குறிப்பிட்டார். இந்த நிலையில், குற்றஞ்சாட்டப்பட்டவர் நாட்டின் ஜனாதிபதியாக வந்துவிட்டார் என்பதற்காக, தாம் வழங்கும் அழுத்தங்களை விடப்போவதில்லை என எம்.ஏ. சுமந்திரன் மேலும் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 20 உறுப்பினர்களை பெறக்கூடிய வாய்ப்பு கிடைக்குமானால், வரவுள்ள ஆட்சியில் தவிர்க்க முடியாத சக்தியாக தாம் மாற முடியும் என அவர் நம்பிக்கை வெளியிடுகின்றார். இவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்குமாக இருந்தால், தமது இலக்கை நோக்கி இலகுவாக நகர முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கின்றார்.

## எதிர்க்கட்சித்... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவரை ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றினால் வாக்குச் சீட்டொன்றின் மூலமாகத் தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கேட்டுள்ளார்.

1994 ஆம் ஆண்டில் எதிர்க்கட்சித் தலைமைக்காக முதலில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 02 வாக்குகளால் காமினி திசாநாயக்கவினால் தோற்கடிக்கப்பட்டார். பின்னர் அதே வருடத்தில் காமினி திசாநாயக்க கொல்லப்பட்தனால 2001 வரை ரணில் அந்தப் பதவியை வகித்தார். மீண்டும் 2004 ஆம் ஆண்டில் எதிர்க்கட்சித் தலைவராகிய அவர் 2015 வரை அந்தப் பதவியை வகித்தார். இந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க 17 வருடங்களுக்கு மேல் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அனுபவசாலியாவார்.

இம்முறை ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட சஜித் பிரேமதாசவின் தோல்விக்கு ரணில் விக்கிரமசிங்கவே காரணமாக இருந்தார் என்ற கருத்துக்கள் மேலேந்து வரும் நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பதிலும் தற்பொழுது போட்டி நிலவி வருகின்றது.

## சஜித் அணி... (01 ஆம் பக்கத் தொடர்)

சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக்கு முயற்சித்தவர்களும் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்குப் பின்னால் நின்று உழைத்தவர்களும் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் பதவி நிலைகளில் உரிய மாற்றங்கள் ஏற்படாவிட்டால் தான் அரசியலில் இருந்தே ஒதுங்கி விடப் போவதாக சஜித் தெரிவித்திருக்கிறார். ஆனால் மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு தான் நிச்சயம் பதிலளிக்க வேண்டியிருக்கிறது எனவும் தெரிவித்திருக்கிறார்.

அவருக்கு வாக்களித்த மில்லியன் கணக்கான மக்களும் இதனையே எதிர்பார்க்கிறார்கள். எனவே கட்சியின் தலைவராக நியமிக்கப்படுவதற்கும் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்படுவதற்கும் அவரே பொருத்தமானவர். தேர்தலொன்றில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரொருவர் பெற்ற ஆகக் கூடிய வாக்குகளை அவரே பெற்றிருக்கிறார் எனவும் முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

தோல்விக்கு சஜித்தை காரணமாகக் கூற முடியாது. அவரது எதிராளி ஆகஸ்ட் 12 ஆம் திகதியே களத்தில் குதித்து விட்டார். சஜித்துக்கு போட்டியிடுவதற்கான அனுமதி அக்டோபர் 07 இலேயே கிடைத்தது. இதனால் அவரது பிரச்சாரத்தைத் திட்டமிட்டுக் கொள்ள அவருக்கு அவகாசம் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## சிந்தனைப்... (01 ஆம் பக்கத் தொடர்)

பிரியாவிடை நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார். பயங்கரவாத முறியடிப்பு மற்றும் வன்முறைத் தீவிரவாதங்களை எதிர்கொள்வதற்காக வெளிநாடுகளின் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சிரேஷ்ட அலுவலர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இலங்கை இராணுவத்திலிருந்து ஒரு குழுவினர் இது தொடர்பில் ஆராய்ந்து வழங்கிய முன்மொழிவுகளில், எல்லா வகையான மதத் தீவிரவாதத்தையும் வன்மத் தீவிரவாதத்தையும் எதிர்கொள்வதற்காக ஜனாதிபதி செயலணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளனர்.

மதத் தீவிரவாதத்தையும் வன்மத் தீவிரவாதத்தையும் இல்லாதொழிப்பதற்கான தேசிய செயல்திட்டமொன்று வரையப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநலம் 43

# ஆளுமைக் கோளாறுகள்
## (Personality Disorder)



ஆளுமை என்பது ஒருவரது நடத்தையின் முழுமையான அமைப்பாகும். ஓரளவு நிரந்தரமான, தனித்துவமான சிந்தனைக் கோலங்கள், உணர்ச்சிகள், செயற்பாடுகள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அமைப்பே இது. அடிப்படையில் Personality எனும் ஆங்கிலச் சொல் Persona எனும் லத்தீன் சொல்லிலிருந்து மருவியுள்ளது. லத்தீன் மொழியில் Persona என்பது ஒருவர் அணிந்திருக்கும் முகமூடியைக் குறிக்கின்றது. ஒருவர் ஏனையோர்கள் மத்தியில் எவ்வாறு தோன்றுகிறார், நடத்தைகளை வெளிப்படுத்துகிறார் என்பதையே இந்த லத்தீன் சொல் குறித்து நிற்கின்றது.

உளவியலில் ஆளுமை குறித்து அநேக ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. ஆளுமை உளவியல் (Personality Psychology) என தனித்துறையொன்று வளர்ச்சியடைந்துள்ளது. அதில் ஆளுமையைத் தீர்மானிக்கும் காரணிகள், ஆளுமையை வளர்ப்பதற்கான வழிகள், ஆளுமைக் கோளாறுகள் என்பன விரிவாக ஆராயப்படுகின்றன.

தனியாள் ஒருவர் சூழலுடன் இயைபாக்கம் பெறுவது அவரது ஆளுமையைப் பொறுத்தது என்ற கருத்தின் அடிப்படையில் கோடன் ஒல்பொட் (1964) என்பவர், ''ஆளுமை என்பது ஒருவர் தனக்கே உரிய முறையில் சூழல், சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பொருத்தப்பாடு காணும் தன்மையை நிர்ணயிக்கும் உள, உடல் அமைப்பு ஆகும்'' என வரைவிலக்கணப்படுத்துகிறார்.

ஆளுமையை விளக்குவதற்கு உளவியலாளர்கள் பல்வேறு கொள்கைகளை முன்வைத்துள்ளனர். அக்கொள்கைகள் அடிப்படையில் ஆளுமையின் விளக்கம் பற்றிய நான்கு முக்கிய அணுகுமுறைகளை பிரதிபலிக்கின்றன. அவற்றைச் சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. உளப் பகுப்பாய்வு அணுகுமுறை
2. பண்புக் கூறு அணுகுமுறை
3. மனிதத்துவ அணுகுமுறை
4. சமூக அறிகை அணுகுமுறை

ஆளுமையைத் தீர்மானிக்கும் காரணிகளின் அடிப்படையிலேயே மேற்போந்த அணுகுமுறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. குழந்தைப் பருவ அணுகுமுறைகள், பரம்பரைக் காரணிகள், சூழ்நிலைக் காரணிகள், நரம்பியல் காரணிகள் என்பன ஒருவரது ஆளுமையில் செறிந்த செல்வாக்குள்ளவை என உளவியலாளர்கள் எடுத்துரைக்கின்றனர்.

ஒருவரின் அறிகை, மனவெழுச்சி, உள இயக்க மண்டலங்கள் -அதாவது சிந்தனை, உணர்ச்சி, செயல் ஆகியன சமநிலையில் விருத்தியடையும்போது அவர் சமநிலை ஆளுமை பெறுகிறார். ஒருவரின் சிந்தனை, உணர்ச்சி, செயல் ஆகியன ஒன்றுக்கொன்று முரண்பாடற்று ஒத்துக் காணப்படுமாயின் அதனை ஒன்றிணைந்த ஆளுமை (Integrated Personality) என்பர். மறுதலையாக அவை முரண்பட்டுக் காணப்பட்டால் அதனை ஆளுமைக் கோளாறு என்பர்.

பொதுவாக ஆளுமைக் கோளாறுகளின் பண்புகளாக உளவியலாளர்கள் வலியுறுத்தும் பல பண்புகள் உள்ளன. ஏனையோரை எவ்வேளையிலும் குறை கூறுவது, நெகிழ்ச்சியற்ற தன்மை, தவறான நடத்தைகள், சூழ்நிலைக்கு இசைவாக்கம் பெற முடியாத தன்மை, அதீத இலட்சியவாதம், குடும்பத்தாருடனான கடும் முரண்பாடு, எவருடனும் நீண்டகாலத்திற்கு உறவுகளைப் பேண முடியாத நிலை, உணர்ச்சிக் கொந்தளிப்பு, அடிக்கடி மனநிலை மாற்றம் என்பன அவற்றுள் சில.

ஆளுமைப் பண்புகளில் ஏற்படும் அசாதாரண மாற்றம் அல்லது நியம ஆளுமையிலிருந்து விலகிச் செல்லல் பொதுவாக ஆளுமைக் கோளாறு எனக் கொள்ளப்படுகின்றது. இவை மனயியலின் நோய்க் கூறுகளாகக் கொள்ளப்படாவிட்டாலும் சிலபொழுது மருத்துவ சிகிச்சையை வேண்டி நிற்கும் உளக் கோளாறுகளாக சில உள மருத்துவர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றன.



உள்ளிருக்கும் அனுபவம் நடத்தை ஆகியவை அழியா முறைமையாக இருப்பதனால் அவை மனம் முழுவதும் ஊடுருவி தன்னிலையை வளைத்துக் கொடுக்காமல் இயங்குகின்றது. இவை உள்ளத்தில் கேட்டையும் அவலத்தையும் விளைவித்து சமூக நெறிகளிலிருந்து விலகி வாழ வைக்கின்றன.

எடுத்துக் காட்டாக, தன் மோக ஆளுமை மாறாட்டம் உள்ளது. அதில் தேவைக்கு மேல் நடந்துகொள்ளல், தன்னை வியக்க வேண்டும் என விரும்புதல், மற்றவரின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமை ஆகியவை அடங்கும். இத்தகைய ஆளுமைக் கோளாறுகளில் பல வகை உள்ளது. ஒரே கருத்தில் ஊன்றிப் போகும் ஆளுமைக் கோளாறு (Obsesive Personality Disorder), முரண்சிந்தனை ஆளுமைக் கோளாறு (Sehizoid Personality Disorder) என்பன அவற்றுள் தீவிரமானவை.

## கம்பஹா மாவட்ட முஸ்லிம் கல்வி – 10

# இடைவிலகல் குறித்து ஆசிரியர்கள்...

**கலாநிதிப் பட்டத்திற்காக றவூப் ஸெய்ன் மேற்கொண்ட கம்பஹா மாவட்ட இடைநிலைப் பாடசாலை மாணவர் இடைவிலகல் எனும் தலைப்பிலான ஆய்வின் அறிக்கை முக்கியத்தும் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**



07. வீட்டில் நூலகமொன்றை அல்லது புத்தக அலுமாரியொன்றைப் பராமரிக்கும் பழக்கம் 17 சதவீதமான ஆசிரியர்களிடமே உள்ளது, 27 சதவீதமானவர்களிடம் ஓரளவுக்கு உள்ளதெனவும் 30 சதவீதமானவர்கள் குறைவு எனவும் 18 சதவீத மானோர் தமது வீட்டில் ஒரு நூல் நிலையம் இல்லை எனவும் தெரிவித்துளனர்.

08. பாடத்தைத் திட்டமிடல் (Lesson Planning) எந்தளவுக்கு உள்ளதென்ற உருப் படிக்கு 30 சதவீதமான ஆசிரியர்களே முழுமையான திட்டமிடல் அடிப்படையில் தமது கற்பித்தலை அமைத்துக் கொள்வதாகவும் 29 சதவீதமானவர்கள் ஓரளவுக்குத் திட்டமிடலில் கவனம் செலுத்துவதாகவும் 20 சதவீதமானவர்கள் குறைந்தளவே இவ்விடயத்தில் ஈடுபடுவதாகவும் 21 சதவீதமானோர் பாடத் திட்ட மிடலில் ஈடுபடவில்லை எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

09. கற்பித்தலுக்குத் தயாராகுதல் (Preparing for Teaching) 19 சதவீதமான ஆசிரியர் களே வகுப்பறைக் கற்பித்தலுக்கு முன்கூட்டியே தயார் நிலையில் வருகின்றனர். முழுமையான தயார் நிலையில் வகுப்பறைக்கு சமுகமளிக்கின்றனர். 32 சதவீதமான ஆசிரியர்கள் ஓரளவுக்கே கற்பித்தலுக்குத் தயாரான நிலையில் பாடசாலைக்கு சமுகமளிக்கின்றனர். 30 சதவீதமானோர் மிகக் குறைவாகவே தாம் பாடத்தைக் கற்பிப்பதற்கு முன்கூட்டியே தயாராகுவதாகவும் 19 சதவீதமான ஆசிரியர்கள் தயாராகுவதில்லை எனவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

10. கற்பித்தல் தொடர்பான கருத்தரங்குகளில் பங்கேற்றல் தொடர்பான வினாக் கொத்து உருப்படிக்கு 20 சதவீதமானஆசிரியர்கள் முழுமையாகப் பங்கேற்ப தாகவும் 25 சதவீதமான ஆசிரியர்கள் ஓரளவுக்குப் பங்கேற்பதாகவும் 30 சதவீதமான ஆசிரியர்கள் சிறிதளவு பங்கேற்பதாகவும் 25 சதவீதமான ஆசிரியர்கள் பங்கேற்பதில்லை எனவும் பதிலளித்துள்ளனர்.

11. பாடப்பரப்பு பற்றிய நிபுணத்துவ அறிவு (Expert Knowledge) குறித்த உருப்படிக்கு 30 சதவீதமான ஆசிரியர்கள் பாடஅறிவு (Subject Knowledge) நிபுணத்துவம் வாய்ந்தது எனவும் 30 சதவீதமானோர் ஓரளவுக்கு நிபுணத்துவ அறிவுள்ளோர் எனவும் 30 சதவீதமானோர் சிறிதளவு நிபுணத்துவ அறிவு தமக்குள்ளதென்றும் 10 சதவீதமானோர் பாடப் பரப்பில் நிபுணத்துவ அறிவு இல்லை எனவும் கருத்துவெளியிட்டுள்ளனர்.

12. ஆசிரியர் வாண்மை விருத்தியிலான ஈடுபாட்டைப் பொறுத்தவரையில் 29 சதவீத மானவர்களே வாண்மை விருத்தியில் (Professional Development) முழுமையான அக்கறையும் கவனமும் தமக்குள்ளதென்றும் 28 சதவீதமான ஆசிரியர்கள் ஓரளவுக்கு இந்த அக்கறையையும் கவனத்தையும் கொண்டுள்ளதாகவும் 27 சதவீதமானோர் சிறிதளவு வாண்மை விருத்திச் செயற்பாடுகளில் தாம் ஈடுபடுவதாகவும் தெணிரிவித்துள்ளனர். 16 சதவீதமானோர் இது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

13. அறிவைப் பெறும் நோக்கிலான தொடர்பூடகப் பயன்பாடு என்ற உருப்படிக்கு 38 சதவீதமான ஆசிரியர்கள் தொடர்பூடகங்களை அதிகபட்சம் பயன்படுத்துவதாகவும் 17 சதவீதமான ஆசிரியர்கள் சிறிதளவு பயன்படுத்துவதாகவும் 12 சதவீத மானவர்கள் பயன்படுத்தவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

## அன்னை ஆயிஷா (றழி) அவர்களின் வாழ்வியல் – 15

# மு:மின்களின் தாய்

### நபிகளாரிடம் சந்தேகங்களை நிவர்த்திக்கும் ஆயிஷா

அறிவைப் பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட பாடவேளைகளோ நேரங்களோ இருக்கவில்லை. ஏனெனில், ஷரீஆவைப் போதிக்கும் ஆசிரியர் வீட்டிலேயே தன்னோடு இருந்தார். எனவே, அவரிடமிருந்து அதிகபட்சம் மார்க்க அறிவையும் விளக்கங்களையும் பெறுவதில் ஆயிஷா தீவிர ஆர்வம் காட்டினார். நபிகளாரோடு அவர் வாழ்ந்தமை அவருக்குக் கிடைத்த பெரும் கண்ணியமாகும். மஸ்ஜிதுந் நபவியில் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் தஃவா, அறிவு வட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. ஏனெனில், அவரது அறையின் கதவு மஸ்ஜிதுந் நபவியோடு இணைந்திருந்தது. இதனால், வீட்டுக்கு வெளியில் பொதுமக்களுக்கு முன்னால் நபிகளார் மக்களுக்குப் போதித்த அறிவையும் மார்க்க விளக்கங்களையும் பெற்றுப் பயனடையும் வாய்ப்பு ஆயிஷாவுக்குக் கிடைத்தது.

இந்த சந்தர்ப்பங்களில்தான் கேட்கின்ற விளங்காத விடயங்கள் குறித்து நபிகளாரிடம் விளக்கம் கேட்கும் வழக்கத்தை அவர் ஏற்படுத்திக் கொண்டார். தனக்கேற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதில் அவர் தயக்கம் காட்டவில்லை. ரஸூலுல்லாஹ் வீட்டுக்கு வருகின்றபோது அவரிடம் ஆயிஷா விளக்கம் கேட்பவராக இருந்தார்.

சிலநேரம் மஸ்ஜிதுந் நபவிக்கு மிகச் சமீபமாக வந்து, மிக அருகிலிருந்து ரஸூலுல்லாஹ்வின் போதனைகளை செவிமடுப்பவராகவும் அவர் இருந்தார். அதே போன்று வாரத்தில் ஒருநாளை நபிகளார் தனது மனைவிமார்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கும் உபதேசம் செய்வதற்குமென சிறப்பாக ஒதுக்கியிருந்தார்கள். இரவிலும் பகலிலும் பல்வேறுபட்ட அறிவுத் துறைகளையும் விவகாரங்களையும் நபிகளாரின் போதனைகளிலிருந்து பெண்கள் புரிந்துகொண்டார்கள்.

அதிகம் கேள்வி கேட்பது ஆயிஷாவின் வழக்கமாக இருந்தது. அவரது உள்ளம் திருப்தியடையும் வரை அவர் அமைதியாக இருந்ததில்லை. மறைந்திருக்கும் அம்சங்களை வெளியில் கொண்டுவர அவர் விரும்பினார். ஒருமுறை நபிகளார், ''யார் விசாரிக்கப்படுகின்றாரோ அவர் தண்டிக்கப்படுவார்'' எனக் கூறியதைத் கேட்ட ஆயிஷா, அல்லாஹ் குர்ஆனில் ''அவன் மிக இலகுவாக விசாரிக்கப்படுவான்'' (இன்ஷிகாக்: 8) என்ற வசனத்தை ஓதிக் காண்பித்து விளக்கம் கோரினார். அதற்கு நபிகளார், இலகுவான விசாரணை தான் நோக்கம். ஆனால், யார் கடுமையாக விசாரிக்கப்படுகின்றாரோ அவர் அழிந்து விட்டார்'' எனத் தெளிவுபடுத்தினார்.

ஒரு முறை ஆயிஷா பின்வரும் குர்ஆன் வசனத்தை ஓதினார். நபியே! ஒரு நாளை அவர்களுக்கு ஞாபகமூட்டுங்கள். அந்நாளில் இந்த பூமியை மாற்றி வேறொரு பூமி யாக அமைக்கப்பட்டு விடும். வானங்களும் அவ்வாறே ஆக்கப்படும். ஒவ்வொருவரும் தத்தமது இடத்திலிருந்து வெளிப்பட்டு, அனைவரையும் அடக்கியாள்கின்ற ஒரே இறைவனாகிய அல்லாஹ்வின் சன்னிதானத்தில் கூடிவிடுவர். (இப்ராஹிம்: 48)

இவ்வசனத்தை ஓதிய ஆயிஷா மறுமையில் மக்கள் எங்கே இருப்பார்கள் எனக் கேட்டார். அதற்கு அவர்கள் ஸிராத்தில் இருப்பார்கள் என நபிகளார் பதிலளித்தார்கள். ''மறுமைநாளில் மக்கள் நிர்வாணிகளாக ஒன்று சேர்க்கப்படுவர்'' என நபிகளார் கூறியதை நான் கேட்டபோது, ''ஆண்கள், பெண்கள் பரஸ்பரம் தங்களைப் பார்த்துக் கொள்வார்களா'' எனக் கேட்டேன். அப்போது நபிகளார், 'அதை விட கடினமான விவகாரம் அங்கு காத்திருக்கின்றது' என்றார்கள்.

முஸ்லிமில் வரும் மற்றொரு அறிவிப்பில், ''ஆயிஷாவே! மனிதர்கள் தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்வதை விட விடயம் அங்கு கடினமானது'' என வந்துள்ளது. நான் ஒரு முறை நபிகளாரிடம் நேசத்திற்குரியவரை ஒருவர் அந்நாளில் நினைவூட்டுவாரா எனக் கேட்டேன். அப்போது நபிகளார், 'மூன்று சந்தர்ப்பங்களில் அது சாத்தியமில்லை என்றார்கள். தராசில் நன்மை தீமைகள் நிறுக்கப்படும்போது, நன்மை-தீமைகள் அடங்கிய பட்டோலைகள் வலது-இடது கைகளில் வழங்கப்படும்போது, நரகத்தின் நெருப்பு சீறி எழுந்து மக்கள் மீது கோபம் கொள்ளும்போது ஆகிய மூன்று சந்தர்ப்பங்களிலும் யாரும் யாரையும் நினைவுகூரும் நிலையில் இருக்க மாட்டார்கள்.

நான் ஒருமுறை நபிகளாரிடம் உலகில் நற்கருமங்கள் செய்த இணைவைப்பாளர்களுக்கும் இறை நிராகரிப்பாளர்களுக்கும் தாம் செய்த நற்கருமங்களுக்காக கூலி கிடைக்குமா எனக் கேட்டேன். ஆயிஷா இவ்வாறு கேட்டபோது, மக்காவில் வாழ்ந்த முஷ்ரிகீன்களில் ஒருவரான அப்துல்லாஹ் இப்னு ஜூத்ஆனை நினைவுபடுத்தினார். இம்மனிதர் ஸாலிஹான, மக்களோடு மென்மையாக நடந்து கொள்பவராக இருந்ததோடு, சமூக அமைதிக்கான மன்றமொன்றை ஹில்புல் புளூழ் என்ற பெயரில் தொடங்கியிருந்தார்.

கோத்திரச் சண்டைகளையும் குல குழுக்களின் மோதல்களையும் தவிர்த்து குறைஷியர்களிடையே அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதில் பெரும் பணியாற்றினார். நபிகளாரும் இவரது ஹல்புல் புளூழ் மன்றத்தின் ஓர் உறுப்பினராக இருந்தார்கள். இவரை உதாரணம் காண்பித்தே ஆயிஷா இக்கேள்வியைத் தொடுத்தார்.

இறைத் தூதரே அப்துல்லாஹ் இப்னு ஜூத்ஆன் ஜாஹிலிய்யக் காலத்தில் தனது உறவினர்களோடும் குடல்வாய் ஜனங்களோடும் சேர்ந்திருந்தார். ஏழைகளுக்கு உணவளித்தார். அயல் வீட்டாரோடு அன்பு பாராட்டினார். விருந்தாளிகளை நன்கு உபசரித்தார். இவை யெல்லாம் அவருக்குப் பயனளிக்குமா? எனக் கேட்டபோது, ''இல்லை ஆயிஷா, ஏனெனில் அவர் ஒருபோதும் இறைவனே எனது பாவங்களையும் தவறுகளையும் மன்னித்துக் கொள்வாயாக என்று பிரார்த்தித்ததில்லை'' எனப் பதிலளித்தார்கள்.

ஜிஹாத் இஸ்லாத்தின் உயர்ந்த கடமைகளில் ஒன்று. தூய இஸ்லாமிய மார்க்கத்தின் உறுதியான அடிப்படைகளில் ஜிஹாதும் முக்கியமானது. ஆண்களைப் போன்று பெண்கள் மீது ஜிஹாத் கடமையல்ல. இது குறித்து சிந்தித்த ஆயிஷா, ரஸூலுல்லாஹ்விடம் விளக்கம் கோருகின்றார். பெண்கள் மீது ஜிஹாத் கடமை யில்லையா? அதற்கு நபியவர்கள், அவர்களின் ஜிஹாத் ஹஜ் செய்வதே என்றார்கள்.

நான் திருமணம் செய்யவுள்ள பக்கத்து வீட்டு பெண்மணி குறித்து நபிகளாரிடம் கேட்டேன். அவளிடம் திருமணத்திற்கு அனுமதி கேட்க வேண்டுமா? வேண்டாமா என்பதே எனது கேள்வி. அதற்குப் பதில் தந்த நபிகளார், அவளிடம் அனுமதி கேட்கப்பட வேண்டும் என்றார்கள். அதற்கு நான், அவள் வெட்கப்படுகின்றாள் என்றேன். அவள் ''மௌனமாக இருந்தால், அதுவே அவளது அனுமதி'' என நபிகளார் பதில் தந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த தவணை... (01 ஆம் பக்கத் தொடர்)

இம்முறைய தேர்தலில் சிவில் அமைப்புக்கள் வேண்டிக் கொண்டதன் படி கரு ஜயசூரிய போட்டியிட்டிருந் தால் அவர் அதிக வாக்குகளைப் பெற்றிருப்பார். அதிகமான சிங்கள வாக்குகளும் அவருக்குக் கிடைத்திருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

மஹகல்கடவல புன்னசார தேரர் கருத்து வெளியிடும் போது, புதிய ஜனாதிபதியை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவருடன் சமாதானமாகவும் நல்லிணக்கத்துடனும் பணியாற்ற வேண்டும். யாருக்கும் யாரையும் துன்புறுத்துவதற்கான உரிமை கிடையாது. ஜனாதிபதி ராஜபக்ஷ எங்களதும் ஜனாதிபதி. அவர் சிங்கள, முஸ்லிம், தமிழ் அனைவரதும் ஜனாதிபதி எனவும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி... (01 ஆம் பக்கத் தொடர்)

அரசியலமைப்பின் 35 (1) உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றத்தில் சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளைத் தொடர முடியாது என்ற அடிப்படையிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி கோத்தாபயவின் கடவுச்சீட்டை அவருக்கு மீளவழங்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. ஜனாதிபதி சார்பில் பிணை நின்றவர்களுக்கும் பிணை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

டி.ஏ. ராஜபக்ஷ ஞாபகார்த்த நூதனசாலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஏனைய அறுவர் தொடர்பிலுமான வழக்கு ஜனவரி 09 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## புதிய ஆளுநர்கள்... (01 ஆம் பக்கத் தொடர்)

மஹிந்த ராஜபக்ஷ அரசில் தென் மாகாண ஆளுநராகக் கடமையாற்றிய டிக்கிரி கொப்பேகடுவ சப்ரகமுவ மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிய தென்மாகாண ஆளுநராக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஆனந்தா கல்லூரி பழைய மாணவருமான ராஜா கொல்லுரே ஊவா மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். வியத்மக அமைப்பின் அங்கத்தவர்களான ENT வைத்தியர் சீதா அரம்பேபொல மேல் மாகாண ஆளுநராகவும், லலித் யு கமகே மத்திய மாகாண ஆளுநராகவும் நியமனம் பெற்றுள்ளனர்.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களுக்கான ஆளுநர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்த போதிலும் இதுவரை புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படவில்லை.

## பிக்குகள்... (01 ஆம் பக்கத் தொடர்)

அவரால் நாட்டுக்கு மகத்தான பணிகளைப் புரிய முடியும். அனைத்து இனங்களுக்கும் அமைதியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தக் கூடிய சக்தி அவருக்குக் கிட்ட வேண்டும் என மல்வத்த பீடத்தின் அநுநாயக்க தேரர் நியங்கொட விஜிதசிரி தேரர் தெரிவித்தார். தலதா மாளிகைக்கு ஜனாதிபதி கோத்தாபய விஜயம் செய்த பின்னர் அவர் மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர்களைச் சந்தித்த போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் நான்கு வகையான குணவியல்புகள் காணப்படுகின்றன. வீரம், திறமை, நாவன்மை, மனோவலிமைகளைப் பெற்றவர் அவர். அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் ஊடாக தேசிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. மக்களின் அபிலாஷைகள் நிறைவேறியிருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

## அரசுடன்.... (01 ஆம் பக்கத் தொடர்)

அதனடிப்படையிலேதான் இம்முறை வடகிழக்கு தமிழர்கள் ஒன்றுசேர்ந்து வெற்றி கண்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ் மக்கள் இனப் பாகுபாடு பார்த்தோ, மதப் பாகுபாடு பார்த்தோ இந்தத் தேர்தலில் வாக்களிக்கவில்லை. இனப் பாகுபாடு பார்த்து தமிழ்மக்கள் வாக்குகளை போட்டிருப்பார்களானால் அவர்கள் சிவாஜிலிங்கத்திற்கு வாக்களித்திருப்பார்கள் என அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தின் அடிப்படையில் செயல்பட்டு இருந்தது. தமிழர்களின் அபிலாசைகளை கருத்தில் கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயல்பாடுகளை முன்னெடுக்கும். ஒருபோதும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களை புறந்தள்ளிவிட்டு தன்னிச்சையாக முடிவுகள் எடுக்கப் போவதில்லை. ஜனாதிபதி அவர்கள் பக்கச்சார்பின்றி இந்த நாட்டை நிர்வகிக்க வேண்டும். ஒரு இனத்துக்கோ அல்லது ஒரு மதத்திற்கு சார்பாக இந்த நாட்டின் சனாதிபதி அவர்கள் செயற்படுவாரானால் இந்த நாடு மீண்டும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

இந்த நாட்டில் நடைபெறும் நிர்வாகம், அரசியல் பொருளாதார விடயங்களை சர்வதேசம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு இருக்கின்றது. சர்வதேசத்தில் ஒத்துழைப்புடன் இந்த நாட்டில் தமிழர்களின் புரையோடிப் போயிருக்கும் இன பிரச்சினைகளை தீர்க்கின்ற விடயங்களை முன்னெடுக்க வேண்டும். வருகின்ற அரசோடு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பல்வேறுபட்ட பேச்சுவார்த் தைகளை நடாத்த இருக்கின்றது. சர்வதேசத்தின் ஒத்துழைப்போடு செயற்பட இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

## நாட்டின் பாதுகாப்பு... (01 ஆம் பக்கத் தொடர்)

அரசியல் மாற்றங்களால் அரசியல் பழிவாங்கல், கடத்தல் அல்லது தொந்தரவுகள் ஏற்படக்கூடும் என மக்கள் மத்தியில் எந்தவிதமான தேவையற்ற பீதியையும் ஏற்படுத்த வேண்டாம். எதிர்வரும் நாட்களில் பாதுகாப்புக் கடமைகளை முன்னெடுத்துச் செல்வதில் அதிக கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் பணியாற்றுமாறு பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் நாட்டின் பாதுகாப்பு குறித்து மேலும் விழிப்புடன் இருக்குமாறும், அந்தந்தப் பகுதிகளின் பாதுகாப்புக்கு அவர்களே பொறுப்பு எனவும் பதில் பொலிஸ் மா அதிபர் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தூர நோக்கிற்கு அமைய இன, மத மற்றும் அரசியல் வேறுபாடுகள் இல்லாத ஒரு நாட்டை உருவாக்கும் வகையில் நாட்டில் அமைதியான சூழலைப் பேணுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே, மக்கள் எவ்வித அச்சமும் இல்லாமல் தங்கள் இயல்பு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

மேலும், அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு நபர்களுக்கும் அல்லது குழுக்களுக்கும் எதிராக, பாரபட்சம் பாராமல் சட்டத்தை கடுமையாக செயல்படுத்துமாறு பாதுகாப்பு பிரிவினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## முஸ்லிம் சமூகம்... (06 ஆம் பக்கத் தொடர்)

கவனமாகப் பரிசீலித்து, அதன் அடிப்படையிலான ஒரு ஆட்சியினைச் செய்யவுள்ளதாக தற்போது மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். இதனூடாக நாம் விளங்கிக் கொள்வது என்னவென்றால், நாடாளுமன்றத்தில் மூன் றிரலிண்டு பெரும்பான்மை ஆதரவினை அவர்கள் திரட்டிக் கொள்ளப் போகிறார்கள். ஏற்கனவே அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையின் ஊடாகத்தான் மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்றினார். அதன்போது முஸ்லிம்களின் உதவியும் அவர்களுக்குத் தேவைப்பட்டது.

எனவே, தற்போதைய சூழலை மிகக் கவனமாகப் பயன்படுத்திக் கொண்டு, முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்து, தமது சமூகத்துக்காக பெரும்பான்மை மக்களின் ஆதரவுள்ள அரசியல் தலைமைகளோடு ஒத்திசைந்து போகக் கூடிய நடவடிக்கைகள் குறித்து யோசிக்க வேண்டும்.

மியான்மர் மற்றும் தாய்லாந்து போன்ற பல நாடுகளில் முஸ்லிம்களுக்கு எதிரான பௌத்த தேசியவாதச் செயன்முறைகளும், பௌத்தத்தை மீள் புனர்நிர்மாணம் செய்வதற்கான மீள் எழுச்சிகளும் இடம்பெறுகின்றன. இந்தச் சூழ்நிலையில் முஸ்லிம்கள் - பௌத்தத்தின் ஆதிக்கத்துக்குட்பட்டு சின்னாபின்னப்பட்டு வருகின்றனர்.

இலங்கையிலும் அதே சூழ்நிலை உருவாகியிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே, முஸ்லிம்களும் முஸ்லிம் தலைவர்களும் மிக நிதானமாகச் செயற்பட்டு, தேசிய அரசியலில் பெரும்பான்மையினத்தவரோடு ஒத்துப் போகக் கூடியவாறான செயற்பாடுகளில் கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

## அச்சத்தின்.... (03 ஆம் பக்கத் தொடர்)

அந்த வகையில் நாட்டு மக்கள் அனைவரினதும் ஜனாதிபதி என்ற வகையில் சிறுபான்மையினரின் அச்சம் தொடர்பில் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவுக்கு நியாயமான பொறுப்பிருக்கிறது.

அதே நேரம் சிறுபான்மை மக்களுக்கும் பாரிய பொறுப்பிருக்கிறது. இந்த நாட்டை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப் போகிறார்கள் என்ற பெரும்பான்மையினரின் மனப்பாங்கை மாற்ற வேண்டும். நாட்டில் தமது பங்குகளைக் கேட்பதிலேயே சிறுபான்மையினர் குறியாக இருக்கிறார்கள் என்ற உணர்வை இல்லாமல் செய்ய வேண்டும். முதலில் எல்லோருமாக இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்த வேண்டும். இதற்காக விட்டுக் கொடுக்க முடியுமான உரிமைகளில் சில விட்டுக் கொடுப்புக்களுக்கு சிறுபான்மைச் சமூகங்கள் வர முடியும். எல்லோருமாக இணைந்து தான் நாட்டை அபாயத்திலிருந்து மீட்டு மீளக் கட்டியெழுப்பினோம் என்ற வரலாறு இலங்கைத் தீவைப் பற்றி எழுதும் போது எழுதப்படுமானால் அடுத்த தலைமுறையில் சிறுபான்மை பேதமின்றிய இலங்கையர்களைக் காண முடியும்.

## மக்கள் விடுதலை.... (03 ஆம் பக்கத் தொடர்)

1999 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட நந்தன குணதிலக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறினார். கட்சியின் தலைவர்களாக இருந்த சோமவன்ச அமரவீர, விமல் வீரவன்ச உட்பட பலரும் பிரதான கட்சிகளுக்கு மாறினர். 1977 க்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த எல்லாத் தலைவர்களும் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையையே பின்பற்றினர்.

ஜேவிபி முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கைக்கு எதிரான கட்சி என்பதனால் மாறி மாறி யார் வந்தாலும் அவர்களை விமர்சிப்பதனூடாக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தீங்கையே மக்களுக்கு எடுத்துக் காட்டி வந்தனர். இந்த வகையில் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையை முன்வைத்து ஆட்சிக்குப் போட்டியிடுகின்ற இருவருமே மோசமானவர்கள் என்பதைத் தான் அவர்களும் இவர்களும் ஒன்று என்ற கோஷத்தினூடாக ஜேவிபியினர் முன்வைக்கின்றனர்.

இந்த வகையில் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையை ஏற்றுள்ள இரு சாராரையும் ஒரு தரப்பாக எடுத்தால் ஜேவிபியை இரண்டாம் தரப்பாக ஏற்றுக் கொள்ள முடியுமே தவிர மூன்றாவது சக்தியாக ஜேவிபியை தெரிவு செய்வதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமிருக்கின்றது.

மூன்றாவது சக்தி என்பது ஜேவிபியின் அரசியல் பிரவேசம் போல ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடுவதில் இருந்து ஆரம்பிப்பதல்ல. மூன்றாவது சக்தி கருக்கொள்கின்ற இடமாக மக்களின் உள்ளங்கள் இருக்க வேண்டும். அங்கிருந்து தான் மூன்றாவது சக்தி பிறப்பெடுக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் நிற்கின்ற ஜேவிபி அபேட்சகர்களுக்குக் கிடைக்கின்ற வாக்கு சரிந்து செல்வது இதனைத் தான் காட்டுகிறது. 1982 ஜனாதிபதித் தேர்தலில் ரோஹன விஜேவீர 4.19 வீத வாக்குகளைப் பெற்றார். 17 வருடங்களின் பின்னர் 1999 இல் நந்தன குணத்திலக்க போட்டியிட்ட போது அவருக்கு 4.08 வீத வாக்குகள் கிடைத்தன. 20 வருடங்களின் பின்னர் தற்போது அநுர குமார திசாநாயக்க போட்டியிட்ட போது அது 3.16 ஆகக் குறைந்திருக்கிறது.

இது ஜனாதிபதித் தேர்தல் என்ற பலப் பரீட்சைக்குச் செல்லு முன்னர் கீழ் மட்டத்தில் மக்களைத் தயார்படுத்தல் என்ற ஹோம் வேர்க்கை 20 வருடங்களில் ஜேவிபி வெற்றிகரமாகச் செய்யவில்லை என்பதையே காட்டுகிறது. இந்த வகையில் முதலாளித்துவத்துக்கு எதிரானதாகவே மக்கள் ஜேவிபியை கருதுகிறார்களே ஒழிய மாற்றத்துக்கான மூன்றாம் சக்தியாகக் கருதவில்லை என்றே கருத வேண்டியிருக்கிறது.

முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கை உருவாக்கிய தனிநபர் சொத்துக் குவிப்பு, ஊழல், மோசடி, பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தல் என்பனவற்றுக்கு எதிராகப் பேசுவது மக்களின் இச்சையைத் தீர்த்துக் கொள்ளப் பயன்படுமே அன்றி ஆக்கபூர்வமான செயற்பாடொன்றை நோக்கிச் செல்வதற்கு இது போதுமானதல்ல. வேறு போத்தல்களில் மாறி மாறி வருகின்ற கள்ளுக்குப் பதிலாக கஞ்சியை மாற்றுவதை விட்டு விட்டு போத்தல்களை மட்டும் பிரதியீடு செய்ய முனைவதால் மாற்றம் வரப் போவதில்லை. ஊழல், மோசடி, தனிநபர் சொத்துக் குவிப்பு, ஆட்சியாளர்கள் பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தல் என்பனவெல்லாம் தற்போது ஆட்சியின் அங்கங்களாக, அரசியல் கலாச்சாரமாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இவைகள் இன்றி அரசியல் செய்ய முடியாது என்று அரசியல்வாதிகள் ஊட்டி வைத்திருக்கின்ற கருத்தினை மக்கள் ஏற்றிருக்கிறார்கள். இவர்களிடம் போய் அவர் இவ்வளவு ஊழல் செய்தார், இவர் இவ்வளவு கொள்ளையடித்தார் என்று சொல்லுவதெல்லாம் எடுபடப் போவதில்லை. முதலில் ஊழல், மோசடி, கொள்ளையடித்தல் எல்லாம் மோசமானவை என்ற கருத்தினை மக்களின் மனதில் ஆழமாகப் பதிய வைக்க வேண்டும். தற்போதைய அரசியலில் அவை புரையோடிப் போயிருக்கின்ற ஆழத்தைப் பார்த்தால் இன்னும் நீண்ட காலம் இதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

தனது இலக்கை அடைந்து கொள்வதற்காக எதிர்த்தரப்பினைக் கொலை செய்வது என்பது இலங்கையின் அரசியல் கலாச்சாரமாக மாறியிருக்கிறது. நல்லாட்சி எனச் சொல்லப்பட்ட அரசாங்கம் வரும் வரையில் எல்லா அரசாங்கங்களுமே இந்தப் படு பாதகத்தைச் செய்தே வந்துள்ளன. இம்முறை தேசிய மக்கள் சக்தி சார்பில் தேர்தலில் போட்டியிட்ட ஜேவிபி கூட இதற்கு விதிவிலக்கல்ல. தேர்தல் பிரசாரங்களின் போது மக்கள் இதனை ஒரு குற்றமாகவே கருதவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்தக் கொலைக் கலாச்சாரத்தை மாற்றுவதற்கான தூய்மையான அரசியல் இயக்கமொன்றின் தேவை வெகுவாகவே இருக்கிறது. மூன்றாம் சக்தி அதனை நிரப்பக் கூடியதாக இருக்க வேண்டும்.

சொலமன் டயஸ் பண்டாரநாயக்கவின் காலம் தொடக்கம் ஆட்சியின் முக்கிய அம்சமாக இனவாதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இன்று அதன் உச்சிக் கட்டத்தை அடைந்துள்ள இனவாதம் தான் ஆட்சியாளர்களை ஆளுகின்றது. ஆட்சியாளர்கள் தமது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக உருவாக்கிய இனவாதம், இன்று அவர்களாலேயே கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வளர்ந்து நாட்டைக் குட்டிச் சுவராக்கி வருகிறது. ஜேவிபி கூட தனது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிட முடியாமல் இனவாத மேலாதிக்கம் அடக்கி வைக்கிறது, ஆட்சியைக் கைப்பற்றுவதனால் இனவாதத்தை அடக்க முடியாது என்பதனையே இது காட்டுகிறது. எனவே அடிமட்ட மக்கள் வரை சென்று இந்த இனவாதத்தை அழித்தொழிப்பதற்கான பாரிய முயற்சியொன்றை மூன்றாம் சக்தி செய்ய வேண்டும்.

இனத்தால் சிறுபான்மையினராகிய, மதத்தால் சிறுபான்மையினராகிய இலங்கைப் பிரஜைகள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அராஜகங்கள் அளவுமீறிச் செல்கின்றன. சிறுபான்மையினருக்கான உரிமையை வழங்குவது பெரும்பான்மையைப் பலமிழக்கச் செய்யும் விடயமாக பெரும்பான்மை மக்கள் கருதுகிறார்கள். சிறுபான்மையினரது உரிமைகளை மதிப்பவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தில் சிறுபான்மையினராகவே இருக்கிறார்கள். இவர்களை இணைத்துக் கொண்டு நாட்டு மக்களை ஒன்றிணைக்க வேண்டிய பாரிய தேவை இன்று எழுந்திருக்கிறது. அதிகாரப் பகிர்வினூடாக இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதனை முன்வைப்பவர்கள் எல்லாம் பிரிவினைவாதிகளாக அடையாளப்படுத்தும் அளவுக்கு மேலாதிக்க சிந்தனைகள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை அடியோடு இல்லாமல் செய்யாமல் தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இதற்காக உழைக்கின்ற பணியை மூன்றாவது சக்தி முன்னெடுக்க வேண்டும்.

மக்களின் இந்த சமஉரிமைகள் மாறி மாறி வரும் ஆட்சியாளர்களால் தமது இஷ்டத்துக்கு ஏற்ப மாற்றப்படாமல் இருப்பதற்காக அரசியல் அமைப்பு பலப்படுத்தப்பட வேண்டும். மக்கள் மைய யாப்பொன்றை வரைவதற்கான முன்னெடுப்பொன்றினை மூன்றாம் சக்தி முன்னெடுக்க வேண்டும். இதற்கான மக்கள் பேரியக்கமொன்றைக் கட்டியெழுப்பி மக்கள் எழுச்சியைத் தூண்டுவது மூன்றாம் சக்தியின் பணியாக அமைய வேண்டும்.

இப்படி அடிமட்டத்திலிருந்து உழைக்க வேண்டிய ஏராளமான விடயங்களை முன்னெடுக்கக் கூடிய மூன்றாம் சக்தியின் தேவையே நாட்டைக் கட்டியெழுப்புவதில் முக்கியமான தேவையாக இருக்கிறது. அது அரசியல் கட்சியாகவன்றி அரசியல் பேரியக்கமாக மலர வேண்டும். இந்த நோக்கத்துக்காக உழைக்கின்றவர்கள் எல்லாச் சமூகங்களிலும் இருக்கின்றார்கள். அடுத்து வரும் தசாப்தங்களில் மாற மாட்டாது என எதிர்பார்க்கப்படுகின்ற தற்போது பதவியேற்றுள்ள அரசாங்கத்தின் காலத்தை இதற்கான பொன்னான தருணமாகப் பயன்படுத்திக் கொள்வது புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்தப் பொருத்தமான வாய்ப்பாக அமையும்.


மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுக்கு ஸலாமாவின் வாழ்த்துச் செய்தி

SALAMAH

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே!

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 7ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள உங்களுக்கு எமது இனிய வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கையின் அரச கலாசாரத்தில் ஜனநாயக ரீதியான சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு தங்களுக்கு ஒரு புதிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது தொடர்பாக இன, மத வேறுபாடுகள் இன்றி நாட்டு மக்கள் மத்தியில் மிகப்பெரிய ஆவல் காணப்படுகிறது.

இனங்களுக்கு இடையே உறவில் ஏற்பட்டுள்ள உடைவுகளின் பாதிப்பை சீர்செய்யவும், நம் எதிர்கால சந்ததியினர் அனைவரும் ஒருங்கிணைந்து வாழ முடியுமான, வளமான தாயகத்தை கட்டியெழுப்பவும் அயராது உழைப்பீர்கள் என்ற அசையாத நம்பிக்கை எமக்கு உண்டு. அந்தவகையில் சாதகமான நிலைபேறான மாற்றம் நாட்டில் ஏற்பட வேண்டும் என்பதற்காக ஒன்றிணைந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஆணையும் உங்களுக்குக் கிடைத்துள்ளது.

மேற்படி ஜனநாயக சீர்திருத்தங்களை ஏற்படுத்தி அனைவரும் ஒருங்கிணைந்து வாழ முடியுமான, வளமான தாயகத்தை கட்டியெழுப்பும் பணியில் ஸலாமா எப்போதும் கைகொடுக்கும். உங்களுக்கும், இலங்கையின் வளமான எதிர்காலத்திற்கும் மீண்டும் எமது வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,

தாயக பூமிக்கு என்றும்
நலவை நாடும்

**ஆஸாத் அப்துல் முஈத்**
தலைவர் - ஸலாமா
பிரதி : ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன



# சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்தின் வாழ்த்து

இலங்கையின் ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதியாக தெளிவான மக்கள் ஆணையுடன் தெரிவுசெய்யப்பட்டுள்ள உங்களை 1944 இல் உருவாக்கப்பட்ட முஸ்லிம்களின் முன்னணி நிறுவனமான சோனக இஸ்லாமிய கலாச்சார நிலைய மும் (MICH) அதன் அங்கத்தவர்களும் நிர்வாகிகளும் மனமார வாழ்த்துவதோடு பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

நீங்கள் ஈற்றிய வெற்றியானது உங்களது திறமையான தலைமைத்துவத்திலும் உங்களது கடமைகளில் நீங்கள் காட்டிய நேர்மையிலும் நாணயத்திலும் மக்களின் அங்கீகாரத்தை எடுத்துக் காட்டுகிறது. நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதிலும் நீதியான ஆட்சி நடத்துவதிலும் ஆற்றலுடைய ஒரு தலைவர் என்பதனை தேர்தல் பிரச்சாரங்கள் போது நீங்கள் எடுத்துக் காட்டினீர்கள்.

இன மத பேதங்களைத் தாண்டி அனைத்து இலங்கையர்களும் பாரபட்சம் தொடர்பிலான எந்த அச்சமும் இன்றி கௌரவ மாகவும் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கான சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்புவற்கான உங்களது முயற்சிகளை நாங்கள் பாராட்டுகிறோம்.

இது மத வேறுபாடின்றி அனைத்து மக்களும் ஒரு குடும்பமாக வாழ முடியுமான நாடொன்றை உங்களது முன்னுதாரணமான தலைமையின் கீழ் முன்கொண்டு செல்வதற்குரிய வழிகாட்டலையும் தேகாரோக்கியத்தையும் எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு வழங்குவானாக.

ஓமர் காமில் - தலைவர்

# வாழ்த்துக்கள்



## தேசிய சூறா சபை

நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மேன்மை தங்கிய தாங்கள் பெற்றுக் கொண்ட உறுதியானதும் தீர்க்கமானதுமான வெற்றிக்காக எங்களது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.


தேசிய ஐக்கியத்தையும் சமூகங்களுக்கிடையிலான சகவாழ்வையும் வளர்ச்சியடையச் செய்வதனூடாக எமது தாய்நாட்டை அமைதியும் சுபீட்சமும் அடைந்ததாக மாற்றுவதில் நாடு எதிர்கொள்ளும் அனைத்து வகையான சவால்களுக்கும் முகம் கொடுத்து அவற்றுக்கு துரிதமாகவும் திறமையாகவும் தீர்வு காணக் கூடியவர் நீங்கள் என்பதனை உங்களது கடந்த கால அனுபவங்களினூடாக நாங்கள் நம்புகிறோம்.

தேசிய சூறா சபை 18 தேசிய முஸ்லிம் அமைப்புக்களையும் முன்னணி முஸ்லிம் முக்கியத்தர்களையும் உள்ளடக்கியதொரு அமைப்பாகும். இலங்கை மக்களுடைய அபிலாஷைகளையும் நம்பிக்கைகளையும் நிறைவேற்றுவதில் உங்களுடன் நெருக்கமாக உழைப்பதற்கு நாங்கள் காத்திருக்கிறோம். இதனால் நீண்ட காலமாவதற்கு முன்பே ஏனைய தேசங்களுக்கு முன்னால் நாங்கள் தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

உங்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்

ஜே. தாரிக் மஹ்மூத்
தலைவர், தேசிய சூறா சபை

# ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அனுப்பியுள்ள செய்தி



இந்த ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதே வேளையில், எமது கட்சியின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்த எமது ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். நாட்டின் சில பிரதேசங்களில் சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் எங்கள் ஆதரவாளர்கள் ஜனநாயக விழு மியங்கள் மற்றும் தங்களது வாக்குரிமையின் பலத்தை பாதுகாக்கும் வகையில் செயற்பட்டுள்ளமையானது தொடர்ந்தும் எங்களுக்கோர் உந்து சக்தியாக அமைந் துள்ளது.

நாடு தழுவிய ரீதியில் அதிகூடிய வாக்களிப்பு வீதம் பதி வாகி யுள்ளமையானது பொதுமக்கள் ஜனநாயகத்தின் மீது கொண் டுள்ள நம்பிக்கையை பிரதிபலிக்கின்றது. ஆனாலும் வாக்க ளிப்பு நடந்த விதம் எமது சமூகங்களுக்கு இடையிலான ஆழமான துருவப்படுத்தலை வெளிக்காட்டுகின்றது.

ஆனாலும் சகல இலங்கையர்களினதும் நலன் கருதிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான கடினமான முடிவுகளை எடுப்பதில் பலத்த சவால்களை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதல், சட்டத்தின் ஆட்சி, நாட்டின் பன்முகத்தன்மை மற்றும் ஜனநாயகத்தின் பெறுமதிகள் என்பவற்றை போஷிப்பதற்கான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியுள்ளது. உங்களது நிர்வாகத்தின் கீழ் அமைதி, ஒற்றுமை, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் சகல இனங்களுக்கும் மத்தி யில் நிலைத்து நிற்கக் கூடிய நல்லெண்ணம் என்பவற்றுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று நம்புகின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலானது சமூக ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றில் மன்னிக்க முடியாததும், அழிக்க முடியாததுமான வடுவை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய பாரதூரமான அனர்த்தத்தின் உண்மைத் தன்மையை கண்டறிவதற்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முயற்சிகளில் எதிர்க்கட்சி பங்குபற்றாமை ஒரு கறையாக படிந்துள்ளது. அத்துடன், தேர்தல் பரப்புரைகளின் போது தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் மீது அநீதியானதும், அடிப்படையற்றதுமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதும் வருந்தத்தக்கவை.

எவ்வாறாயினும், தேர்தல் பெறுபேறுகளை உற்றுநோக்குகையில், பெரும்பான்மை மேலாதிக்க மனோபாவமுள்ள நாட்டில் சகல சமூகத்தினரையும் உள்ளடக்கிய ஒன்றுபட்ட தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான புதிய வாய்ப்பொன்று கிட்டியுள்ளது. தேர்தலோடு ஒட்டியதான இனங்களுக்கிடையான துருவப்படுத்தலை நீக்கும் முயற்சிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். வெவ்வேறு சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கப்பதற்கான சந்தர்ப்பமொன்று உங்களுக்கு வாய்த்துள்ளது. இலங்கை முஸ்லிம்களின் அதிகபட்ச ஆடிணையப் பெற்ற கட்சி என்ற வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உங்களை வாழ்த்துகின்றது.

வரலாறு அதற்கான சாளரமொன்றை மீண்டும் ஒருமுறை உங்களுக்குத் திறந்து தந்துள்ளது. இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் 2009ம் ஆண்டில் யுத்த நிறைவின் பின்னர் உங்களுக்கு முன்னொரு தடவையும் கிட்டியிருந்தது. உங்களது வெற்றியில் பங்கெடுக்காத சிறுபான்மை மக்களின் கணிசமானோரின் மனங்களை வென்றெடுத்து, இனங்களுக்கிடையிலான இணைப்புப் பாலமாக அமைவதற்கும், குறுகிய வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்து மக்களும் சமமானவர்கள் என்ற மனப்பதிவை ஏற்படுத்துவதற்கும் முன்வருவீர்கள் என்று நம்புகின்றோம்.

**ரவூப் ஹக்கீம்**
தலைவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# ஜனாதிபதிக்கு எமது வாழ்த்துக்கள்

ALL CEYLON JAMIYYATHUL ULAMA

**அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா**

இந்த நாட்டின் பிரஜைகள் தமது 07 ஆவது நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதிபதியாக மேன்மை தங்கிய கோத்தாபய ராஜபக்ஷ அவர்களை தெரிவு செய்திருக்கும் இன்றைய நாள் இலங்கையர்களாகிய எங்கள் அனைவருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஆசியாவின் பழமை மிகுந்த ஜனநாயக நாடுகளில் ஒன்று என்ற வகையில், சுதந்திரமானதும் நீதமானதுமான ஜனநாயக முறையில் தமது நாட்டுத் தலைவரைத் தெரிவுசெய்வதற்கான ஜனநாயக உரிமை நாட்டு மக்களுக்கு இந்தத் தேர்தலில் கிட்டியமை குறிப்பிடத்தக்கதாகும்.

பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமூகங்கள் என பல இனங்கள் வாழும் நாடு என்ற வகையில், இந்த வெற்றியை நாங்கள் ஜனநாயகத்தின் வெற்றியாகவே பார்க்கிறோம். நாட்டின் அனைத்து இனங்களுக்கிடையிலும் ஒற்றுமையையும் சமாதான சகவாழ்வையும் கட்டியெழுப்புவதனூடாக நாட்டை அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் நோக்கி நகர்த்த முடியும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

அரசியலுக்கு அப்பாற்பட்ட அமைப்பான அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அதனது 9 தசாப்த வரலாறு நெடுகிலும் ஆட்சியிலுள்ள அரசாங்கங்களுடன் நாட்டின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு நெருக்கமாகச் செயற்பட்டு வந்திருக்கிறது. அத்தோடு இனங்களுக்கிடையில் சமாதான சகவாழ்வையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதில் காத்திரமான பங்களிப்பையும் செய்து வருகிறது.

அதேபோல, அமைதி, சமாதானம், சுபீட்சம் போன்றவற்றால் நாட்டை வளப்படுத்துவதில் மேன்மை தங்கிய ஜனாதிபதியாகிய உங்களுடன் தொடர்ந்தும் உழைப்பதற்கு நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம்.

எல்லாம் வல்ல அல்லாஹ், தனது நேர்வழிகாட்டுதலினூடாக இந்த நாட்டுக்கு அருளையும் தனது ஆசியையும் சொரிவானாக. இந்த நாட்டை அபிவிருத்தி, அமைதி, சமாதானம், சுபீட்சத்தை நோக்கி வழிநடத்துவதற்கு உங்களுக்கு சக்தியைத் தருவானாக.

முப்தி எம்.ஐ.எம்.ரிஸ்வி
(தலைவர் அ.இ.ஜ.உ.)

அஷ். எம்.எம்.[illegible]
(பொதுச் செயலாளர் அ.இ.ஜ.உ.)

# புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்துக்கள்

NFGG

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி
National Front for Good Governance

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

''எமது வேண்டுகோளை ஏற்று தேசிய மக்கள் சக்தி (NPP)க்கு வாக்களித்த மக்கள் அனைவருக்கும் நாம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு, இலங்கையின் 7வது ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கின்ற கோத்தபாய ராஜபக்ஷ அவர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன், இந்நாடு சகல இன மக்களும் சமத்துவமாகவும், சமூக நல்லிணக்கத்துடனும் வாழ்கின்ற, பாதுகாப்பான செழிப்பான நாடாக முன்னேறிச் செல்ல வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றோம்'' என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'எமது வேண்டுகோளை ஏற்று தேசிய மக்கள் சக்தி(NPP) க்கு வாக்களித்த மக்கள் அனைவருக்கும் நாம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 7 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய [illegible] அவர்களுக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியானது, இந்த நாட்டினதும், நாட்டு மக்களினதும் நலனை மாத்திரம் முதன்மை நோக்காக கொண்டு, இன, மத பேதமற்று தன்னுடைய அரசியல் பயணத்தினை முன்னெடுத்து வருகின்ற ஒரு கட்சியாகும். சமூக நீதிக்காகவும், சகல சமூகங்களுக்கு மத்தியிலுமான சகவாழ்விற்காகவும் தொடர்ந்து பாடுபடுவதுடன், ஊழல், மோசடிகளுக்கு எதிராக தொடர்ச்சியாக குரல் கொடுத்துவருகின்ற ஒரு கட்சியுமாகும். அந்த வகையில் இத்தேர்தலிலும் முழு நாட்டு மக்களினதும் சமூக ஒற்றுமை, முறையான அபிவிருத்தி, ஊழலற்ற நாடு போன்ற பல குறிக்கோள்களை முன்வைத்து தேசிய மக்கள் சக்தியோடு (NPP) இணைந்து NFGGயாகிய நாம் எமது அரசியல் பணிகளை முன்னெடுத்திருந்தோம்.

எமது செயற்பாடுகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும், பொருளாதார ரீதியிலும் பலரும் பங்களிப்புச் செய்திருந்தனர். எனவே எம்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையினை மேலும் வலுப்படுத்தும் வகையில் எமது சமூகத்திற்காகவும் தேச நலனுக்காகவும் நாம் தொடர்ந்தும் உழைப்போம்.

இத்தேர்தலில் நாட்டிலுள்ள அனைத்து இன மக்களினதும் அபிலாஷையாக இருந்த ஒரே விடயம் இந்த நாட்டில் தத்தமது உரிமைகளையும், கலாச்சாரத்தினையும் பாதுகாக்கும் வகையிலான கௌரவமான சமத்துவமிக்க ஒரு ஆட்சிமுறையினை கட்டியெழுப்ப வேண்டும் என்பதாகும். அப்போதுதான் எமது நாடு சகல துறைகளிலும் அபிவிருத்தியடைந்த ஒரு செழிப்பான நாடாக மிளிரும் எனவும் மக்கள் நம்பினர்.

இந்த நம்பிக்கையினை மேலும் கட்டியெழுப்பும் வகையில் இனங்களுக்கிடையிலான உண்மையான நம்பிக்கையினையும், சகவாழ்வினையும், ஒற்றுமையினையும், மேம்படுத்தி இனவாத வேற்றுமைகளை இல்லாதொழித்து இந்த நாட்டினை வளர்ச்சிப் பாதைக்கு முன் கொண்டு செல்வதே புதிய ஜனாதிபதியின் இந்த வெற்றியினை மேலும் உறுதி செய்கின்ற விடயமாக அமையும். அதுவே இந்த நாட்டில் உண்மையான பாதுகாப்பான சூழலையும் உருவாக்கும்.

அதே போன்று இந்த நாட்டில் ஊழல் மோசடியினை ஒழித்து நாட்டின் பொருளாதாரத்தினை சாதகமான முறையில் கட்டியெழுப்புவதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதும் புதிய ஜனாதிபதியின் கடமைப்பாடாகும்.

அந்த வகையில் பெரும்பான்மை-சிறுபான்மை என்ற பேதங்களின்றி இலங்கையர் என்ற சமத்துவ உரிமையுடன் அனைவரையும் அரவணைத்து, சட்டத்தின் பாதுகாப்பை அனைவருக்கும் சமமாக உத்தரவாதம் செய்து, அனைத்து மக்களும் சந்தோஷமாக வாழக்கூடிய செழிப்பான ஒன்றாக நாட்டை முன் கொண்டு செல்ல வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றோம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CALENDAR 2020

# மனித நேயம் (Humanity)

என்ற தொனிப்பொருளில்

12 பக்க வர்ண காலண்டர்கள்

மனித நேயம் காப்போம்.



மீள்பார்வை கலண்டர் தற்போது விற்பனையில்...

குறைந்த பிரதிகளே விற்பனைக்கு உள்ளதால் பிரதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்.

Contact : 077 7798096




# மனிதநேயம் தலைத்தோங்க ஒன்றுபட்டு உழைப்போம்

## ஸலாமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத்





நாட்டின் தேசியப் பாதுகாப்பை பலப்படுத்தும் விவகாரத்தில் ஸலாமாவின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் முதன்மையானது என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் ஒவ்வொரும் சமூகத்தில் காத்திரமான ஒரு பணியைச் செய்ய வேண்டும், தீவிரமில்லாத, நடுநிலையான சமூகத்தை உருவாக்க அயராது உழைக்க வேண்டும் என ஸலாமா சொஸைட்டியின் முதலாவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

கடந்த 09.11.2019ம் திகதி ஸலாமா சொஸைட்டியின் வருடாந்த பொதுக் கூட்டம் கொழும்பு அல்-ஹிதாயா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சுமார் 150 அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கடந்த ஆண்டில் நாட்டு நலனையும் சமூக நலனையும் இலக்காகக் கொண்டு சாதித்த செயற்பாடுகள், அர்ப்பணங்கள், முயற்சிகள், சாதனைகளின் போது முகம் கொடுத்த சவால்கள் தொடர்பான அறிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

ஸலாமா சொஸைட்டியின் தலைவர் மேலும் தனதுரையில், ஒரு நாடு பாதுகாப்பாக இருக்கும் போதுதான் அது வளம் பெறும். அபிவிருத்தியடையும். குடிமக்கள் நிம்மதியாக வாழும் சூழல் பிறக்கும். நாட்டின் நற்பெயர் வலுப்பெறும். ஆனால் ஒரு தேசத்தின் பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படும் போது மேற்சொன்ன அனைத்தும் பாதிக்கப்படும். இதனால்தான் இஸ்லாம் தேசிய பாதுகாப்பிற்கு அதிவிஷேட முக்கியத்துவம் கொடுத்துள்ளதாக அல்குர்ஆனின் வசனங்களை மேற்கோள் காட்டிக் குறிப்பிட்டார்.

மேலும் ஸலாமா சொஸைட்டி சமூகத்திற்கும் நாட்டிற்கும் செய்த பணிகளைப் பற்றிக் குறிப்பிட்டார். குறிப்பாக, ஒவ்வொரு அங்கத்தவரும் தமது பிரதேசங்களில் சமூகப் பணியைச் செய்யக்கூடிய நல்ல பிரஜைகளை உருவாக்கினோம். மற்றும் இஸ்லாமிய விழுமியங்களை பேணி வாழும் குடும்பங்களை நிர்மாணிப்பதில் நாம் கவனம் செலுத்தினோம். இஸ்லாத்தின் நடுநிலையான சிந்தனையை சமூகத்திற்குக் கொண்டு சென்றோம். சகவாழ்வு வேலைத்திட்டத்தில் ஒரு காத்திரமான பங்களிப்பை தேசிய ரீதியில் நாம் செய்தோம்.

சமூகத்தின் ஏனைய நிறுவனங்களுடனும் தனிநபர்களுடனும் இணைந்து செயற்பட்டோம். நற்பணிகளில் ஒத்துழைப்பு வழங்கினோம். எமது செயற்பாடுகள் மூலமாக தீவிர சிந்தனைகள், பிழையான நடத்தைகள் போன்றவற்றிலிருந்து ஆயிரக் கணக்கான இளைஞர்கள் காப்பாற்றப்பட்டனர். எனவே, இப்பணிகளைச் செய்வதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், சமூகத்திற்கும் நாட்டிற்கும் செய்யப்பட வேண்டிய பணிகள் அதிகம் என்பதால் அனைவரும் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அத்துடன் எதிர்வரும் 2019 - 2023 வரையான நான்கு ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. ஸலாமாவின் புதிய தலைவராக மீண்டும் அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், உபதலைவர்களாக அஷ்ஷெய்க் ரயீஸுல் இஸ்லாம், எஸ். நிஹாஸ் ஆசிரியர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பொதுச் செயலாளராக எம்.எப்.எம். பாஹிம் அவர்களும் பொருளாளராக எம். நியாஸ் மொஹிதீன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். மேற்குறிப்பிடப்பட்ட பதவிதாங்குனர்களுடன் சேர்ந்து நிர்வாக சபை அங்கத்தவர்களாக அஷ்ஷெய்க் ஏ.டபிள்யு.எம். பாஸிர், அஷ்ஷெய்க் எம்.எப். முஹம்மத், ஆர்.எம். நயீம், எம்.எம்.எம். பாஸில் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கௌரவ தலைவர் அவர்கள் தனது உரையில், மனிதநேயம் என்பது 2020ம் ஆண்டின் ஸலாமா தினத் தொனிப்பொருளாக தெரிவு செய்துள்ளதாக சபையில் பிரகடனம் செய்தார்கள். இத்தேசத்தில் மனித நேயம் தலைத்தோங்க ஸலாமாவின் அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்பதோடு, இலங்கை வாழ் அனைத்து சமூகத்தினரையும் இதற்காக இணைத்து செயற்படுமாறு தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.










இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் 8 வது வருடாந்த விஞ்ஞான ஆய்வரங்கு பிரயோக விஞ்ஞான பீட கேட்போர் கூடத்தில் 2019-11-07 ஆம் திகதி இடம்பெற்றது. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜீம் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இவ் விஞ்ஞான ஆய்வரங்குக்கு சிறப்புப் பேச்சாளராக பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞான பீட பேராசிரியர் எம்.ஏ.கரீம் அவர்கள் கலந்து சிறப்புரையாற்றினார். விஞ்ஞான ஆய்வரங்கின் இணைப்பாளர் எம்.ஏ.ஏ.எம்.பஹம் அவர்களின் வழிநடத்தலின் கீழ் பிரயோக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.செய்னுடீன் அவர்களது தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 30 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 48, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.